# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"



ஆலிங்கனமூர்த்தி-வழுவூர்

மாலை 3] சார்வரி கார்த்திகை [மணி 3
டிசம்பர், 1960

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு

## பொருளடக்கம்


1. திரிசிரபுரம்பாறையடி காமாட்சியம்மன் கோயில்
2. முருகநாயனுர்
3. கரிவலம்வந்த நல்லூர்
4. சிலப்பதிகாரமும் வைணவமும்
5. நவதிருப்பதிஅநுபவம்
6. சைவத் திருமுறைகளின் அடைவு
7. மலைநாட்டுத்திருப்பதியநுபவம்
8. நாகர் கோயில்
9. திருவையாறு ஒலோகமாதேவிச்சரக் கல்வெட்டு வரலாறு
10. வழுவூர்
11. சிவஞானபோதம்
12. அறநிலையச் சட்டம் (தொடர்ச்சி)


—○—

### சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

அறநிலையங்களும், மற்ற சந்தாதாரர்களும் 1960 அக்டோபர் முதல் தொடங்கும் மூன்ருவது ஆண்டுக் கையொப்பத் தொகை இதுவரை அனுப்பாதிருந்தால் உடனே அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

ஆசிரியர்


# திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்,

நுங்கம்பாக்கம் ஹைரோடு,

சென்னை-6

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலை 3] சார்வரி கார்த்திகை-டிசம்பர் 1960 [மணி 3

# திரிசிரபுரம் பாறையடி காமாட்சியம்மன் கோயில்

முறுவலித் தருளுந்தோறும் மொய்த்தெழு
நிலவு பொங்கி
உறைபடத் துளித்த வில்லே
ஒழுங்குறக் கிடந்தா லென்னப்
பிறைவடஞ் சுமந்த கொங்கைப்
பேரமைத் தோளி மம்மர்க்
குறைதபு காமக்கண்ணி கழலிணை
கருத்துள் வைப்பாம்.

—காஞ்சிப்புராணம்.

தமிழ் நாட்டில் ஒவ்வொரு ஊரிலும் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 'கோயிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்', 'கோயில் விளங்கக்குடி விளங்கும்' 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று'— முதலிய பழமொழிகள் தொன்று தொட்டு வழங்கி வருகின்றன. சிவாலயங்களிலும் விஷ்ணு ஆலயங்களிலும் அம்பிகைக்கும் தாயாருக்கும் உட்கோயில்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இவை தவிர மாரியம்மன், திரௌபதி அம்மன், ரேணுகாதேவி முதலிய சக்தி வழிபாடு நடைபெறும் தனிக் கோயில்களும் பல இடங்களில் அமைக்கப் பெற்றிருக்கின்றன. இறை தத்துவத்தை அன்பே வடிவான தாயாகவும், ஞானவடிவான தந்தையாகவும், அன்பும் அறிவும் செறிந்த அம்மையப்பனாகவும் நம்முன்னோர் தாங்கள் கண்ட அருட்கோலங்களில் திருவுருவங்களை அமைத்து வைத்தனர். உலகில் அன்பின் சிகரமாகவுள்ளது தாயன்பே. 'தாயிற் சிறந்த தயாவான தத்துவனே', 'பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து' என்றுதான் மணிவாசகரும் இறைவனுடைய பெருங்கருணைத் திறத்தை விளக்கியுள்ளார். தமிழ்நாட்டு அம்மன் கோயில்களில் சிறந்தது காஞ்சி காமாட்சியம்மன் திருக்கோயில். காஞ்சிக் கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களின் போதெல்லாம் காமாட்சியம்மன் கோயிலைச்சுற்றி உற்சவ மூர்த்திகள் வலம் வருகின்றன என்றால் காமாட்சியம்மையின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ !

திருச்சிராப்பள்ளியில் ஒரு கிறிஸ்தவக் கல்லூரி வளைவில் பாறையடி காமாட்சியம்மன் கோயில் என்ற ஒன்று இருந்து வந்தது. அதைத் தெரிசிக்கப் போவதற்கு மக்களுக்கு ஒரு குறுகலான பாதையே இருந்தது. சரிவர பூசை வழிபாடும் நடைபெற வசதிகள் இல்லாதிருந்தன. அந்தக் கோயில் இருந்ததும் அதில் வழிபாடு நடைபெற்றதும் மக்களுக்குத் தெரியாமலேயே இருந்தது. வழிபாடும் சரிவர நடைபெற முடியாத சூழ்நிலையில் கோயில் அமைந்திருந்ததாலும், கோயிலின் இருப்பிடமே மக்களுக்குத் தெரியாமல் இருந்ததாலும் கோயிலின் நிலைமை மிகவும் கேவலமாக இருந்தது. பக்கத்திலுள்ள பாறை வைக்கோல் போர் போடவும் வறட்டி தட்டவும் பயன்படுத்தப்பட்டது

அருகாமையில் உள்ள இடம் மலஜலம் கழிக்க உபயோகிக்கப்பட்டது.

1958-ஆம் ஆண்டு இந்த கோயிலை அப்புறப்படுத்தி மக்கள் வந்து வழிபட வசதியுள்ள ஓரிடத்தில் அமைக்க வேண்டுமென்று கருதி கல்லூரி நிர்வாகிகளுடன் கலந்து, ரூ.40,000மும், 2 ஏக்கர் 33 செண்ட் நெல் வயலும் பெற்றுக்கொண்டு பழைய கோயிலையும் பாறையையும் கல்லூரிக்கு விட்டுவிடலாமென்று அரசாங்கம் உத்திரவு செய்தது. அதன்படி புதிதாக அந்த கல்லூரியை யடுத்துச் செல்லும் மேலப்பொலிவார்டு பெருவீதியில் எல்லா மக்களும் நேராகச் சென்று வழிபடும் வகையில் திருக்கோயில் அமைக்கப் பெற்று 23-11-60 காலை 9-30 மணியளவில் ஸ்ரீகாமாட்சியம்மன், ஸ்ரீவிநாயகர், ஸ்ரீதண்டபாணி முதலிய மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பெற்று அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் இனிது நடைபெற்றது.

---

**குமாரவயலூர்:** சுப்பிரமணிய சுவாமி கோயிலில் கந்தசஷ்டி திருவிழா 20-10-60 முதல் 26-10-60 வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசையரங்கும் நடைபெற்றன.

**சிரவணபுரம்:** கௌமார மடாலயத்தில் கந்தர் சஷ்டி விழா 21-10-60 முதல் 25-10-60 வரை நடைபெற்றது. 24-10-60 முதல் 26-10-60 வரை சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசையரங்கும் நடைபெற்றன. 26-10-60-ல் திருமதி தாயம்மாள் அவர்கள் உதவியால் புதிதாக அமைக்கப்பெற்ற தவத்திரு கந்தசாமி சுவாமிகள் உற்சவ மூர்த்திக்கும் ஸ்ரீ வீரவாகு தேவர் உற்சவமூர்த்திக்கும் திருக்குட முழுக்குவிழா நடைபெற்றது.

**சாத்தூர்:** மாரியம்மன் கோயிலில் 26-10-60-ல் சென்னை அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ். அவர்கள் கோயில் திருப்பணியைத் துவக்கிவைத்தார்கள்.

**திருப்புகலூர்:** அக்கினீசுவரர் கோயிலைச்சேர்ந்த இராமநதீசுவரம் இராமநாத சுவாமி கோயிலில் கந்தசஷ்டி திருவிழா 20-10-60 முதல் 26-10-60 வரை நடைபெற்றது. இன்னிசையரங்கும் நடைபெற்றது.

**சங்கரநயினர் கோயில்:** சங்கரநாராயண சுவாமி கோயிலில் 27-10-60-ல் சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன் ஐ. ஏ. எஸ். அவர்கள் பன்னிரு திருமுறைக் கோயிலை நிறுவினர்கள்.

**வத்திராயிருப்பு:** காசிவிசுவநாத சுவாமி கோயிலில் 28-10-60-ல் சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் பன்னிரு திருமுறைக் கோயிலை நிறுவினர்கள்.

**சென்னை:** சென்னமல்லீசுவரர், சென்னகேசவப் பெருமாள் கோயில்-அனுபூதி மண்டபத்தில் 9-11-60, 11-11-60-ல் திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களால் சமயச் சொற்பொழிவாற்றப்பெற்றது. அவ்விழாவிற்கு முறையே சென்னை அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி. ஏ., பி. எல். அவர்களும், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். கணபதியாப் பிள்ளை அவர்களும் தலைமை வகித்துச் சிறப்பித்தார்கள்.



# முருகநாயனார்

முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்

—சுந்தரர்.

பதிகந் திகழ்தரு பஞ்சாக்
கரம்பயி லுவினன்சீர்
மதியஞ் சடையாற் கலர்தொட்
டணிபவன் யான்மகிழ்ந்து
துதியங் கழற்சண்பை நாதற்குத்
தோழன்வன் றொண்டனம்பொன்
அதிகம் பெறும்புக லூர்முரு
கன்னெனு மந்தணனே.

—நம்பியாண்டார்நம்பி.


காவிரியாற்று வளத்தால் பொன்கொழித்தலால் சோழநாட்டிற்குப் பொன்னிநாடு என்ற பெயரும் உண்டு. அந்நாட்டின்கண் சிறந்துவிளங்கும் தலங்களில் தலையாய தொன்று திருப்புகலூர். அவ்வூரின்கண்பல பெரியோர் வதிந்தனர். அவர்களில் ஒருவர் மறையவர் மரபில் வந்த முருகனார் என்பவர்; சிவஞானம் கைவரப் பெற்ற செல்வர்; சிவபெருமான் திருவடியே நினைக்கும் பேரன்பினர்; அப்பெருமானுக்கு மலர் கொய்து மாலை கட்டிச் சாத்தும் தொண்டை மேற்கொண்டொழுகினார்.

விடிவதற்குள் எழுந்து நாட்கடன்களை முடித்து, நீராடி, சோலைகள் வாவிகளில் புகுந்து மலர் கொய்து வருவார். கோட்டுப்பூ,

கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ இவைகளில் சிவ பெருமானுக்குகந்த மலர்களைப் பறித்து வெவ் வேறு கூடைகளில் நிறைப்பர். பின்னர் தனியிடத்தமர்ந்து அப்பூக்களை கோவை, தாமம், மாலை, கண்ணி, பிணையல், தொடை யல் முதலியவைகளாக அமைத்து உரிய காலங்களில் கொண்டுபோய்ச் சிவபெருமா னுக்குச் சாத்துவார். அர்ச்சனை முதலியவை களை முறைப்படி செய்வார். திருவைந்தெழுத் தை வழுவாது ஒதிவருவார். திருஞானசம் பந்தப் பெருமானுக்கு நண்பராகும் பெருமை யும் பெற்றார். இவ்வாறு பலநாள் நியதியாகப் பூசனை புரிந்து வந்த முருகனார் திருஞான சம்பந்தர் திருமணத்தில் புகுந்து இறைவன் திருவடி நீழல் எய்தினர்.

சேக்கிழாரடிகள் பெரியபுராணத்தில் முருகநாயனர் வாலாற்றைப் பதினறு பாடல் களில் கூறியுள்ளனர். அவர் திருப்புகலூ ரைப்பற்றிப் பாடிய பாடல் மிக அழகிது.

தாது சூழுங் குழன்மலையா
டளிர்க்கை சூழுந் திருமேனி
மீது சூழும் புனற்கற்றை
வேணிநம்பர் விரும்புபதி
சோதி சூழு மணிமௌலிச்
சோழர் பொன்னித் திருநாட்டுப்
போது சூழுந் தடஞ்சோலைப்
பொய்கை சூழும் பூம்புகலூர்.



திருப்புகலூர்—
முருகநாயனர் நந்தவணம்

முருக நாயனாரின் உடன் காலத்தவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருநீலநக்கர், சிறுத்தொண்டர் முதலிய வர்கள். அவர்கள் அடியார் திருக்கூட்டத் துடன் முருக நாயனார் மடத்தில் தங்கி உடன் உறைவின் பயன் பெற்றனர். முருகநாயனார் தொண்டைச் சிறப்பித்து ஞானசம்பந்தப் பெருந்தகை இத்தலத் தேவாரப்பதிகத்தில் ஓதியுள்ளார்.

தொண்டர் தண்கயம் மூழ்கித்
துணையலும் சாந்தமும் புகையும்
கொண்டு கொண்டடி பரவிக்
குறிப்பறி முருகன்செய் கோலம்
கண்டு கண்டுகண் குளிரக்
களிபரந் தொளிமல்கு கள்ளார்
வண்டு பண்செயும் புகலூர்
வர்த்தமா னீச்சரத் தாரே.

ஈசன் ஏறமர் கடவுள் இன்னமு
தெந்தையெம் பெருமான்
பூசு மாசில்வெண் ணீற்றர்
பொலிவுடைப் பூம்புக லூரில்
மூசு வண்டறை கொன்றை முருகன்
முப் போதுஞ்செய் முடிமேல்
வாச மாமல ருடையார்
வர்த்தமா னீச்சரத் தாரே.

திருப்புகலூரில் ஒரே கோயிலுக்குள் இரண்டு பாடல்பெற்ற பதிகள் உண்டு. அவை திருப்புக லூர், திருப்புகலூர் வர்த்தமானீச்சரம் என் பவை. இரண்டு மூலத்தானங்களும் ஒன்றன் பக்கம் ஒன்றாய் அமைந்துள்ளன. சம்பந்தர் பாடலிலிருந்து, முருக நாயனார் வர்த்தமானீச் சரத்து இறைவனையே வழிப்பட்டதாகும் என்று தெரிகிறது. மேலும் முருக நாயனாரின் திருவுருவம் அந்த சந்நிதியிலேயே இருக்கின் றது. அந்த உருவப்படம் இக்கட்டுரைத் தலைப் பில் திகழ்கிறது. திருப்புகலூர்க் கோயில் கல் வெட்டொன்றில் 'நம்பி முருகன் திருமடம்' இருந்ததைக் குறிக்கிறது.

முருகநாயனார் என்ற பெயர் ஆறு முகனைக் குறிக்கும். அதற்கேற்ப, மறையவர் ஆறங்கங்களில் வல்லவர், ஆறு தொழிலை யுடையவர், ஆறுவகையான மாலை கட்டினார் என்று அமைந்திருக்கிறது. மேலும் முருக நாயனார் புராணத்தைச் சேக்கிழார் பெருமான் அறுசீர் விருத்தத்தாலேயே பாடியிருப்பது தெய்வத் திருவருட் செயலேயன்றோ!

திருப்புகலூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் நன்னிலம் இருப்புப்பாதை நிலையத்துக்குக் கிழக்கே நாலுகல் தொலைவிலுள்ளது. அப்பர் பெருமான் "புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்" எனப் புகன்று நண்ணரிய சிவா னந்த ஞானவடிவேயாகி அண்ணலார் சேவடிக் கீழ் அமர்ந்ததும் இத்தலத்தேதான். "தம்மையே புகழ்ந்து" என்னும் பதிகம்பாடி சுந்தரர் பொன் பெற்றதும் இவ்விடத்தே தான்.

மன்னுதிருப்புகலூர் வாழ்முருகனரா மறையவர்கோ
வர்த்தமானீச் சரத்தார்
சென்னியினுக்கழக மருமலர்கள் கொய்துதிருமாலை
புகழ்மாலை திகழச்சாத்திக்
கன்னிமதிற் கழுமல நாடுடையநாதன் காதன்
மிகுமணங்காணுங்களிப் பினாலே
இன்னல்கெடவுடன் சேவித்தருளான் மீளாதிலங்கு
பெருமணத்தரனை யெய்தினரே.

—உமாபதிசிவனார்.

---

**சிவகாசி:** சிவன் கோயிலில் திருப்புகழ் சங்கத்தின் 19-வது ஆண்டு நிறைவு விழாவும் கந்தசஷ்டி விழாவும் 20-10-60 முதல் 25-10-60 வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

**பழமுதிர்சோலைமலை:** வெற்றிவேல் முருகனின் "திருக்கைவேல்" அலங்கரிக்கப் பட்ட ஊர்தியில் வைத்து ஊர்வலமாக திரு. பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் 22-10-60-ல் அய்யம்பேட்டை தண்டாயுதபாணி சுவாமி ஆலயத்திற்கு கொண்டுவரப் பெற்றது. இதைத் தொடர்ந்து பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. திரு. ஏ. எஸ். அரங்கனாதாச்சாரி அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு. பி. டி. இராசன், தருமை ஆதீன சமயப் பிரசாரகர் திரு. கோ. சிவஞானம் முதலியவர்கள் சொற்பொழி வாற்றினார்கள்.

# கரிவலம் வந்த நல்லூர்

[திரு. வெ. ரா. மு. இராமலிங்கம், பி.ஏ.]

"தண்ணார் தமிழளிக்கும் தண் பாண்டி நாடு" பல்லாற்றானும் பெருமையுடையது. சந்தனப் பொதிகைச் செந்தமிழ் முனிவனும், சவுந்திர பாண்டியனெனும் பெயர் நாடனும், சங்கப் புலவரும் தழைத்தினிதிருந்த மங்கலப் பாண்டி மணி வள நாட்டில் உள்ள ஆலயங்கள் அனந்தம். அவைகளை வலம் வந்து இன்புற்றது மாந்தர் உள்ளம். திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலிச் சில்லாவிலே, நெல்லையையும் மதுரையையும் இணைக்கும் பாதையிலே கருவை என்றொரு தலம் உண்டு. தனியே அதற்கொரு புகழ் உண்டு. இத்தலத்தில் கோயில் கொண்டுள்ள பற்றிப்புரம் எறித்த பால்வண்ணனைப் பற்றிப்பாடாத புலவரில்லை. எழுதாத நூற்களில்லை.

நெல்லையிலிருந்து கார்மூலம் ஸ்ரீவில்லிபுத்தூர் செல்லும், நெடுஞ்சாலையின், சங்கரநயினார் கோயிலிலிருந்து ஏழு கல் வடக்கே அமைந்துள்ளது, இத் தலம். புகைவண்டி மூலம் செல்லவேண்டின் மதுரை தென்காசி மார்க்கமாகச் செல்லலாம். நிதி வசதியுள்ளவர் நேராக காரில் வேண்டுமானாலும் செல்லலாம். அழகிய சிற்றூராகிய கரிவலம் வந்த நல்லூர் என்னும் திருக்கருவை நாட்டுக்கேற்ற நல்ல ஊர். கள்ளர், மறவர், கனத்ததோர், அகம்படியர், பிள்ளைமார், மறையோர் இன்னோரன்ன குலத்தோர் அகலாது அணுகாது ஒற்றுமையாய் வாழும் இவ்வூரைப் பால்வண்ணன் தன்னிருப்பிடமாகக் கொண்டது சாலப் பொருந்தும். கரிவலம்வந்தநல்லூர் என்ற அழகிய தமிழ்ப்பெயரை முந்தையோர், முறையோடு குருக்கிக் "கருவை" என்றழைத்தனர்.

நெல்லை நாட்டிலே பஞ்சலிங்க ஸ்தலங்கள் உண்டு. அவை சங்கரன்கோயில், கரிவலம் வந்தநல்லூர், தென்மலை, தேவதானம், தாருகாபுரம் என்பன. சிவராத்திரி அன்று இப் பஞ்சலிங்க ஸ்தலங்களை முறையே வழிபடுவோர், வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும் என்று ஆகம நூல்கள் ஓலமிடுகின்றன.

திருக்கருவை பால்வண்ணநாதர் ஆலயம் கிழக்கு நோக்கியுள்ளது. ஊருக்கு அண்மையில் செல்லும்போதே ஆலயத்தின் பிரகாரங்களையும், அழகான கோபுரத்தையும் காணலாம். ஊருக்குள் நுழைந்ததும் கோயிலுக்குக் கிழக்கே ஒரு அழகிய திருக்குளம் நம் கவனத்தை இழுக்கும். சமீப காலத்தில் புதுப்பிக்கப்பட்ட இத் தடாகத்தில் மூழ்கி பிறவிப் பயனைப் போக்கிக்கொள்ளலாம். பிற கோயில்களைப் போலன்றி தொடங்கி முடிக்கப்பெறாத கோபுரம் இங்கில்லை. ஆலயத்திற்குள் நுழையும் முன்னர், கணபதியையும், முருகனையும் வணங்கிவிட்டு உட்சென்றால் அழகிய தோற்றங்களுள்ள கல் சிலைகளைக் காணலாம். பல்லவர்கால கல்வெட்டுக்களில் காண்கின்ற பண்பாட்டைப் பார்க்கலாம். பின்னர் உள்ளே சென்று சயம்புலிங்க மூர்த்தியாயுள்ள பால்வண்ணனை வணங்குவோம். ஆகம விதிப்படி அமைந்துள்ள நாயன்மார்களையும், பெரு வயிற்றோனையும் பக்தர்களைக் காக்கும் வீரசண்முகனையும் வணங்கி, தில்லை நடராசனின் திருநடனம் கண்டு, அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் ஆலயத்துக்கு வருகிறோம். பின்னர் வெளிப் பிரகாரத்தில் உள்ள பராசக்திபீடம், கணபதி, முருகன் இவர்களைத் தொழுது ஒப்பணையம்பாளின் ஒப்பற்ற சன்னதிக்குச் செல்கிறோம். இரண்டு ஆலயங்களும் தனித்தனியே திகழ்கின்றன. பின்னர் இலக்குவன் வழிபட்டு இந்திரசித்தைக் கொன்ற பாவம் நீங்கப் பெற்ற மூர்த்தியையும், நவக்கிரகங்களையும் வழிபட்டு வெளி வருகிறோம். ஆலயம் சிறிதாக இருந்தாலும் பெரும்புகழ் படைத்த மூர்த்தியுள்ள இடம். தல விருட்சமாகிய திருக்களா மரம் ஒன்று இக் கோயிலுக்குள்

உள்ளது. அதன் தொன்மையையும், புகழையும் பற்றிக் கேட்கும்பொழுது பக்தர் உள்ளம் பரவசமடைகின்றது. இவ்வாலயத்தின் புராதன தன்மையைப்பற்றி எண்ணரிய பெரு நூல்கள் இயற்றியுள்ளோர் சான்றோர்.

திருக்கருவைத் தலபுராணம் என்ற ஒரு நூல் 1919-ல் வெளியிடப்பெற்றது. முப்பத்தைந்து சருக்கங்களைக் கொண்ட இந்நூல் தண்டமிழ் இலக்கியங்களில் தலை சிறந்தது. திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருக்கருவைக் கலித்துறையந்தாதி இவைகளின் சொல் நயமும், பொருள் நயமும் கற்றோர் புகழ்ந்தேத்தும் கவினுடையது. நெற்கு கோத்திர விஸ்வநாத தீக்ஷிதர் வடமொழியிற் கூறிய நூலைத் தமிழில் வெளியிட வேண்டு மென்ற எண்ணத்தில் எழுந்த இவ்விலக்கியம் சால்புடையது.

காசி பாதியினும் கருவை பாதியே சிறந்தது என்போர் கற்றறிந்தோர். காசிப்பதியினும் கருவைப் பதியே மேலானது என்பவர் களுமுண்டு.

தென்னாடுடைய சிவனது திருமணத்துக்குத் திருக்கயிலாயத்தில் சகல ஏற்பாடுகளும் நடந்து முடிந்தது. கின்னரரும், கிம்புருடரும், திரண்டு வந்து திருக்கயிலாயத்தில் கூடின தால், உலகின் சமநிலை குலைந்தது. உடனே திரிபுரமெரித்த செஞ்சடைக் கடவுள் சிந்தை கலங்கினர். உமாதேவியின் உள்ளமும் கரைந்தது. திருமண விழாக் காணவந்தவர்களைத் திரும்பச் செல்லும்படி சொல்லுதல் தர்மத்துக்கு முரண்பாடானது என்பதை உணர்ந்த இறைவன் அகத்தியனை அழைத்தார். மூவேழுலகின் கண்ணுள்ள ஜீவராசிகளும், திருமணவிழாவினைக் காணத் திருக்கயிலாயத்தில் கூடினமையால் தென்திசை உயர்ந்து வடதிசை தாழ்ந்தது. உலகநாதனாகிய நான் உலகை சமப்படுத்த வேண்டிய கடமையுடையவனாக இருக்கிறேன். ஆகையால் நீ தென்திசை ஏகின் உலகம் சமநிலை ஆகிவிடும் எனச் செப்பினர். நீடுழிகாலம் தவமிருந்து இத் திருமணக்கோலத்தை காண வேணும் என்று கயிலை வந்தடைந்த அகத்தியர் உள்ளம் கலங்கினர். கண்ணுதல் பெருங் கடவுளே நின்னிடத்தில் நான் என்ன மறுமொழி கூறமுடியும். பல்லூழிகாலம் செய்த தவத்தின் பயனைப் பெறமுடியாத பாவியாகி விடுவேனே என்று என்மனம் சஞ்சலமடைகிறது என்றார். என்றாலும் கருணை வள்ளல் "உன் மனநிலையை நான் அறிவேன்" தக்க காலத்தில் உனக்கு மணக்கோலம் நீயுள்ள இடத்திலேயே காட்டுவோம். தயங்காது தென்திசை ஏகுவாய் என மொழிந்தார். இறைவன் ஆணையைச் சிரமேற்கொண்டு திருக்கயிலை விட்டகன்ற மாமுனிவன்,

அகம்கிழ்ந் தாங்கு நீங்கி
யரியகே தாரம் வேதம்
புகழ்குருக் கேத்தி ரஞ்சீர்க்
காசிசீ சயிலம் போற்றிப்
பகலவ ேறாடு சீதப்
பனிமதிக் கிடையூ ருக
மிகவளர்ந் தோங்கி நின்ற
விந்தமால் வரையிற் போந்தே.

மலிசெருக் குடைய விந்த
மலையினைக் கரத்தி னாலே
நிலனுறச் செய்து வஞ்ச
நிலைபுரி யவுண ராம்வில்
வலனுட னுயர்வா தாவி
யென்பவர் தம்மை மாய்த்தே
யலகினன் னெறியி னிற்கு
மருந்தவ ரிடுக்கண் டீர்த்து.

கோகன்னந் திருக்கா ளத்தி
கோதறுங் காஞ்சி யின்சொற்
பாகுறுந் தமிழ்ச்சீ காழி
பழமலை யருணை தில்லை
வாகுறு புகழ்பெற் றோங்கி
வயங்குபுள் ளிருக்கும் வேளூர்
மேகமீ துலவு பூகம்
விரிபொழிற் றருமா யூரம்.

அருடரு மாரூர் வேதா
ரணியநல் லழகு வாய்ந்த
திருவிடை மருதூர் ஞானந்
திகழ்கும்ப கோண நாளும்
பரவுமா லயனும் போற்றிப்
பணிதிரு வானைக் காநல்
விரைகமழ் கடுக்கை வேணி
மீனவன் மதுரை மூதூர்.

நெடுவழி நடந்த பின்னர் குடமுனியின் உள்ளத்திலே ஒரு ஐயம் தோன்றியது. இறைவன் ஆணையை சிரமேற்கொண்டு உலகை சமன்செய்ய புறப்பட்டேனே. எவ்வாறு தென்றிசைக்கேகிச் சமநிலை உண்டாக்குவது எனத் தெளிவுரக் கேட்டேனில்லையே எனக் கலங்கினார்.

திருக்கருவை நகரின் புவியினுக்கு அணியாய் ஓடும் தென்னமர் கங்கையென்னும் சேமமா நதியில் நீராடி சிவ பூசை முடித்து வெளியேறும் நேரம் ஒரு சிவலிங்கம் தோன்றியதை அகத்தியன் கண்டான். களாமரங்கள் அடர்ந்த அக் கானகத்தில் சுயம்புலிங்கம் தோன்றியதைக் கண்டு வியப்படைந்து இறைவனை அகத்தியன் வணங்கினான் என்பதற்கு கீழ்க்காணும் பாட்டு சான்றாகும்.

அண்ணலே போற்றி முக்க
ணமலனே போற்றி சீத
வெண்ணிலாத் தவழுஞ் செய்ய
வேணியாய் போற்றி துய்ய
தண்ணறுங் களவி னீழ
லுறைதனி முதலே போற்றி
யெண்ணிய வாறு முன்னின்
றெனக்கருள் செய்வாய் போற்றி.

உடனே இறைவன் தோன்றி யாது வரம் வேண்டுமென்று வினவினான். அகத்தியன் தன் மனதில் தோன்றிய சந்தேகத்துக்கு விளக்கம் கேட்டான். சகல புவனங்களிலும் நானே நிறைந்துள்ளேன். உன்னுடைய எல்லையில்லாத தவத்தின் மகிமையினாலே உனது நெஞ்சத்திலே நான் உறைகின்றேன். ஆகையினால் நீயும் நானும் ஒன்றே என்ற உயரிய கோட்பாட்டைக் கீழ்க்காணும் அடிகளால் விளக்குகிறார்.

அப்பொழு திறைவன்றானு
மருந்தவன் றன்னை நோக்கி
யெப்புவ னமுநம் முள்ளே
யிருக்கின்ற தியாமே யன்பா
லொப்பறு நினது நெஞ்சத்
துறைகின்றே மாத லாலே
செப்புதற் கரிய தான
தென்றிசை சமமா மென்றான்.

எல்லையில்லாத இன்பமடைந்த தமிழ் முனிவன் இறைவனை நோக்கி முக்கண்ணனே நான் கயிலை விட்டு அகன்றது முதல் எண்ணரிய ஆலயங்களைக் கண்டு தரிசித்துள்ளேன். அவ்விடங்களில் எல்லாம் இல்லாது இத்தலத்தில் என் மனதில் பேரொளி காட்டிய தன்மையாது என்று வினவ கண்ணுதல் பெருங்கடவுள் இத்திருக்கருவையின் மகிமையைப் பல்லாற்றானும் எடுத்துரைத்தார். இத் தொன்மையான நகரிலே பிறப்பவர்கள் தேவரை ஒப்பர். இவ்வாலயத்தை முறைபோடு வழிபடுபவருக்கு தரிசனம் கொடுப்போம். இங்குள்ள இறைவனை வேதங்கள் புகழ்ந்து ஏத்தும். பாரின் மீது பலகாலம் தவம் செய்து கிடைக்கக்கூடிய பலனை ஒரு நாள் இத்திருக்களா வனத்து ஈசனை வணங்குவோர் பெறுவர்.

இவ்வாறு பல்லாற்றானும் சிறப்புப்பெற்ற திருக்கருவை என்னும் கரிவலம் வந்த நல்லூர் ஆலயம் தக்க வருமானமின்றி வாடி நிற்கின்றது. அண்மையில் நடந்த குடமுழுக்கு காரணமாக ஓரளவுக்கு ஆலயம் காட்சிக்கு இனியதாக விளங்குகிறது. எனினும் இப்புராதன ஆலயத்தைச் செப்பனிட்டுச் சீர்படுத்த சைவ மக்களும் வசதியுள்ள ஆலயங்களும் ஒல்லும் வகையான செல்லும் வாயெல்லாம் செயல்வேண்டும்.

திருக்களாவுடையான் திருவடிகளே சரணம்.

**திருச்செந்தூர் :** சுப்பிரமணிய சுவாமி கோயிலில் கந்தசஷ்டித் திருவிழா 20-10-60 முதல் 27-10-60 வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

**திருத்தணி :** சுப்பிரமணிய சுவாமி கோயிலில் கந்தசஷ்டி விழா 20-10-60 முதல் 25-10-60 வரை நடைபெற்றது. தேவாரம், திருப்புகழ் பாராயணமும் சமயச் சொற்பொழிவும் நடைபெற்றன.

# சிலப்பதிகாரமும் வைணவமும்

[பி. ஸ்ரீ]

சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோ வடிகள் காலத்தில் வைணவமும் ஒரு முக்கிய மான சமயமாக தமிழ்நாட்டில் வழங்கி வந்தது என்பதற்குச் சிலப்பதிகாரத்திலுள்ள 'ஆய்ச்சியர் குரவை' என்ற பகுதி தக்க சான்று தருகின்றது. கண்ணகியைக் கோவலன் மதுரைமா நகரிலே ஆயர்சேரியிலுள்ள ஒரு மனையில் விட்டு அவளுடைய சிலம்புகளில் ஒன்றை விற்கப்போய்க் கொலையுண்டான் என்ற கதை பிரசித்தமானது. அப்போது அந்தச் சேரியிலே தீயநிமித்தங்கள் பலதோன்றினவாம். அதற்குச் சாந்தியாக ஆய்ச்சியர் தங்கள் குலதெய்வமான கண்ணனை வேண்டிக்கொண்டு அவனுடைய பால சரித்திர நாடகங்களில் ஒன்றான குரவைக் கூத்தைக் கண்ணகி காண ஆடுகிறார்கள். இக்கூத்து ஆடும்போது கண்ணபிரானுடைய பரத்வ நிலை, அதாவது உயர்வற உயர்ந்திருக்கும் முழு முதல் நிலை—பிரஸ்தாபிக்கப்படுவதைக் கேட்கிறோம்.

## துயர்நீங்கக் குரவைக்கூத்து

'அவன் ஆடிய குரவைக் கூத்தினை நாமெல்லாம் இப்போது ஆடுவோம்; கறவைகளும் கன்றுகளும் துயர்நீங்குக என்று ஆடுவோம்' என்ற தீர்மானத்திற்கிணங்க, வட்ட வடிவமாகக் கைகோத்துக்கொண்டு நின்று ஆடத் தொடங்குகிறார்கள். பாட்டுப்பாடி ஆடுகிறார்கள். கன்றைக் குறுந்தடியாகக் கொண்டு விளாமரத்தின் கனியை உதிர்த்தான் மாயவன் என்று சொல்லும்படி இரண்டு அசுரர்களை ஒருங்கே கண்ணன் தன் மறக்கருணைக்கு இலக்காக்கினான் அல்லவா? அந்த லீலையைப் பாடுகிறார்கள். 'அவன் வாயிலிருந்துவரும் கொன்றைக் குழலின் இனிய ஒலியை நாமும் கேட்போமோ' என்று பொருள்படப் பாடுகிறார்கள்.

பாற்கடல் கடைந்த அந்தக் கதையையும் கண்ணன் பெருமையாகப் பாடுகிறார்கள்.

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் ஆனுள் வருமேல், அவன்வாயில்
ஆம்பலம் தீங்குழல் கேளாமோ, தோழீ!

என்று கண்ணனுடைய அந்தத் தெய்வீக நிலையையும் அதிசய எளிமையையும் பாடுகிறார்கள்.

'பாற்கடல் கடைந்த அவ்வளவு பெருமை உள்ளவன் ஆயினும் பசுக்கூட்டமுள்ள இந்த இடத்திற்கு வருவானே!' என்கிறாள் ஒருத்தி. 'வந்தால், தோழி! அந்த ஆம்பற் குழலிசையை நாமும் கேட்போமோ? எவ்வளவு வசீகரமாக அந்த மோகன இசையை அவன் வாயினால் ஊதி எழுப்புகிறான்!' என்கிறாள். கண்ணன் குருந்து ஒசித்த கதையையும் குறிப்பிடுகிறாள். கோபியின் துகிலை எடுத்து ஒளித்து வைத்துக்கொண்ட அந்த மாயவன் செயலையும் குறிப்பிடுகிறாள். கோபியர் காதலும் இப்பாட்டில் குறிக்கப்படுவதைக் காண்கிறோம்.

சூரியனைத் தன் சக்கரத்தால் கண்ணன் மறைத்ததும் இங்கே குறிக்கப்படுகிறது. அத்தகைய பெருமை வாய்ந்த கடல்வண்ணனாகிய கண்ணனுக்கு இடப்புறத்திலே நப்பின்னை மலர்களைக் கூந்தலில் சூடிக்கொண்டு நிற்கிறாளாம்,-பால் நிலவுபோன்ற மேனியுள்ள தமையனான பலராமனுக்கு வலப்புறமாக நிற்கிறாளாம். கண்ணனின் வலப்புறத்திலும், அண்ணனின் இடப்புறத்திலும் நப்பின்னை நிற்பது வருணிக்கப்படுகிறது. இந்த நிலைகளில் கண்ணன் பலராமனோடும் நப்பின்னையோடும் ஆடுகிறானும், ஆய்க்குலச் சிறுமியர்கள் வளைகள் ஒலிக்க ஆடுவதும் வர்ணிக்கப்படுகிறது; புகழப்படுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் கண்ணன் கருடவாகனத்தை உடைய கடவுள் என்று போற்றப் பெறுகின்றான்.

புள்ளூர் கடவுளைப்
போற்றுதும், போற்றுதும்

கண்ணன் துவாரகாபுரிவாசி என்ற செய்தியையும் இங்கே கேட்கிறோம். துவாரகையை 'துவராபதி' என்றும் 'துவரை' என்றும் கூறுவதுண்டு. இங்கே செழுந் துவரை என்று குறிக்கப்படுவதைக் காண்கிறோம்.

## கண்ணன் புகழ்

சர்வ சக்தியுள்ள புருஷோத்தம நிலையையும், கண்ணனுடைய குழந்தைப் பருவத்தையும் ஒருங்கே ஞாபகப்படுத்துகிறது 'ஆய்ச்சியர் குரவை'.

> வடவரையை மத்தாக்கி,
> வாசுகியை நாணாக்கி,
> கடல்வண்ணன்! பண்(டு) ஒருநாள்
> கடல்வயிறு கலக்கினையே:
> கலக்கியகை யசோதையார்
> கடகயிற்றால் கட்டுண்கை!
> மலக்கமல உந்தியாய்
> மாயமோ மருட்கைத்தே!

என்ற பாட்டைப் பாருங்கள்.

கடல் கடைந்த, சர்வசக்திக்கு அறிகுறியான, அந்தக் கைதானே யசோதையின் கடைகயிற்றால் கண்டுண்டகை! அது என்ன மாயமோ? எங்களால் புரிந்துகொள்ளவே முடியவில்லையே! இந்த மனநிலையுடன், கண்ணபிரானே அற்றுத்தீர்ந்த பரம்பொருள் என்ற கொள்கையையும் இங்கே காண்கிறோம். 'கண்ணன் அல்லால் தெய்வம் இல்லை' என்ற ஆழ்வார் கொள்கைக்கு வித்து இங்கே காணப்படுகிறதல்லவா?

## பரம்பொருளின் எளிமை

திருமாலின் பரம்பொருள் நிலை எப்படி உணர்வதற்கு அரியதோ, அப்படியே எளிமை சௌலப்ய நிலையும் எவராலும் உணர்வதற்கு அரியதே என்பது பொய்கை ஆழ்வாரின் கொள்கை. இக்கொள்கையை 'அறு பொருள் இவன்' என்று தொடங்கும் ஆய்ச்சியர் குரவைப் பாட்டிலும் காண்கிறோம்.

> 'அறுபொருள்' இவன்என்றே
> அமரர்கணம் தொழுதேத்த,
> உறுபசிஒன்(று) இன்றியே
> உலகடைய உண்டனையே;
> உண்டவாய் களவினால்
> உறிவெண்ணெய் உண்ட வாய்!
> வண்துழாய் மாலையாய்!
> மாயமோ? மருட்கைத்தே!

அற்றுத்தீர்ந்த பரம்பொருள் இவன் என்று திருமாலைத் தேவர்கள் தொழுது ஏத்தினார்களாம். பசியில்லாமலே உலகம் அனைத்தையும் அன்று பிரளய காலத்தில் உண்டானும் அத்திருமால். நாம் பசிதீர உண்ணுகிறோம். இது தன்னலச்செயல். திருமால் உலகம் அனைத்தையும் உண்டான் என்றால், எல்லாவற்றையும் வயிற்றிலே வைத்துப் பாதுகாத்தருளினான் என்பதுதானே அதற்குப் பொருள். இந்தச் செயலே திருமால் பரம்பொருள் என்பதற்குத் தக்க சான்றாகும். இப்படிப் போற்றும்போதே, சர்வசக்தியின் மறுபக்கமான அதிசய எளிமையும் நினைவிற்கு வருகிறது. ஆம்; பரத்துவமும் சௌலப்யமும் (சுலபனாக இருக்கும் நிலையும்) ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள்.

சர்வசக்தியின் அதிசய எளிமைதான் 'உண்டவாய் களவினால் உறிவெண்ணெய் உண்டவாய்' என்ற வாக்கிலே வெளிப்படுகிறது. இது என்ன மாயமோ? ஆச்சரியமாகவும் மயக்கமாகவும் இருக்கிறதே!' என்று முடிகிறது பாட்டு. இப்பாட்டில் கண்ணன்,

> வண்துழாய் மாலையாய்!

என்று அழைக்கப் பெறுகின்றான். உலகம் அனைத்தையும் ஆளுகிறான் இறையவன் என்பதற்கு அறிகுறியான கிரீடத்தின்மீதும் 'முடிமாலையாக' அணிசெய்கிறது திருத்துழாய் மாலை என்பர்.

'வடவரையை மத்தாக்கி' என்று தொடங்கும் பாட்டிலும், 'அறுபொருள் இவன்' என்று தொடங்கும் பாட்டிலும் கண்ணன் என்ற தெய்வக் குழந்தையின் விளையாட்டு சர்வசக்தியின் அதிசய எளிமைக்குச் சான்றாவதைக் காண்கிறோம். அடுத்த பாட்டில் வயது முதிர்ந்த நிலையில் கண்ணனுடைய சீலமும் முதிர்ந்து எளிமைக்குச் சான்றுதருவதைக் காண்கிறோம். இப்பாட்டு வருமாறு:

> திரண்டுஅமரர் தொழுதேத்தும்
> திருமால்!நின் செங்கமல
> இரண்டடியால் மூவுலகும்
> இருள்தீர நடந்தனையே;

நடந்தஅடி பஞ்சவர்க்குத்
தூதாக நடந்தஅடி!
மடங்கலாய்! மா(று)அட்டாய்!
மாயமோ? மருட்கைத்தே.

மூன்று உலகங்கள் என்று உலகங்களைப் பிரித்துப் பேசுவதுண்டு. மேல் உலகம், கீழ் உலகம், மத்திய உலகமாகிய நம் உலகம் என்பவை இம்மூவுலகங்கள். இந்த உலகங்களெல்லாம் இருள்தீர்ந்து வாழும்படி நடந்தனவாம் இறைவன் திருவடிகள். இது உலகளந்த கதை. கடல்கடைந்த கதைபோல் மிகவும் பிரசித்தமான கதைதான்; திருமாலின் பரத்வநிலையை வெளியிடும் கதைதான். இப்படி உலகளந்த திருவடிகளே கிருஷ்ணாவதாரத்தில் பஞ்சபாண்டவர்களுக்குத் தூதாக நடந்தனவாம்; நடந்து சர்வசக்தியின் ஆச்சரிய எளிமையைப் புலப்படுத்தினவாம். இப்பாட்டில் பகவானுடைய நரசிங்க அவதாரமும் குறிக்கப்படுகின்றது.

## இராமாவதாரத்திலே

இப்படியெல்லாம் கண்ணனுடைய பாலலீலைகளையும் முதிர்ந்த எளிமை நிலையையும் கூறிவரும் ஆய்ச்சியர் குரவையில் இராமாவதாரமும் பிரஸ்தாபிக்கப்படுகிறது. மூவுலகும் ஈரடியால் இருள்தீர நடந்தது வாமனாவதாரத்திலே. இதற்கு அடுத்த அவதாரம் இராமாவதாரம். எனவே ஆய்ச்சியர் குரவையில், மூவுலகும் இருள்தீர நடந்த திருவடிகளே இராமாவதாரத்தில் காடுகளை மிதித்துச் சிவந்துபோயின என்ற செய்தியையும் கேட்கிறோம். இங்கே இராமன் என்ற வீரமூர்த்தியின் புகழ் பின்வருமாறு பிரஸ்தாபிக்கப்படுகிறது:

மூவுலகும் ஈரடியால்
முறைநிறம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத்
தம்பியொடும் கான்போந்து,
சோஅரணும் போர்மடியத்
தொல்இலங்கைக் கட்டழித்த
சேவகன்சீர் கேளாத
செவிஎன்ன செவியே!
திருமால்சீர் கேளாத
செவிஎன்ன செவியே!

பகவானுடைய பெருமையும் எளிமையும் ஒருங்கே தீமையைப் போக்கிச் சாதுக்களை இரட்சிக்கின்றனவாம். கண்ணனுடைய எளிமைபோல் இராமனுடைய எளிமையும் காடுபோய்த் தீமையை அழித்துச் சாதுக்களைக் காப்பாற்றியது என்ற செய்தியை இப்பாட்டில் கேட்கிறோம். இராமன் வேறு கண்ணன் வேறு என்பதில்லை; இராமாவதாரம் செய்த பெருமானே கண்ணனாகவும் தோன்றினான் என்பது கருத்து. இராமாவதாரத்தின் பெருமையும் எளிமையும் கிருஷ்ணாவதாரத்தில் பரிபூர்ணநிலையை அடைகின்றன என்பர். சிலப்பதிகாரக் காலத்திலேயே, கிருஷ்ணபக்திக்கு அடுத்தபடியாக இராமபக்தியும் தமிழ்மக்கள் உள்ளத்தை வசீகரித்திருந்தது எனலாம். இராமனைப் பிரிந்த அயோத்திபட்டபாட்டையும் இளங்கோவடிகள் நினைவூட்டுவதைக் காண்கிறோம்.

இளங்கோவடிகளின் காலத்தில், இராமபக்தி மட்டுமல்ல வடமொழியின் ஆதிகாவியமான வால்மீகி இராமாயணமும் தமிழ்மக்கள் உள்ளத்தை வசீகரித்திருந்தது என்று கருதுவது தவறாகாது. சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களை உடையது—புகார்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்று. தமிழகத்தின் முடியுடை மூவேந்தர்களான சோழன் பாண்டியன் சேரன் ஆகியவர்களின் மூன்று தலைநகரங்களின் வழியாகப் பெருகிவரும் ஞானகங்கை சிலப்பதிகாரம் என்று சொல்லலாம். இத்தகைய காண்ட அமைப்பு முறை வால்மீகி இராமாயணத்தின் காண்ட அமைப்பு முறையை நினைவூட்டுகிறது. வால்மீகத்தில் அயோத்தியா காண்டம், கிஷ்கிந்தா காண்டம் என்ற காண்டங்களைக் காண்கின்றோம். சுந்தரகாண்டம் உண்மையில் இலங்கா காண்டம்தான். யுத்தகாண்டமும் இலங்கா கண்டம்தானே. பாலகாண்ட நிகழ்ச்சிகள் அயோத்தியில் நிகழ்வனவே. ஆரணியகாண்ட நிகழ்ச்சிகள் காட்டில் நிகழ்கின்றன. எனவே இராமாயணத்தை அயோத்தியிலும், காட்டிலும், கிஷ்கிந்தையிலும், இலங்கையிலும் பெருகி ஓடும் ஞானகங்கையாகக் குறிப்பிடலாம்.

## மறுபடியும் கிருஷ்ணாவதாரம்

ஆய்ச்சியர் குரவை மறுமடியும் ஆய்ச்சியருக்கு உகப்பான கிருஷ்ணாவதாரத்திலேயே வந்து முற்றுப்பெறுகின்றது.

பெரியவனை மாயவனை
பேருலகம் எல்லாம்
விரிகமல உந்தியுடை
விண்ணவனை, கண்ணும்
திருவடியும், கையும்
திருவாயும், செய்ய
கரியவனைக் காணாத
கண்என்ன கண்ணே!
கண்இமைத்துக் காண்பார்தம்
கண்என்ன கண்ணே!

என்ற பாட்டைப் பாருங்கள். இராமபக்தியைக் காட்டிலும் கிருஷ்ணபக்தியே ஆய்ச்சியர் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது என்பதற்கு இப்பாட்டே ஒரு சான்றாகும்.

குரவைக் கூத்தின் முடிவிலேதான் கிருஷ்ணபக்தி எவ்வளவு வசீகரமாக வெளிப்படுகிறது!

மடந்தாழும் நெஞ்சத்துக்
கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால்
நாற்றிசையும் போற்றத்
தொடர்ந்(து)ஆ ரணம்முழங்கப்
பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத
நாவென்ன நாவே!
நாராயணா!' என்னா
நாவென்ன நாவே!

என்ற பாட்டைப் பாருங்கள். நாராயண நாமம் திருமங்கை ஆழ்வாரை எப்படி உருகச் செய்தது என்பதை 'வாடினேன் வாடி' என்று தொடங்கும் பாசுரங்களில் காண்கிறோம். அத்தகைய மன உருக்கத்தை இங்கும் காண்கிறோமல்லவா?

ஆய்ச்சியர் குரவைப் பாடல்களும்' ஆழ்வார் பாடல்களைப்போல் லளிதமாகவும் உருக்கமாகவும் அமைந்திருப்பதைக் காண்கிறோம். காடுகளிலும் காட்டுச் சார்பான இடங்களிலும் வசித்த தமிழர்கள் திருமாலை வழிபட்டு வந்ததாகக் கூறியுள்ளார் தொல்காப்பியனார். இதனால் தமிழ்நாட்டில் வழங்கி வந்த ஆதிசமயங்களில் வைணவமும் ஒன்று என்பது உறுதி. சிலப்பதிகார ஆசிரியரின் ஆய்ச்சியர் குரவை மதுரைமாநகரில் ஆய்ச்சியர்களிடையே நிகழ்வதைக் காண்கிறோம். இந்தப் பாடல்களிலிருந்து, பொதுவாகத் திருமாலையும், சிறப்பாகக் கண்ணனையும் குறித்த சர்வஜனரஞ்சகமான பக்திப் பாடல்கள், சிலப்பதிகார காலத்துக்கும் முன்னமே நம் தமிழகத்தில் வழங்கி வந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம்.

## விஷ்ணுஸ்தலங்கள்

திருமாலை வழிபட்டவர்கள் காடுகளிலும் காடு சார்ந்த இடங்களிலும் உள்ளவர்கள் என்று தொல்காப்பியர் கூறுவதால், ஆதியில் விஷ்ணு கோயில்கள் காட்டுப் பக்கங்களில் அமைந்திருக்கவேண்டும். அப்படி அமைந்திருந்த அதிபுராதன ஸ்தலங்கள் திருவரங்கம், திருப்பதி என்ற திருமலை, திருமாலிருஞ்சோலை முதலியன. காஞ்சிபுரத்திலும் ஒரு பழைய விஷ்ணுஸ்தலம் உண்டு. இவையெல்லாம் வைணவத்தின் அதிமுக்கியமான வளர்ப்புப் பண்ணைகளாக உதவியிருக்க வேண்டும்.

தேனோங்கு சோலைத்
திருவேங் கடம்என்றும்,
வானோங்கு சோலை
மலையென்றும்,—தானோங்கு
தென்அரங்கம் என்றும்,
திருவத்தி யூர்என்றும்
சொன்னவர்க்கும் உண்டோ துயர்.

என்ற பாட்டில் வைணவத்தின் நாலுபழைய வளர்ப்புப் பண்ணைகள் குறிக்கப் பெற்றுள்ளன.

'தேனோங்கு சோலையைத் திருவேங்கடத்தின் மலையின் சிறப்பாகக் கூறுகிறார் இப்புலவர். சோலைமலையின் சிறப்போ வானோங்கு சோலை என்கிறார். திருவரங்கத்தையோ,

தான்ஓங்கு தென்னரங்கம்

என்று சிறப்பித்துப் பேசுகிறார். 'திருவரங்கம்' என்ற சிறப்பே போதும். இதற்கு வேறு சிறப்பும் வேண்டுமோ என்பது குறிப்பு. இந்த வெண்பாவில் திருவத்தியூர் என்பது காஞ்சிபுரத்திலுள்ள பழைய விஷ்ணு ஸ்தலத்தைக் குறிப்பிடுவதாகும்,

## சிலப்பதிகாரத்தில் ஸ்ரீரங்கம்

தனிப்பெரும் சிறப்பு வாய்ந்த திருவரங்கத்தையும் தேனோங்கு சோலைத் திருப்பதியையும் சிலப்பதிகாரம் பிரஸ்தாபிப்பதைக் காண்கிறோம். இளங்கோவடிகளின் காலத்

திலே திருவரங்கம் 'பெயர் பெற்ற தலமாக வும் பலரும் தொழுததலமாகவும் திகழ்ந் திருக்க வேண்டும் என்பது திண்ணம்.

நீலமேகம், நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந்(து) அகலாது படிந்தது போல,
ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறல்—
பாயற் பள்ளிப் பலர்தொழு(து) ஏத்த,
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருஅமர் மார்பன் கிடந்தவண்ணமும்

என்று சிலப்பதிகாரத்திலே ஸ்ரீரங்கநாத னுடைய சயனத்திருக்கோலம் சித்தரிக்கப் படுகிறது.

பொன்மலைமீது படிந்து கிடக்கும் நீல மேகம்போலக் காணப்படுகிறான் பெருமான். ஆயிரம் பண மகுடங்களோடு கூடிய பாம் பணைப் பள்ளிமீது யோகநித்திரை செய்கிறு ன்- அலைகொழிக்கும் காவிரி ஆற்றுக் கிடையே இந்தத் திருக்கோலம் காணப்படு கிறது என்பது இளங்கோவடிகளின் வாக்கு, மேற்கு மலைப்பக்கத்திலுள்ள மாங்காடு என்ற ஊரிலிருந்து வரும் யாத்திரிகனது கூற்றுகக் கூறியுள்ளார் இளங்கோவடிகள், 'குடமலை மாங்காட்டு உள்ளேன்' என்று யாத்திரிகன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளுகிறான். இதனால் தென்னாட்டின் பல பகுதிகளிலிருந்தும் யாத்திரிகர்கள் திருவரங் கத்திற்கு வந்த வண்ணமா யிருந்தார்கள் என்று ஊகிக்கலாம். இளங்கோவடிகள் தம் காலத்து பாகவதர்களுடைய பக்திக் கண் ணைக்கொண்டே அவர்களுடைய பூலோக வைகுண்டத்தைப் பார்த்திருக்க வேண்டும்.

சேர முனிவ ரான இப்பெரியாரின் இந்தச் செய்யுட் பகுதியை இவர் பரம்பரை யிலே தோன்றிய குலசேகர ஆழ்வார் பாடி யிருக்கும் பின்வரும் பாசுரத்துடன் ஒப்பிட் டுப் பாருங்கள்.

இருள்இரியச் சுடர்மணிகள்
இமைக்கும் நெற்றி
இனத்துத்தி அணிபணமா
யிரங்கள் ஆர்ந்த
அரவரசப் பெருஞ்சோதி
அனந்தன் என்னும்
அணிவிளக்கும் உயர்வெள்ளை
அணையை மேவித்,
திருவரங்கப் பெருநகருள்
தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையால் அடிவருடப்
பள்ளி கொள்ளும்
கருமணியைக், கோமளத்தைக்,
கண்டு கொண்(டு)என்
கண்ணிணைகள் என்றுகொலோ
களிக்கும் நாளே?'

காவிரி வெள்ளம்போல் பெருகி வரு கிறது குலசேகரரின் பக்திப் பெருக்கு. இதன் உற்பத்தி ஸ்தானம் 'நீலமேகம்' என்று தொடங்கும் சிலப்பதிகாரச் செய்யுட் பகுதி தானு? ஏன்? சிலப்பதிகார காலத்துக்கும் முன்னே வெகுதூரத்திலிருக்கக் கூடும் இந்த உற்பத்திஸ்தானம் என்று ஊகிப்பதும் மிகை யாகாது.

## சிலப்பதிகாரத்தில் திருப்பதி

திருவரங்கத்திற்கு அடுத்தபடியாக ஆழ் வார்களால் மதிக்கப் பெறுவது திருமலை என்ற திருவேங்கடம்தான். அங்கே சயனத் திருக்கோலம். இங்கே நின்ற திருக்கோலம். இந்தக் கோலத்தையும் சிலப்பதிகார வாயி லாக நோக்குவோம்.

வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலயத்(து) உச்சி மீமிசை,
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங்(கு) ஓடிய இடைநிலைத் தானத்து,
மின்னுக்கொடி உடுத்து விளங்குவில் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்,
பகைஅணங்கு, ஆழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி
நலம்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு,
பொலம்பூ ஆடையில் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்

'திரண்டருவி பாயும் திருமலை' என்று ஆழ்வார் பாடியிருக்கும் திருப்பதியை இளங் கோவடிகள் எவ்வளவு ஈடுபாட்டுடன்—பாக வதர்களின் பக்திக் கண்களை இசைத்துக் கொண்டு நோக்குகிறார் பாருங்கள். மேற்கு மலைப்பக்கத்திலிருந்துவரும் யாத்திரிகன் கூற்றே இதுவும். திருவரங்கத்தில் பள்ளி கொண்டிருக்கும் நீலமேகமே திருப்பதியில் மின்னற்கொடியை ஆடையாகத் தரித்து, வில்லும் சங்கு சக்கரங்களும் ஏந்தி நின்ற

வண்ணமாய்க் காட்சி வழங்குகிறது என்பது குறிப்பு.

திருமாலிருஞ்சோலை என்ற அழகர் மலையைக் குறித்த பிரஸ்தாபமும் சிலப்பதிகாரத்தில் வருகிறது. இதுவும் குடமலை யாத்திரிகன் கூற்றாகவே வருகிறது. திருமாலிருஞ்சோலையைத் திருமால் குன்றம் என்று குறிப்பிடுகிறார் இளங்கோவடிகள். இங்கே மூன்று பொய்கைகளையும் குறிப்பிடுகிறார். இந்த வருணனையில் கற்பனை கரைகடந்து பொங்குவதைக் காணலாம். சோலைமலை அழகரை— 'மலைமிசை நின்றோன்' என்று குறிப்பிடுகிறார். இப்பெருமானின் திருவடிகளைப் 'பொன்தாமரைத்தாள்' என்கிறார். சிலம்பாறும் இங்கே பிரஸ்தாபிக்கப்படுகிறது.

சிலப்பதிகாரக் காலத்திலே வைணவம் தமிழகத்தில் ஆழ்ந்து வேரூன்றிப்பொது மக்களிடையே பரவி யிருப்பதைக் காண்கிறோம். திருவரங்கமும் திருவேங்கடமும் அழகர்மலையும் வைணவத்தின் மூன்று முக்கிய வளர்ப்புப் பண்ணைகளாக திகழ்வதையும் காண்கிறோம்.

---

**திருப்போரூர்** முருகன் செந்தமிழ்க் கழகத்தின் இரண்டாவது ஆண்டு விழா திருப்போரூர் முருகன் ஆலயத்தில் 4—11—60ல் நடைபெற்றது. திரு. பூ. ஆலால சுந்தரஞ்செட்டியார் எம். ஏ. அவர்கள் தலைமைவகித்தார்கள். வித்துவான்கள் பி. சி. லிங்கம், முத்துக்கண்ணப்பர்,பி. ஏ.எம். எல். சி., "வேல்", "முருகன்பெருமை" என்னும் பொருள்கள் பற்றி சொற்பெருக்காற்றினார்கள். வித்துவான் அம்பை இரா. சங்கரன் நன்றிகூற விழா முடிவுற்றது.

✦ ✦ ✦ ✦

**பெரும்புலியூர்:** வியாக்ரபுரீசுவரர் கோயிலில் மண்டலாபிஷேகம் 1—11—60ல் சிறப்பாக நடைபெற்றது. சொற்பொழிவும் இன்னிசையரங்கும் நடைபெற்றன.

✦ ✦ ✦ ✦

**திருப்புவனவாயில்:** பழம்பதிநாதர் ஆலயத் திருப்பணிக்கு சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ். அவர்கள் 6-11-60-ல் அடிக்கல் நாட்டினார்கள்.

✦ ✦ ✦ ✦

**திருப்பணிப்பேட்டை:** சுந்தரேசுவரர் கோயிலில் உள்ள வள்ளிதேவ முருகக்கடவுளுக்கு 20-10-60 முதல் 26-10-60 வரையில் கந்தசஷ்டி விழாவும் கடைசியாகத் திருக்கல்யாண விழாவும் நடைபெற்றன.

✦ ✦ ✦ ✦

**சோளிங்கபுரம்:** நரசிம்ம சுவாமி தேவஸ்தானத்தின் பக்தோசித சுவாமிக்கும் அமிர்தவல்லித் தாயாருக்கும் 10-11-66-ல் திருக்கல்யாணம் சிறப்பாக நடைபெற்றது.

✦ ✦ ✦ ✦

**திருவண்ணாமலை:** அருணாலேசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 20-11-60 முதல் 5-12-60 வரை சிறப்பாக நடைபெறும்.

✦ ✦ ✦ ✦

**பரதூர்:** வரதராஜப் பெருமாள் கோயில் திருப்பணி திரு. ஜி. வாகீசம் பிள்ளை எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் கால்கோல் விழா நடத்தப்பட்டு கட்டிடம் சுமார் 7 அடி வரை எழுப்பப்பட்டிருந்தது. அதன் அருகால் நிறுவு விழா 31-10-60-ல் கடலூர் அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் திரு. ஆர். ஏ. வரதராஜன் அவர்களால் துவக்கிவைக்கப்பெற்றது.

✦ ✦ ✦ ✦

**சிக்கல்:** சிங்காரவேலவர் கந்தசஷ்டி திருவிழா 19-10-60 முதல் 29-10-60 வரை நடைபெற்றது. சொற்பொழிவுகளும் இன்னிசையரங்கும் நடைபெற்றன.

# நவதிருப்பதி அநுபவம்

திரு. K. பட்சிராஜன், B.A., B.L.

"கூவுதல் வருதல் செய்திடாய்...ஓர்வாரே"

ஒலிக்கின்ற கடலைக் கடைந்தவனை பெருமானை ஒன்று என்னை அங்கே கூவிக் கொள்ள வேணும் அல்லது இங்கே வந்தருள வேணும் இரண்டிலொன்று செய்யவேணும் என்று பிரார்த்தித்து அப்பிரார்த்தனை செய்த தனாலே க்ருத் க்ருதயராய்த் தன்னை மதித்து இந்நிலத்தே பொருந்தியவரும், பரந்த நீர்ப் பரப்பையுடைய தாம்பரபர்ணிக் கரையிலுள்ள திருவழுதி வளநாட்டையுடைய ஆழ்வார் திரு நாவில் பயின்றருளிய பாடல்களாயிரத்துள் இப்பதிகம் வல்லவராவார் இடையறாது தம் மனத்தே உலகளந்த பெருமானுடைய திரு வடியை நினைக்கப்பெறுவர்கள்.

இப்பாடலில் பதிகப்பயன் கூறுகிறார்.

'கூவுதல் வருதல் செய்திடாய்'

என்னை உன்பால் கூவிக்கொள்ளவே ணும் 'முகப்பே கூவிப் பணிகொள்ளே' என்று முன்பே வேண்டினேன் அது செய்தா யல்லை. அன்றி இங்காவது எழுந்துவந்து ஸேவை ஸாதிக்கவேணும். அங்குத்தை யிருப்பையாம் காணவேணும். முன்னையது முறை கேடாகும். பின்னையது முறையாகும். உடையவனை நீ உடைமையை வந்து பற்றிச் செல்லல்தானே முறை. எப்படிச் செய்ய வேண்டுமென்றாலும் அது உன் திருவுள்ளம். எப்படியும் அடியேன் உன்னை சேவிக்க வேணும்.

குரைகடல் கடைந்தவன் தன்னை

பாற்கடலைக் கடைந்தவனே. தன்னோடு எதிரம்பு கோப்பாருக்கும், ஈச்வரோஹம் என்றிருப்பார்க்கும் நன்றியில்லவருக்கும் உப கரிக்கப் பாற்கடலைக் கடைந்தவனே, அப்படிப் பட்டவன்ன நீ என் பக்கல் இரங்கமாட் டாயா.

மேவி நன்கமர்ந்த

இப்படி அவனைக் கிட்டி தன் பிரார்த் தனையை ஸமர்ப்பித்து. நாம் செய்யவேண் டியதைச் செய்துவிட்டோம். இனி அருளு வதும் அருளாததும் அவன் பொறுப்பு என்று நிர்ப்பரராய்த் தரையிலே கால் பாவின.

வியன்புனல் பொருநல்

பரந்து பெருகும் தாம்ரபர்ணி நீரோடு ஞானத்தை அதிலும் தெளிந்த ஞானத்தை யூட்டும் பொருநல்.

நாவியல் பாடல்

ஆழ்வார் நாவில் தவழ்ந்த பாடல். அவர் நாமுதல் வந்து புகுந்து பத்தர்க்குச் சொல் லப்பட்ட பாடல்கள்.

ஓவுதலின்றி ஒழிவின்றி காலமெலாம்.

உலகம் மூன்றளந்தான் அடியிணை; திரி விக்ரமனுடைய திருவடிகளை அவனை த்யா னித்தாலே கிடைக்கும் பலன் "பல்லூழி நின் பாத பங்கயமே மருவித்தொழும் மனமே தந்தாய்" என்பதல்லவா. மேலும் அத்திரு வடிகள்தாமே தருதி நோக்காது எல்லோரு டைய சிரசையும் அலங்கரித்தது.

அந்தத் திருவடி ஸ்மரணை என்றும் உள் ளத்திலே ஓடப்பெறுவர்கள் இப்பதிகம் கற்ற வர்கள் என்று பயன் கூறி முடிக்கிறார் ஆழ் வார். ஸௌபாதிக பந்துக்களை விட்டு நிருபா திக பந்துவான பெருமானைப்பற்ற வேணு மென்ற மன நிலையிலே எழுந்தது இப்பதிகம். இதில் ஆழ்வாரின் பலவித மனோரதங்களையும் காண்கிறோம். இதைக் கற்பாற்கும் இந்த அவா எழும் என்பது ஆழ்வாரின் துணிபு. ஆசியும் கூட.

இத்தலத்தைப் பற்றிய வரலாற்றிலே வந்த செய்தியை நாம் நினைப்பூட்டிக்கொண் டோமானால் இப்பதிகத்தின் இறுதிச் செய்யு ளான 'கொடுவினைப் படைகள்' என்ற பாசுரத் தின் ரஸம் இன்னும் அதிகமாகும். கமலை யோடு ரமிக்க ரமணீயமான இடம் தேடின பகவான் இந்தத் தலத்தைத்தேர்ந்து ஸ்ரீதேவி

யோடு களித்திருக்க மண்மாது பொருமை கொண்டு, சிறிப்பாதலம் புக்காள். அவளைத் தேடிப்பிடித்து அவளைத் தேற்றி பகவான் இலக்ஷ்மியோடு சினேகம்செய்துவைத்து இரு வரோடும் அப் புளிங்குடித் தலத்திலே தங்கி னன் என்பது தலபுராணத்தில் கண்ட வர லாறு. பூமிதேவியைத் தேடி அலைந்த சிரமம் தீர அவன் சயனிக்க பகவான் திருவடிகளைத் தேவியர் இருவரும் பிடித்தனர். அப்படி வடிவிணையில்லா மலர்மகளும் மற்றை நில மகளும் பிடிக்கும் திருவடியைத் தானும் பிடிக்கவேண்டினர் ஆழ்வார். கோபித்த நாயகியைச் சாந்தம் செய்து அவள் பிடிக்க திருவடியை நீட்டியவன் நீ. இந்த தலத்தில் உன் பெருமை அது. அப்படிப்பட்ட நாக ரிகம் உள்ள நீ எனக்கும் அப்பேறளிக்க வேண்டும். நான் கோபித்த நாயகியல்ல. நான் நாயகியாக பக்குவமாவதில் ஆத்திரம் காட்டி வந்து தங்கினாய் நீ. அப்படிப்பட்ட எனக்கு உன்னைத் தேடிவந்த எனக்கு கோபித்துச் செல்லும் நாயகிக்குக் கிட்டும் பேறுகிட்ட வேண்டாமா என்பது த்வனி.

ஸ்ரீவைகுண்டம், ஸ்ரீவரகுணமங்கை, திருப்புளிங்குடி மூன்று தலங்களும் இறை வனது போக்ய பாகத்வரையை விளக்கும் தலங்கள் என்பது முன்பே கண்டோம். எனவே இப்பதிகம் முழுவதும் பகவானது ஒரு மனநிலையைப் பற்றியெழுந்தது என்பது விளங்கும்.

இப்பதிகத்தில் சேதனனுக்கும் ஈச்வர னுக்கும் இடையே யுள்ள நவவித சம்பந் தங்களில் உடையான் உடைமை, ஆதார ஆதேயம், போக்தா போக்யம் என்ற மூன்றும் கூறப்படுவதாகச் சில மஹனீ யர்களது யோஜனை. இம்மூன்று சம் பந்தங்களும் குலசேகரரது "நின்னையே தான் வேண்டி," "வெங்கட்டிண் களிறடர்த் தாய்," "எத்தனையும் வான்மறந்த" என்ற மூன்றுபாடல்களும் கூறுகின்றன. அந்த பாவம் இப்பதிகத்தும் காண்கிறோம் என்பது அபிப்ராயம். இனி அம்மூன்று நிலைகளை யும் பார்ப்போம்.

## 1. ஸ்வாமி-ஸ்வம்

உடையான் உடைமை

உலகனைத்தும் இறைவன் அதீனமாத லின் அவன் நம்மை உடையவன். நாம் அவன் உடைமைப் பொருள், உடைமைப் பொருள் உடையவனை அடைவதுதான் நியதி. அவ்வுடைமையை உடையான்வந்து கைக்கொள்வது முறை. அந்த உடையான் உடைமையை உபேக்ஷித்தால் உடைமைதான் சேர்விடம் கிடைக்கவில்லையே என்று ஏங்கி உடையவன் தன்னைக் கைக்கொள்ள வேண்டும் என்ற சிந்தையிலேயே இயங்குகின் றது. பரம்பொருளை வேண்டிச் செல்வத்தை ஒருவன் உதாசீனம் செய்கிறான். ஆனால் செல்வமோ தனக்கு உடையவன் அவன் என் பதை உணர்ந்து விட்டால் அவன் உபேக்ஷை யை இலக்ஷ்யம் செய்யாமல் அவனையே சேர முயல்கிறது. அதுபோல எனக்கு உடை யான் நீ என்பதை நான் உணர்ந்துகொண் டேன். நீ பாவியேனைப் பல காட்டிப் படிப் பினும், நெறிகாட்டி நீக்கினும் உன்னால் ஆளப் படுவதையே வேண்டி நிற்பன் நான் என்பது குலசேகரரின் நின்னையேதான் வேண்டி என்ற பாடலின் பருப்பொருளும் உட்பொரு ளும். இதுதான் உடையான் உடைமை சம் பந்தத்தின் ஒருபக்கமான உடைமையின் தன்மை உணர்த்திற்று. இதன் மற்றொரு பக்கமான உடையான் நிலையை இப்பதிகத்தில் "கூவுதல் வருதல்" செய்யாய் என்றவிடத்தே காட்டப்படுகிறது. உன் உடைமையான என்னை நீ வந்து கைப்பிடித்து அழைத்தல் முறை. அந்த முறைப்படி என்னை நீ வந்து கைக்கொள்கிறாயில்லை. இல்லை முறைகேடாக என்னை ஆளிட்டழைக்கின்றனையோ உன் பக்கலிலே என்றால் அதுவுமில்லை. எனவே உன் உடைமைப் பொருள் உன்னையடைய வேண்டும் என்று ஏங்கி நிற்பதைத் தவிர வேறு வழியில்லை. இவ்வாறு அடியேனை உபேக்ஷிக்கும்படி அடியேன் தகாத பொரு ளாகி விட்டேனா? அல்லது "ஈங்கிவள் ஓர் பொருளோ எனும் இகழ்வோ," அன்றி நீ ஆட்கொள்ளத்தக்க பொருள்களின் கோடியி னின்று புறம்பாகிவிட்டேன் என்ற எண் ணமா. என்னை அப்படி உதாசீனம் செய்து விடாமல் எனக்கு அருள்செய்து என்னை உன் உடைமையாக ஏற்று ஆட்கொள்ள வேணும் என்பதெல்லாம் "என்னை ஆள்வாய்" என்றவிடத்திலே சூசகம்.

இனி ஆதார ஆதேயம் இப்பதிகத்திலே எங்கு கூறப்படுகிறது என்பதை நோக்கு வோம். முன்குறித்தபடி குலசேகரரது வெங் கண் திண்களிறடர்த்தாய் என்ற பாடல் இந்த

சம்பந்தத்தை கூறுகின்றதென்பதும் 'எனக்கருளி' என்ற இப்பதிக வாக்கிலே அது காட்டப்படுகிறதென்பதும் சில அறிஞர் கொள்கை. 'வெங்கண்' என்ற பாடலில் எங்குப்போய் உய்கேன் உன் இணையடியே அடையலல்லால் எங்கும்போய்க் கரைகாணாது எறிகடல் வாய் மீண்டேயும், வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே என்றார் குலசேகரர். கப்பலின் பாய்மரத்தின் முனையிலே தங்கினால்போதும். கப்பல் தன்னைக் கடலைக் கடத்திக்கொண்டு போய்விடும் என்று அதில் தங்கிற்று பெரிய பறவை ஒன்று. கொஞ்சதூரம் சென்றதும் தானே பறந்து சென்று கரையை அடையலாமே இப்பாய்மரம் எதற்கு என்ற விபரீத எண்ணம் உண்டாகவே பாய்மரத்தைவிட்டுப் பறந்தது. பறந்தது!பறந்தது! கரையைக்காணவில்லை. பரந்த கடல்தான் எங்கும் காட்சியளித்தது. பறந்த காலத்தில் பலதடவை கடலிலே விழுந்து மேலெழ மாட்டாமல் திண்டாடியது. அதன்பரிய உடல், அது அழுந்த ஏதுவாயினதே ஒழிய அது கடலைக்கடக்க உதவவில்லை. தன் முயற்சி பலிக்காமல் இறக்கைகள் ஓய்ந்து முடிவில் பழைய பாய்மரமே கதி என்று அதற்கே மீண்டுவந்து சேர்ந்தது அப்பறவை. அதுபோல இந்த பிறவிக்கடலின் மத்தியில் சிக்குண்டு தவிக்கும் நான் என்முயற்சியால் அக்கடலைக் கடக்க முடியுமா. நான் கற்ற கல்வி என்னை நன்கு பிறவிக்கடலில் அழுத்தவே உபயோகமாயிற்று. என் கல்வியால் யானே தலைவன் என்று கொண்டுவிடுகிறேனல்லவா. எனவே எனக்கு உய்வு வேண்டுமானால் உன் திருவடியைச் சேர்ந்தால் இப்பிறவிக்கடலை நீந்த முடியுமா? உன் திருவடியே தஞ்சம் என்றார் குலசேகரர். இவ்வுண்மை 'எனக்கருளி' என்ற பதத்திலே கிடப்பதாக அறிஞர் கூறுகின்றனர். திருப்புளிங்குடியிலே நீ வந்து சேவை சாதித்தது நான் இரக்கவோ செய்தது? உன் கிடையழகைக் காட்டியும், இருப்பழகைக் காட்டியும், நிலையழகைக் காட்டியும் என்னைத் தெளிவித்து உன் குணங்களின் நினைவு என்ற போஷாக்காலே என்னைநீயல்லவா தரிப்பித்துக்கொண்டு போந்தாய். உன்னையல்லால் எனக்கு வேறு ஆதாரம் ஏது? என்று ஆழ்வார் திருவுள்ளம் என்பது பெரியோர் துணிபு.

இனி போக்தா போக்யம் என்ற ஸம்பந்தமும் இப்பதிகத்திலே கூறப்படுகிறது என்பர். குலசேகரர் 'எத்தனையும் வான்மறந்த காலத்தும்' என்ற பாசுரத்திலே விவரித்த பொருள் இங்கே "என் அகம் கழியாமே என்னை ஆள்வாய்" என்றவிடத்தே கூறப்படுகிறது என்பது அவர்கள் அபிப்பிராயம்.

அகத்துறையிலே வாடும் பயிரை நாயகியாகவும் தலையளி அளிக்கும் நாயகனை மாரியை(மேகத்தை)யும் கூறுவதுண்டு. வெகுநாள் பிரிந்து பின் சிலநாள் வந்து நாயகியுடன் தங்கி மீண்டும் பிரியவுன்னும் நாயகனை நோக்கிக் கூறியதாகவரும்.

"மாரிக் காவுற்றுப் பீள்வாடும் நெல்லிற்கு'ஆங்கு
ஆராத்துவலை யளித்தது போலுநீ
ஓர்யாட் டொருகால் வரவு"

(பீள் - கதிர்வரும் பருவத்துள்ள நெற்பயிர்; ஓர்யாட்டு-ஒரு வருடத்துக்கு)

என்பது கலித்தொகை. இம்முறையிலே குலசேகரர் கூறுகிறார். மேகம் எவ்வளவு தான் பயிரை மறந்தாலும் பயிர் மேகத்தை மறக்குமோ மறக்கத்தான் முடியுமா. பயிர் எவ்வளவுதான் தீவிரமாக நினைத்தாலும் மேகத்தை வரச்செய்ய இயலுமா. மேகம் தானாகத் தானே வர வேண்டும். அதுவும் அது இஷ்டப்பட்ட போது. அதுபோல நீ என்னை எவ்வளவுதான் மறந்தாலும் உன் முகம்காண வேண்டித்தானே நான் தவிக்கிறேன். உன்னை நான் மறக்க முடியுமா? நீ வந்து முகம் காட்டுவதும் நீ இஷ்டப்பட்டபோதுதானே. யான்வேண்டும் பொழுது நீ வருவது என்பதுண்டோ. எனவே பயிர்கள் மேகத்தின் வரவைநோக்கிக் காத்திருப்பதுபோல் அடியேனும் உன் வரவை எதிர்நோக்கி என் சித்தத்தை உன்பாலே திருப்பிவைத்திருக்கிறேன். அதைத் தவிர வேறு என்னசெய்ய முடியும். என் சிந்தை சோர்வுற்று வாடிவிடாதபடி நீதான் பலதடவை காப்பாற்றியிருக்கிறாய். என் சிந்தை தெளிவித்தவன் நீயன்றோ. நான் வேண்டியா வந்தாய். நீயாகத்தானே வந்தாய், மேகம் பயிர் வாடாமல் காக்கத்தானே வருவது போல் என்று குலசேகரர் பாசுரங்களையும் இப்பாடலையும் இணைத்துப்பொருள் காண்பர்.

இனி அடுத்துள்ள துலைவில்லிமங்கலம் என்ற இரட்டைத் திருப்பதி அநுபவத்தைக் காண்போம்.

(தொடரும்)

# சைவத் திருமுறைகளின் அடைவு

[திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியார்]

மண்ணுலகில் மக்களாய்ப் பிறந்தார் மாண்புடையாராக மதிக்கப்படுகின்றனர். ஆயினும் அவர்களுள் பெரும்பாலார் அப் பிறப்பின் அருமையையும் அதனை வளம் படுத்தும் முறைமையினையும் அறிந்தாரல்லர். ஒருசிலரே உணர்ந்தவராவர். பிறவிகள் வினையின் காரணமாக நேர்வன. பல்வேறு பிறவிகளுள் மானிடராதல் அருமையாகும். நல்வினைப் பயனாக மானிடராகப் பிறந்து விடின் அப்பிறவியை வளம்படுத்திக் கொள்ளுதல் கடமையாம். அம்முறைமையினைச் சிறிது ஆராய்ந்துணர்வோம். உடலொடு உணர்வு கூட்டும் கரணங்களுடைய மக்களாகிய யாம் அறிவெனும் பொருளுடையவர்களாக விளங்குகிறோம். அவ்வறிவு அகில லோகங்களிலுள்ள எவற்றையும் அறியவும் ஆராயவும் ஆற்றலுடையது. நன்றென தீதென விளக்கவல்லது. ஆயினும் குறைபாடு உடையதே. மறைப்பு வயப்பட்டது. சிற்சில காலங்களில் தீதினையும் நன்றென மதித்துச் செய்யவல்லோம். அதன் பயன் துன்பமே. அதனை நாம் நாடாதிருப்பினும் நமது செய்வினையால் அது நேர்கிறது. இங்ஙனமே இன்பமும் விரும்பியவிடத்தும் விரும்பாதவிடத்தும் வரும். எனவே நம் முயற்சியால் இன்பத்துன்பங்கள் விளைவனவல்ல. அவை விளைதற்கு நமது செய்வினைகள் காரணமாவன என்றுணர்ந்தோம். இவ்வினைகள் பயன்தரத் தக்கனவாயினும் அவை தாமாகவே உயிர்களை நாடிச்சென்று அவைகளினிடத்தே பொருந்தி இன்பத்துன்பங்களை விளைக்கும் ஆற்றலுடையனவல்ல. அவைகள் அவ்வாறு செய்தற்கு அறிவுடையனவல்ல. எனவே அறிவுடைய உயிர்களுக்கு அவரவர் வினைக்கேற்றவாறு இன்பத்துன்பங்களைக் கூட்டுகின்ற முற்றறிவும் முடிவிலாற்றலும் உடைய ஒரு பெரும்பொருள் உள்ளதென்று புலனாகின்றது.

இனி, உலகியலில் பேராற்றலும் பேரறிவுமுடையார்பால் சிற்றறிவும் சிறுதொழிலுமுடையார் சார்ந்துநின்று அவர் தம்மால் பயன்பெறுவதுபோல ஈண்டுத் துணிந்த பெரும்பொருளாகிய இறைவனிடத்து உயிர்கள் சார்ந்துநிற்றல் இன்றியமையாததாகும். இறைவன் அறிவு வடிவினன். அவனை அறிதலும் பற்றுதலும் அறிவால்தானியலும். உயிர்களுக்கு இறைவனை அறிதற்கும் பற்றுதற்கும் அறிவுணர்ச்சியே வேண்டும். அவ்வுணர்ச்சி அருணூல்களானும் குருபரனுபதேசத்தானும் கைகூடும். அருணூல்கள் இறைவனை அறிதற்குத் துணைசெய்வன. குருவினுபதேசம் இறைவனைப் பற்றுதற்குத் துணைசெய்யும். நூல்கள் இருதிறப்படுவன. அவை என்றுமுள்ள நூல்கள், காலாகாலங்களில் தோன்றும் நூல்கள் என்பன. என்றுமுள்ள நூல்களே அருணூல்கள். அவை உண்மை செறிந்தவை. அவற்றுள்ளும் இறைவனைப் பற்றிய சமயப் பாடல்களே சிறந்தன. தென்றமிழில் சைவத் திருமுறைகளும் நாலாயிரப் பிரபந்தமும் பெரிதும் போற்றப்படுவன. இவை பேரருளாளர்களால் இறைவனோடு கலந்துநின்று பாடப்பெற்றவை.

இனி, சைவத் திருமுறைகள் பன்னிரண்டாகும். அவற்றையருளிய அருளாளர்கள் நாட்கணக்குக்குரிய விண்மீன்கள்போல் இருபத்தெழுவர். அவர்கள் ஒருகாலத்தவரல்லர். பல்வேறு காலத்தவராய்க் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டுவரை இருந்தவர்கள். இவர்களுள் தலையாயவொருவர் திருவாலவாயெனும் மதுரையில் திருக்கோயில் கொண்டுள்ள சோமசுந்தரக் கடவுள். அவர் எழுதித் தந்தது ஒப்பற்ற கைச்சீட்டுக்கவி. அப்பெருமானே சிதம்பரத்தில் தோன்றி எட்டாந் திருமுறையாகும் திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் தன் கைப்பட எழுதினார் என்பது வரலாறு. எனவே இத்திருமுறைகள் இறைவனும் போற்றும் பெருமையுடையன என்பது தெளிவு. இத்தகைய திருமுறைப் பாடல்கள் ஆங்காங்குக் கற்றறிந்த பெரியோர்கள் ஓதிவந்தனர், ஆயினும் அவர்

சிலசில பாடல்களை ஓதிவந்தனரே யொழிய ஒருசேர உணர்ந்தார்களல்லர். கற்றுணர்ந்த பாடல்களை மாத்திரம் சென்ற சென்றவிடங்களில் ஓதி யாவரையும் அன்பால் உருகச் செய்வர். இங்ஙனமே இத்தெய்வப் பாடல்கள் மன்றத்தினும் மன்னரவையினும் புகுந்தன. முதலாவது இராசராச சோழர் கேட்டுருகினார்; வியந்தார். இச்செம்பாடல்கள் உள்ள விடங்களை நாடி அலைந்தார். திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் அருள்பெற்ற நம்பியாண்டார்நம்பிகள் துணையால் சிதம்பரத்தில் அத்தெய்வப் பாடல்களைப் பெற்றார். நம்பிகள் துணைகொண்டே பதினொரு திருமுறைகளாகத் தெய்வப் பாடல்களை வகுப்பித்தார் என்பது வரலாறு. பின்னர்ச் சேக்கிழாரடிகள் அருளிய பெரியபுராணமெனும் திருத்தொண்டர் புராணத்தை இரண்டாவது குலோத்துங்கரான அநபாயச் சோழர் பன்னிரண்டாந் திருமுறையாகச் செய்வித்தார் என்பதும் வரலாறு.

இனி இத்திருமுறைகளைப் பன்னிரண்டெனத் தொகுப்பித்த வகை யாதெனக் கருதுவாம். வகுத்தவர் நம்பியாண்டார் நம்பிகள் என முன்னருரைத்தாம். அவர் திருவருள் நிறைந்தவர். திருமுறையாசிரியர்கள் இருபத்தெழுவரை அவரது ஏற்றத் தாழ்வுகளைக் கருதி முன்னும் பின்னுமாக வரிசைபடுத்தினாரல்லர். மற்றும் அவரவர் காலங்கருதி அவ்வரிசை அமைத்தாருமல்லர். அவர் வகுத்த பதினொரு திருமுறைகளில் உயிர்கள் சிவநிலையடைவதற்கு ஒரு படிமுறையைக் கண்டார். திருமுறை என்பது சிவத்தை யடைவிக்கும் அருணூலன்றோ!

இனித் திருமுறைகளின் வரிசையை உணர்வோம். திருஞானசம்பந்தர் அருளிய தேவாரங்களனைத்தும் முதல் மூன்று திருமுறைகளாகும். திருநாவுக்கரசர் திருவாய் மலர்ந்தன யாவும் நான்கு ஐந்து ஆறு திருமுறைகளாயின. சுந்தரர் பாடியன ஏழாந்திருமுறை. எட்டாந்திருமுறையாவது திருவாசகமும் திருக்கோவையாருமாகும். திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தமநம்பி, சேதிராயர் எனும் ஒன்பதின்மர் அருளிய திருவிசைப்பாக்கள் ஒன்பதாந் திருமுறையாகும். திருமூலர் மொழிந்த திருமந்திரமாலை பத்தாந்திருமுறை. திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள், நக்கீரர், கல்லாடர், கபிலர், பரணர், இளம்பெருமானடிகள், அதிராவடிகள், பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பிகள் ஆகிய பன்னிருவர் இயற்றிய நாற்பது பிரபந்தங்களும் பதினொராந்திருமுறையாகும்.

இனி, படிமுறையாவது யாது? கீழிடத்துள்ளானொருவன் மேலிடத்திற்குச் செல்லக் கருதியபோது தக்க சாதனத்தைக் கைக்கொண்டு ஏற முயல்வான். அச்சாதனம் ஏணி, படி முதலியனவாம். அச்சாதனத்தை அமைத்தற்குச் சேறுமுதலிய இடர்களின்றிய உறுதிப்பட்ட நிலம் அதனைத் தாங்கவல்லதாய் இருத்தல்வேண்டும். அச்சாதனமும் தன்மீது ஏறிச் செல்வோனைத் தாங்குதற்குரிய வன்மையுடையதாதல் வேண்டும். மேலிடமும் சாதனத்தைப் பற்றக்கூடிய நிலையிலும் இருத்தல்வேண்டும். தகுதியான தன்மைகள் இருந்தாலன்றிக் கீழிடத்திலுள்ளவொருவன் சாதனத்தின் வழியாக மேலிடத்திற்குச் செல்ல இயலாது. அதுபோல இறைவன் நற்றுள்களைச் சாரமுயலும் அருந்தவன் நற்பண்பமைந்த சமயத்தைப் பற்றுதல்வேண்டும். அங்ஙனம் பற்றியபோது அச்சமயத்தின் முதற்கடவுளினிடத்து அன்பு பெருகி நல்லுறவு பேணுதல்வேண்டும். அந்த நல்லுறவு, வாழினும் வருந்தினும் அக்கடவுளை மறவாது உறைப்புடன் பற்றியிருக்க உயிர்களுக்குத் துணைபுரியும். இத்திவிர நிலையால் அக்கடவுளது அருள்பெறலாம். அவ்வருள் இறைவனைப் பற்றுதற்குத் தடையான உலகப் பற்றாகிய மோகத்தைப் போக்கவல்லது. அம்மோகமாகிய மயக்கம் ஒழிந்ததென்னின் அக்கடவுளோடு இரண்டறக் கலந்துநின்று அழியா இன்பானுபவமாகிய சிவபோகத்தைத் துய்ப்பர் என்பது திண்ணம். இவ்வின்பானுபவத்தைக் கூட்டியருளிய இறைவனுக்கு நன்றிகாட்டும் முறையாகப் பத்தி முளைக்கும் என்பது ஆன்றோர்கண்ட அருள்நெறி. இம்முறையையே நம்பியாண்டார் நம்பிகள் தான்வழிபட்ட பொல்லாப்பிள்ளையார் திருவருளால் தெளிந்தனர் போலும். இந்தப்படி முறையையே நம்பிகள் தான்

வகுத்த பதினொரு திருமுறைகளுள் கண்டனர் என்பர் திருமுறை கண்டபுராணம் இயற்றிய உமாபதிசிவனார். இதனை,

பண்புற்ற திருஞான
சம்பந்தர் பதிகமுந்நூற்
றெண்பத்தி நான்கினால்
இலங்குதிரு முறைமூன்று
நண்புற்ற நாவரசர்
முந்நூற்றேழ் மூன்றினால்
வண்பெற்ற முறையொன்று
நூற்றினால் வன்றொண்டர்
—திருமுறைகண்ட புராணம் (25)

ஆகவனர் திருமுறைஏழ்
அருள்திருவா சகமொன்று
மோகமெறி திருவிசைப்பா
மாலைமுறை யொன்றுசிவ
போகமிகு மந்திரமாம்
முறையொன்று புகழ்பெறவே
பாகமிகுந் திருமுறைகள்
பத்தாக வைத்தார்கள் (26)

வைத்ததற்பின் நம்பிகழல்
மன்னர்பிரான் மகிழ்ந்திறைஞ்சிச்
"சித்திதரும் இறைமொழிந்த
திருமுகப்பாசுரம் முதலாம்
உய்த்தபதி கங்களையும்
ஒருமுறையாச் செய்க"எனப்
பத்திதருந் திருமுறைகள்
பதினொன்றாப் பண்ணினார் (27)

என்வரும் திருவிருத்தங்களுள் குறித்தவாறு அறியலாகும். இவ்விருத்தங்களுள் சைவத் திருமுறைகள் பதினொன்றனுக்கும் தனித் தனிச் சிறப்பு அடைமொழிகள் தரப்பெற்றுள்ளன. திருஞானசம்பந்தர் திருமுறைகள் மூன்றினுக்கும் பண்புற்ற எனவும், திருநாவுக்கரசர் திருமுறைகள் மூன்றினுக்கும் நண்புற்ற எனவும், சுந்தரர் திருமுறை ஏழாவதனுக்கு வண்பெற்ற எனவும், எட்டாந்திருமுறையினுக்கு அருள் எனவும், ஒன்பதாந் திருமுறைத் திருவிசைப்பாவுக்கு மோகமெறி எனவும், பத்தாந்திருமுறையாகும் திருமந்திரத்திற்குச் சிவபோகமிகு எனவும், பதினொராந்திருமுறைக்குப் பத்திதரு எனவும் போற்றப்பட்டுள்ளன.

இனி இங்ஙனங் கூறிய சிறப்பு மொழிகளால் உயிர்கள் பரம்பொருளாகிய சிவபெருமானையடைதற்கு ஒருபடி முறை கற்பிக்கப்படுகிறது. திருஞானசம்பந்தருக்கு அமைந்தது பண்பு என்னும் சிறப்பு. பண்பென்பது பாடறிந்து ஒழுகுதல் என்று நெய்தற்கலி (1.) விளக்கும். இதற்கு நல்லந்துவனார் உலகவொழுக்கம் அறிந்தொழுகுதல் என்றுரை செய்தனர். பண்புடைமைக்குப் பொருளுரைத்த பரிமேலழகரும் யாவர்மாட்டும் எளிய செவ்வியராதலென்று விளக்கினார். எனவே பண்பென்பது மக்கள் மாட்டு அன்புடையராய் அவர் தமக்கு ஏற்றவாறு நேர்மையாய் ஒழுகுதலென்பது புலனாகிறது. ஈண்டுத் திருஞானசம்பந்தர் தன் காலத்திருந்த மக்களுள் பலரும் இறைவன் மாட்டு அன்பின்றிய ஒழுக்கத்தின் கின்றமை கண்டு வருந்தி அவர்தம் உயிரின் வேட்கையாகிய அருளொழுக்கத்தைப் பரப்புவான் துணிவு கொண்டார். அவர் காலத்தே பௌத்த சமண சமயங்கள் அறவொழுக்கத்தையே பரப்பி அருளொழுக்கமாகிய இறைவனை வழிபடுதலைக் குறைகூறி விலக்கின. அவ்விரு சமயங்களும் இறைவன் உண்டு என்பதனையும், அவனை வழிபடுதலினால் முத்தியின்பம் உண்டு என்பதனையும் மேற்கொள்ளாதன. மக்கள் இறையுண்மையுணராதும் வழிபாடின்றியும் முத்தியின்பம் இழக்கின்றனரே என்று கருணை கூர்ந்தார். சைவ சமயமே இறைவழிபாட்டினால் பிறப்பின் அவலமாகிய துன்பத்தை மாற்றி உறுதியாகிய பேரின்பத்தை யளிக்கவல்லதென வுணர்த்த முற்பட்டார். இவ்வருங் கருத்தினை

வெற்றரையுழல்வார் துவராடைய
வேடத்தார் அவர்கள் உரைகொள்ளன்மின்
மற்றவர் உலகின்அவலம் அவைமாற்றகில்லார்
கற்றவர் தொழுதேத்து சிற்றம்பலங்
காதலாற் கழற்சேவடி கைதொழ
உற்றவர் உலகின்உறுதி கொள்ளவல்லரே
—கோயில்-பண்-காந்தார பஞ்சமம்-10

(வெற்றரை யுழல்வார் - சமணர்; துவராடைய வேடத்தார் - பௌத்தர்; அவலம் - துன்பம்; உறுதி - முத்தி.)

எனுந் திருப்பாட்டினில் குறித்தமை உணரத் தக்கது. இங்ஙனமாகச் சமணர் பௌத்தகர் கொள்கைகள் உலகமக்கட்கு ஒவ்வாதன என்றெடுத்துரைத்து உயிர்க்கு இன்றியமையாதது இறைவழிபாடு என்றும் அதனால்தான் உலகின் அவலம் மாற்ற இயலும்

என்றும் போற்றிய பண்பு திருஞானசம்பந்தரைச் சிறப்பித்தது. மற்றும், இறைவனை "எத்தவத்தோர்க்கும் இலக்காய் நின்ற எம் பெருமான்" (கீழைத்திருக்காட்டுப்பள்ளி—பண் - நட்டபாடை - 10) எனவும், "நானு விதவுருவால் நமையாள்வான்" (வேணுபுரம் - பண் - நட்டபாடை - 5) எனவும், "பருவத்தில் வந்து பயனுற்ற பண்பன்" (தென்திருமூல்லைவாயில் — பண்பியந்தைக் காந்தாரம் - 2) எனவும் போற்றி அவனது பெருங்கருணை உயிர்கள் மாட்டுப் பொருந்துமாற்றினை அறிவித்தார். எனவே மக்கட்குச் சிறந்த பண்பினையுடைய சமயத்தைத் தேர்ந்து அறிவித்த சிறப்பு அவரது திருவாக்காதலின் அதனை மூன்று திருமுறையாக முன்னமைத்தார் என்பது உரியதாகும்.

இனி அங்ஙனந் தேர்ந்த அருஞ்சமயமாகிய சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளானவர் சிவபெருமானுதலின் அவர்பால் நட்பாக்கி வைக்குஞ் செயல் திருநாவுக்கரசரது ஆகுமெனக் கருதி நண்புற்ற நாவுக்கரசர் என்று குறித்தார். நாவரசர் சமணர் அறிவுறுத்திய அறவொழுக்கத்தையே சிறந்ததென்று உட்கொண்டு இறைவன் இன்னருளின்மையால் அருளொழுக்கத்தை மேற்கொள்ளாது சமண சமயஞ்சார்ந்தாரென்பது வரலாறு. பின்னர் அருள்கூர சூலைநோயால் வருந்திச் சமணசமயம் நீத்துச் சைவசமயம் புகுந்தார் என்பதும் சரிதமாகும். இவ்வாறு நிகழ்ந்ததனை,

ஓதுவித்தாய் முன்அறவுரை
காட்டி அமணரொடே
காதுவித்தாய் கட்டநோய்
பிணிதீர்த்தாய் கலந்தருளிப்
போதுவித்தாய் (திருவேகம்பம் - க)

என வரும் திருவிருத்தத்துள் விளக்கியுள்ளனர். எனவே இறைவன் உயிர்கட்குச் சிறந்த துணைப் பொருளாவன் அவனைத் தொடர்ந்து அவன் ஆணைப்படி ஒழுகிவரின் அழிவில் வீடுபெற இயலும். அவனது ஆணை மீறினவர் அல்லற்படுவர். அதனை,

காத்தாள்பவர் காவலிகழ்ந்தமையாற்
கரைநின்றவர்கண்டு கொளென்று சொல்லி
நீத்தாயகயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்

(திருவதிகை வீரட்டானம் - பண் - கொல்லி - 5)

எனவரும் அவரது தேவாரம் புலப்படுத்துகிறது. இத்தகைய மனப்பாங்குடைய நாவரசர் தமக்கு நன்னெறி செல்லுதற்கு யாது யாது வேண்டுமோ அதனை யதனை இறைவனையே வேண்டிப் பெற்றுர். இடபச் சூலக் குறிகளும் திருவடி தீக்கையும் இறைவனைக் கனிந்து கசிந்துருகிப் பாடி வேண்ட இறைவனும் "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றேம்" என்று அவை தம்மை யருளுவர். இறைவன்பால் நல்லுறவை பெறும் வகையாக வினயமாக விண்ணப்பஞ் செய்யும் பாடல்கள் அருளுவர். பாடல்களுங்கூட இறைவன் பயிற்சியால் தான் பாடியதாக, "பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப் பின்னுள் பாமாலை பாடப் பயில்வித்தானை" (புள்ளிருக்குவேளூர் - ௬) எனும் திருத்தாண்டகத்துள் குறித்தமை யுணரலாகும். மற்றும் தனது கரணங்களை யெல்லாம் இறைவனையே பற்றி நிற்குமாறு பணித்தமை திருஅங்கமாலை எனும் அரும்பதிகத்துட் காணலாகும். எனவே நண்பு எனும் சிறப்புமொழி திருநாவுக்கரசரது திருமுறைகளைப் பொருந்துவதாயிற்று.

(தொடரும்)

---

**களக்காடு :** சத்தியவாகீசுவரர் கோயிலில் சஷ்டிவிழா 6 தினங்கள் நடைபெற்று 20-10-60ல் திருக்கல்யாணச் சிறப்பும் பின் ஊஞ்சல் 3 தினங்களும் நாலாம்நாள் சுப்பிரமணியசுவாமி பட்டணப்பிரவேசமும் நடைபெற்றது. கோயில் பெரிய கோபுரம் ஜீர்ணோத்தாரணம் நடத்துவதற்கு பொதுமக்கள் பொருளுதவி செய்யும்படி வேண்டிக் கொள்ளப்படுகிறுர்கள்.

**பெரியகாஞ்சி ;** மாசாத்தன்றளிப்பெருமாள் கோயிலில் மெய்கண்டார் கழகத்தினர் 30-10-60ல் காலை 7 மணிக்கு திருமுழுக்கு வழிபாடும் பின் "மாசாத்தன்றளிப் படலம்" என்பதுபற்றி திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார் அவர்களது விரிவுரையும் நடைபெற்றது.

# மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

இதற்குமேல் ஆராயத்தக்க தொன்றுண்டு; தென்மொழி மறைக்கு ப்ரவர்த்தகரான இவ்வாழ்வார் வடமொழி மறையிலே அநாதரவு காட்டாமல் மிக்க ஆதரவு காட்டியிருப்பது 'இவ்வாழ்வார் பரம வைதிகர்' என்பதை மூதலிக்கும். இது கொண்டே ஆழ்வார் ஸம்பந்தம் பெற்ற ஸ்ரீ வைஷ்ணவர்கள் உபய வேதாந்தப் பிரவர்த்தகர்கள் என்னும் விருதை வஹிக்கின்றனர். வடமொழி தென்மொழி வேதங்களாகிய உபய வேதங்களையும் ஒருங்கே ஆதரிப்பவர்கள் ஆழ்வார்களைப் போற்றுங் குடியினரேயாவர்.

அன்றியும், இங்கு "வடமொழி மறைவாணர் வேள்வியுள் நெய்யழல் வான்புகை போய்த்திட விசும்பிலமரர் நாட்டை மறைக்கும்" என்றருளிச் செய்திருப்பது வைதிக கருமங்களில் ஆழ்வார் தமக்குள்ள ஆதரவையும், அக்கருமங்களை யனுட்டிக்கும் அந்தணர்களிடத்துத் தமக்குள்ள பக்தியையும் நன்கு புலப்படுத்தும். திவ்வியப் பிரபந்தங்களில், நீர்வளம் நிலவளம் மாடமாளிகை மதிட் கோபுரச் சிறப்புகள் முதலானவற்றை வருணிப்பதுபோல, ஆங்காங்கு வாழும் அந்தணர்களின் அதிசயங்களையும் வருணிப்பது குறிக்கொள்ளத்தக்கது. தில்லைத் திருச்சித்திரகூடத்தை வருணிக்கின்ற குலசேகராழ்வாரும் திருமங்கையாழ்வாரும் 'அந்தணர்களொரு மூவாயிரவரேத்த" என்றும், "மூவாயிர நான்மறையாளர் நாளும் முறையால் வணங்க" என்றும் அருளிச் செய்துள்ளார்கள். அத்தலத்தில் மூவாயிரவர் பிராமணர்கள் இருந்தார்களாகவுள்ள ப்ரசித்தி திவ்யப் பிரபந்தத்திலேறியிருக்கின்றது. இவ்வாழ்வாரும் திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாறென்னும் மலைநாட்டுத் திருப்பதியை வருணிக்கின்ற 'வார்கடாவருவி'யென்று தொடங்கும் பதிகத்தில் "அமர்ந்த சீர் மூவாயிரவர் வேதியர்கள் தம்பதி அவனி தேவர் வாழ்வு" என்று அத்தலத்திலும் மூவாயிரவர் வேதியர்கள் பெருமேன்மையோடு வாழ்வதாக அருளிச் செய்துள்ளார். இவ்வாழ்வார் தாமே திருவல்லவாழென்னும் மலைநாட்டுத் திருப்பதியைப் பாடுமிடத்தும் "பாடு நல்வேதவொலி பரவைத் திரைபோல் முழங்க, மாடுயர்ந்து ஓமப்புகை கமழும்" என்று வேதவேள்விச் சிறப்புகளைப் பேசியுள்ளார்.

திருமங்கையாழ்வாருடைய திருவாக்கில் "நல்ல வெந்தழல் மூன்று நால்வேதம் ஐவேள்வியோ டாறங்கம்வல்ல வந்தணர்" என்றும் "அங்கமாறைந்து வேள்வி நால்வேத மருங்கலை பயின்று எரி மூன்றும் செங்கையால் வளர்க்கும்" என்றும் இத்தகைய பாசுரங்கள் விசேஷமாக வெளிவருகின்றன. இப்போது குட்டநாட்டுத் திருப்புலியூர்ப் பாசுரமும் அந்தக்கணக்கிலே பொலிகின்றது. திருவல்லவாழ், திருச்சிற்றாறு, திருப்புலியூர் என்னுமித்தலங்கள் மலைநாட்டுத் திருப்பதிகளாகையாலே அவ்விடங்களில் ச்வேதமிருத்திகையினாலாகிய ஊர்த்வபுண்ட்ரமணியும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்களென்றும் அன்னவர்களையே ஆழ்வார் பாடினரென்றும் சொல்ல இயலாது. பிராமாணிகர்கள் அப்படிச்சொல்ல நினையார்கள். இந்த நூற்றுண்டிலும் சில பல நூற்றுண்டுகட்கு முன்னமும் அந்த க்ஷேத்திரங்கள் அந்தணர்கள் என்னத் தக்கவர்களுக்கன்றி ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு உறைவிடமல்ல.

ஆகவே ஆழ்வார்கள் அந்தணர்களென்றும் அவனி தேவர்களென்றும் நிலத்தேவர் குழுவென்றும் புகழ்ந்திருப்பது பொதுவாக பிராமணர்களையே யென்பது தத்துவம். வியாக்கியானங்களில் வைஷ்ணவர்களென்று சில விடங்களில் காணப்பட்டாலும் அதற்கு

விஷ்ணுபக்தர்களென்பது மட்டுமே பொருளென்று கொள்வது, ஆழ்வார்கள் விசாலமான மனப்பாங்குடையவர்களாலும் பிராமண அபிமானமும் வைதிக பக்ஷபாதமும் மிக்கவர்களாகையாலும் எவரேலுமவர் கண்டீரென்றது கழுத்தளவிலேயன்றியே நாபியளவுமாகி, வர்ணாச்ரம தருமங்களில் ஊன்றினவர்களும் விஷ்ணுபக்தர்களுமான பிராமணர்களைக் கொண்டாடியுள்ளார்களென்று தேறிற்று.

தமிழ் வேதத்திற்கு நோக்கு அர்ச்சாவதார கைங்கரியம். வடமொழி வேதத்திற்கு நோக்கு யஜ்ஞயாகங்கள். அவ்வடமொழி வேதம் வல்லவர்கள் நெருப்பிலே நெய்யையிட்டு ஹோமங்கள் பண்ண, அதினின்று கிளம்பின பவித்திரமான புகையானது விண்ணுலகமளவும் வளர்ந்து அங்குள்ள விமான சாரிகளின் கண்ணை மறைக்கின்றதாம். இவ்வுயர்வு நவிற்சியினால் யஜ்ஞயாகங்களின் சிறப்பு மட்டும் தெரிவிக்கப்பட்டதாகக் கொள்க. இங்ஙனே சிறப்பாக வைதிக கருமங்கள் நடைபெறுமிடமான திருப்புலியூரிலே திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய பெருமானது திருநாமமல்லது வேறொன்று சொல்லவறியாத இவள் அப்பெருமானையே மணவாளனாகக் கொண்டாளென்னுமிடத்து ஐயமுண்டோ? என்றுளாயிற்று தோழி.

## 10. அன்றி மற்றோருபாயமென்?

இத்தலைவி திருப்புலியூரப்பனுடைய கலவியைப் பெற்றாளென்னுமிடத்திற்கு ஒருவிதமான கண்ணழிவும் சொல்ல முடியாத நல்லடையாளமுண்டென்று மூதலிக்கிறாள் தோழி.

### இவள் அந்தண்குழாய் கமழ்தல் அன்றி மற்றொருபாயமென்?

இவளுடம்பிலே திருத்துழாய்ப் பரிமளம் கமகமவென்று கமழா நின்றபடியைக் கண்டீர்களில்லையோ? என்னுடம்பிலாவது உங்களுடம்பிலாவது திருத்துழாய் நாறுகின்றதோ? எம்பெருமானுடைய திருமேனியில் அணைந்தாலல்லது திருத்துழாய் கமழப்ரஸக்தியுண்டோ? இவளுடம்பில் திருத்துழாய் கமழ்வதனால் நிச்சயிக்கப்படுவது இன்னதென் பதை இரண்டு மூன்று நான்காமடிகள் தெரிவிக்கின்றன. மலைபோலே அசைக்க முடியாத மாடங்களும் மாளிகைகளும் திரள் திரளாக மிக்கு, தென்திசைக்குத் திலகம் போன்று விளங்கா நின்ற திருப்புலியூரிலே நின்ற மாயப்பிரானுடைய திருவருளுக்கே இவள் இலக்காயினளென்பதை நிச்சயிக்கத் தட்டுண்டோ? இது நீங்களும் இசையத்தக்க நல்லடையாளமன்றோ வென்று தோழி சொல்லித் தலைக்கட்டினாளாயிற்று.

குட்டநாட்டுத் திருப்புலியூரனுபவம் முற்றிற்று

## திருவாறன்விளைப்பதியனுபவம்

குட்டநாட்டுத் திருப்புலியூர்ப்பதியின் சிறப்பை யனுபவித்தோம் கீழ். அதனருகே யுள்ள திருவாறன்விளைத் திருப்பதியை அனுபவிப்போமிப்போது. இத்தலத்தை அந்நாட்டிலுள்ளவர்கள் 'ஆரம் முளை' என்று வழங்குவார்கள். மலைநாட்டுத் திருப்பதிகளுள் திருவனந்தபுரத்திற்கு அடுத்தபடியாக இத்தலம் செல்வம் மிக்க தென்பர். திருவனந்தபுரத்தின் செல்வத்திற்கும் இத்தலத்தின் செல்வத்திற்கும் ஒப்புமைக்கு அவகாசமில்லை யெனினும், மலைநாட்டிலுள்ள மற்றைத் திருப்பதிகள் பன்னிரண்டினுள் இத்தலம் மிக்க செல்வச் சிறப்புடைய தென்னத் தட்டில்லை. இத்தலத்தைப் பாடியவர் நம்மாழ்வாரொருவரே யாவர். ஒரு பதிகம்பாடியுள்ளார். அப்பதிகம் திருவாய்மொழியில் ஏழாம்பத்தின் இறுதியிலுள்ளது. "இன்பம் பயக்க வெழில்மலர் மாதருந் தானும்" என்று தொடங்குவதாமது. இத் திருப்பதியின் சிறப்பை யுணர்த்துவோம்.

ஆழ்வார்களை எம்பெருமான் இந்நிலவுலகில் அவதரிக்கச் செய்தது ஸம்ஸாரி ஜனங்களைத் திருத்திப் பணிகொள்வதற்காகவே யென்பது யாவருமறிந்ததே. மற்றை யாழ்வார்களினும் மிக்க சிறப்புப் பெற்றவரான நம்மாழ்வார் இந்நிலத்தில் அவதரித்ததும் அதற்காகவேயாகும். இவ்வாழ்வாருடைய திருவடி பணிந்தவரான மதுரகவிகள் தமது பிரபந்தத்தில் இதனை வெளியிட்டுமுள்ளார்—"பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத் திருத்திப்பணி கொள்வான்—குருகூர் நம்பி" என்று. எம்பெருமான் இதற்காகவே நம்மை இந்நிலத்தில் வரவிட்டா

னென்பதை ஆழ்வாரும் அறிந்ததே முதற் பிரபந்தமான திருவிருத்தத்தில் எம்பெருமானை நோக்கி "நின்கண் வேட்கையெழுவிப்பனே" என்று விண்ணப்பம் செய்துள்ளார். பிரானே! இந்த ஸம்ஸாரிகளுக்கு உன்பக்கலில் அன்பு எழும்படி இவர்களைத் திருத்திப் பணி கொள்வே னென்றவாறு.

தீயவர்களைத் திருத்துவ தென்பது மிக மிகவும் செயற்கரிய காரியமாதலால் அவ் வருமையை யறிந்த ஆழ்வார் இதில் வெறுப்பையும் அடிக்கடி வெளியிட்டு வந்தார். பெரிய திருவந்தாதியில் (பா. 25.) "ஆரானுமாதானுஞ் செய்க, அகலிடத்தை ஆராய்ந்து அது திருத்தலாவதே!" என்று தம் வாய் விட்டே வெறுப்பை வெளியிட்டார்.

திருவாய்மொழியில் நான்காம்பத்தில் ஒன்பதாவது பதிகம்—'நண்ணுதார் முறுவலிப்ப' என்பது. இதில் "இவை யென்ன வுலகியற்கை!" என்று பலகால் சொல்லியும், "கண்டு ஆற்றேனுலகியற்கை...... கூயே கொள் அடியேனைக் கொடுவுலகம் காட்டேலே" என்று கதறியும் இந்நிலத்திலிருப்பு தமக்கு மிகவும் பொறுக்கமுடியா திருப்பதை எம்பெருமான் திருவடிகளில் விண்ணப்பஞ் செய்தார். 'பிரானே! என்னை எதற்காக இந்தக் கொடுவுலகத்தில் வைத்துக் கூத்தாட்டுக் காண்கிறாய்?' என்று அடிக்கடி பகவானைக் கேட்பராழ்வார். அதற்கு அவன் ஒரு விடையும் தாராதே ஒவ்வொரு ஸமயத்தில் ஒவ்வொரு திருக்குணத்தைக் காட்டி அதை யனுபவிக்கச் செய்து ஸமாதானம்பண்ணி இப்படியே எடுப்பும் சாய்ப்புமாகவே திருவாய்மொழியை நடத்திக்கொண்டு போரா நின்றா னெம்பெருமான்.

இப்படி நடந்துவாராநிற்கையில், ஒரு நாள் ஆழ்வார் எம்பெருமானை மடிபிடித்துக் கேட்கத் தொடங்கினார்; (என்னவென்றால்;) 'எம்பிரானே! இன்று என் கேள்விக்கு நீ விடை கூறியே தீரவேணும். ஏதுக்கு என்னை இவ்விருள்தரு மாஞாலத்திலே இருக்கவைத்துப் பொல்லாதன காட்டிப் படுகொலையடிக்கிறாய்? பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்புமாய் இந் நின்ற நீர்மையிலே மிக்க அருவருப்புக் கொண்ட வென்னை இக்கொடிய நிலத்திலே வைத்துக் குமைப்பது பேரருட் கடலான வுனக்குப் பொருந்துமோ? என்ன திருவுள்ளமுங்கொண்டு என்னை இங்கு இட்டுவைத்திராநின்றாய்? என்னுடைய ஆற்றாமையில் ஏதேனும் குறையுண்டோ? அல்லது உற்றன் ஆற்றலில்தான் குறையுண்டோ? இங்கு என்னை நலியு மவற்றின் நடுவே வைத்து நலிவது தருமமன்றே யுனக்கு. எதற்காக இந்த விளையாட்டு? இது தன்னை இன்று நீ சொல்லியேயாகவேண்டும்' என்றார்.

அதுகேட்ட எம்பெருமான், 'ஆழ்வீர்! என் கருத்தை நீர்தாம் அறியீரோ? அறிந்து வைத்தும் அறியாதவர்போலக் கேட்கின்றீரே; சொல்லுகிறேன் கேளும்; நமக்கும் நம்முடையார்க்கும் போதுபோக்குக்கு உரித்தாகச் செவிக்கினிய செஞ்சொற்களைப் பாடித் தருகைக்காகவன்றோ நாம் உம்மை இந்நிலத்திலே வைத்திருப்பது; அப்படியிருக்க ஏன் பதறுகிறீர்? சிறிது பொறுத்திரும்' என்றான். அதுகேட்ட ஆழ்வார் 'பிரானே! இதுவோ உன் கருத்து? ஸர்வேச்வரனாய் அவாப்த ஸமஸ்த காமனா யிருந்துள்ள உனக்கும் ஒரு குறையுண்டாகி அக் குறையை என்னாலே தீர்த்துக் கொள்ளப் பார்ப்பதாகிறவிது நன்றாயிருந்தது! உனக்குச்சில பிரபந்தங்கள் வேண்டினால் அவை இயற்றுதற்குரிய அறிவும் ஆற்றலும் நிரம்பிய வியாஸர் பராசரர் வால்மீகி முதலான முனிவர்களைக் கொண்டும், இன் கவிபாடும் பரமகவிகளான பொய்கை பூதம் பேயாழ்வார்களைக் கொண்டும் திருமழிசைப் பிரானைக் கொண்டும் நூறாயிரமாகப் பாடுவித்துக் கொள்ளலாகாதா? நீசனேன் நிறையொன்று மிலேனைக் கொண்டு பாடுவித்துக் கொள்ளத் திருவுள்ளங் கொண்டவாறு என்னே! இது என்ன நீர்மை? இது என்ன வாத்ஸல்யம்! என்று பெருநன்றி பாராட்டி இதற்கொரு கைம்மாறு கண்டிலேனே என்று தடுமாறி நின்றார் 'என்றைக்கு மென்னை' என்கிற கீழ்ப்பதிகத்தில். இத்தகைய ஆழ்வாரது தடுமாற்றத்தை யாற்றுதற்காக எம்பெருமான், 'ஆழ்வீர்! நீர் ஏன் தடுமாறுகின்றீர்? எனக்கு ஏதேனுமொரு கைம்மாறு செய்யவேணு மென்றுதானே தடுமாறுகின்றீர்; நீரும் ஒன்று செய்து நெஞ்சாறல் தீர்ந்தவராம்படி பண்ண நாம் கருதியிருக்கின்றோம்; பண்டு இராமாவதாரத்திலே நாம் திருவயோத்தியிலே குசலவர்கள் வாயாலே இராமாயணம் செவி சாத்தினோமென்று

கேள்விப்பட்டிருப்பீரே; அப்படியே மலை நாட்டில் திருவாறன்விளைப்பதியிலே திருவாய் மொழி கேட்பதாகப் பாரித்திருக்கின்றோம்; ஆனால் இராமாயணம் கேட்டபோது நாம் பிராட்டியைப் பிரிந்திருந்தோமாதலால் தனி யேயிருந்து கேட்டோமென்கிற குறையொன் றுண்டு; இப்போது அப்படியல்லாமல் நாமும் நம் பெண்டுகளுமாயிருந்து கேட்க அறுதியிட் டிருக்கின்றோம்; நீர் அங்கே வந்து திருவாய் மொழி கேட்பித்து ஒருவாறு நெஞ்சாறல் தீரப்பெறலாமே யென்று பணிக்க, அது கேட்ட ஆழ்வார் 'என்னைக்கொண்டு திருவாய் மொழி பாடுவித்துக்கொண்ட உபகாரத்தள வோடு நில்லாமல் அது கேட்கவும் பாரியா நின்றானே! அதற்கொரு திருப்பதியையும் நிர்ணயித்துத் தெரிவிக்கின்றானே! இது என்ன வியாமோஹம்!' என்று உவகை மேலிட்டு, அந்தத் திருவாறன்விளைத் திருப் பதியிற் சென்று திருவாய்மொழி கேட்பித்த லாகிற கைங்கரியத்தைச் செய்யப் பாரிக் கிறார் இன்பம்பயக்க வென்னும் இப்பதிகத் திலே.

இனி இப்பதிகத்தில் ஒவ்வொரு பாசுரத் தையும் விவரித்து அநுபவிப்போம்.

## 1. இன்பம் பயக்க எழில்மலர் மாதருந் தானும்

திருமால் திருமகளோடு கூடி ஆனந்த மயனாக எழுந்தருளியிருக்குமிடமான திருவா றன்விளைப்பதியிலே அநுபவித்து அடிமை செய்யுங்காலமும் அணித்தாகுமோ? என் கிறார். ஸம்ஸாரி சேதனர்கள் எம்பெருமா னோடு சேர்ந்து ஆனந்த மநுபவிப்பதுபோல எம்பெருமான்தானும் பிராட்டியோடு சேர்ந்தே ஆனந்த மனுபவிக்கப் பெறுகின்றா னென்பது தோன்ற "இன்பம்பயக்க வெழில் மலர் மாதருந்தானும் இவ்வேழுலகை இன் பம்பயக்க இனிதுடன் வீற்றிருந்தாள்கின்ற வெங்கள்பிரான்" என்று முன்னடிகள் பணித்தனர்.

"இவ் வேழுலகையின்பம்பயக்க" என்ற விடத்து முன்னோருரை வாக்கியம் வருமாறு;- "மாதாபிதாக்களிருவரும் சேரவிருந்து பரியப் புக்கால் ப்ரஜைகளுக்கு ஒரு குறையும் பிறவா திறே. இருவருமான சேர்த்தியாலே தங்க ளுக்கு ஆனந்தமுண்டாக, அது தன்னைக் கண்டு, ப்ரஜைபால் குடிக்கக் கண்டு கக்கும் தாயைப்போலே இவர்களுக்குண்டான ப்ரீதி யைக் கண்டு அத்தாலே தாங்கள் இனியரா யிருப்பர்களாயிற்று" என்று.

திருவாய்மொழி கேட்கைக்குப் பாங்கா யிருப்பதொரு தேசம் பெற்றோமென்று பெறுப்பேறு பெற்றாப்போலே விரும்பி யெழுந்தருளியிருக்கிறவிடமென்பது தோன்ற "இனிதுடன் வீற்றிருந்தாள்கின்ற" என்றார். இத்தகைய பெருமான் அத்தலத்திலிருப்பை ஸ்வயம் பிரயோஜனமாகக் கருதி, இராம கிருஷ்ணாதி யவதாரங்கள்போலே திருநாடு சென்று சேர்ந்ததாக வல்லாமே நிச்சலும் உறையுமிடமாய், அவன் தன் பரிஜன பரி வாரங்களோடே யிருந்து திருவாய்மொழி திருச்செவி சாத்துகைக்கீடான பரப்பை யுடைத்தான பூம்பொழிலாலே சூழப்பட்டது திருவாறன்விளைப்பதி; அதனைத் தொழுது வலஞ்செய்து வாழும்படியான காலம் என்றோ? என்றாராயிற்று.

## 2. ஆகுங்கொல் ஐயமொன்றின்றி.

இப்பாட்டில் முதலிலுள்ளதே முடிவிலு முள்ளதுபோல் தோன்ற நிற்கையாலே கூறி யது கூறலென்னுங் குற்றம் சங்கிக்க நேரும். அதாவது, "ஆகுங்கொல் ஐயமொன்றின்றி" என்று முதலிலுள்ளது; 'கைதொழக் கூடுங் கொலோ' என்று முடிவிலுள்ளது. ஆகவே கூறியது கூறலாகுமேயென்று. இங்ஙனே யாகாது. முதலிலும் முடிவிலும் ஆழ்வா ருடைய மனோரதம் காண்கிறது. முதலில் ஸாமான்யமாக மனோரதித்து, முடிவில் அதனை விவரிக்கிறபடியாயுள்ள தென்று கொள்க. [ஐய மொன்றின்றி ஆகுங் கொல்!] நம்முடைய மனோரதம் ஒரு ஸந்தேஹமு மின்றி ஸித்திக்குமா? என்று பொதுவாகக் கூறினபடி. அது எவ்விதமான மனோரத மென்ன, முடிவிலே விவரிக்கிறது. பண்டு எம்பெருமான் திருவடிகளாலளந்த ஆகாசப் பரப்படங்கலும் வியாபிக்கின்ற கொடிகளை யுடைத்தான மாடங்களையும், ஓங்கியிருந் துள்ள மதிள்களையுமுடைய திருவாறன் விளைப்பதியை, சந்தனம் பச்சைக்கருப்பூரம் முதலியவற்றால் வாஸிதமான நறுநீர் கொண்டு தூவிவலஞ் செய்து கைதொழும்பாக்கியம் வாய்க்குமோ! என்றாராயிற்று.

இற்றைக்கும் இத்தலத்திற்குச் செல் லும் மஹான்கள் இப்பாட்டிற் பாரிப்பை அடியொற்றி அங்குத் திருமதிளிலே சந்தன நீர்தெளித்து வழிபடுவர்கள். (தொடரும்.)



நாகராஜர் கர்ப்பக்கிரகம்

# நாகர்கோயில்

நம்முடைய நாட்டில் சில ஊர்கள் கோயில் என்ற பெயருடனேயே அழைக்கப் படுவதால் அதன் சிறப்பு விளங்குகிறது. **நாகர்கோயில்** அத்தகையதே. இத்தலம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ளது. திருநெல்வேலியிலிருந்து 48 கல் தொலைவிலிருக்கிறது. திருவனந்தபுரத்திலிருந்து 42 கல் சென்றால் இவ்வூரையடையலாம். இங்கு செல்ல இருப்புப் பாதை இல்லையானபடியால் பஸ்மூலமாகச் செல்லவேண்டும். பெரிய நகரமானபடியால் இங்கு தங்குவதற்கு எல்லா வசதிகளும் உண்டு.

இங்குள்ள நாகராஜர் கோயில் கழனிகள் சூழ்ந்துள்ள இடத்தில் இருக்கிறது. கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. கோபுரத்திற்குப் பதிலாகவுள்ள மகரமாளிகை என்னும் வாயில் கோயிலின் தென்புறம் இருக்கிறது. கோயிலுக்கு இரண்டு பிரகாரங்கள் உள்ளன. கிழக்குப் பக்கத்தில் இரண்டு திருவாயில்களும், தெற்கே ஒரு வாயிலும் இருக்கின்றன. தெற்கு வெளிப்பிரகாரத்தில் நாகமணி பூதத்தான் சந்நிதியும், வடக்கு வெளிப் பிரகாரத்தில் சாஸ்தா சந்நிதியும் உள்ளன. கோயிலுக்கு வெளியே வடகிழக்கில் திருக்குளம் இருக்கிறது.

கோயிலின் உட்பிரகாரத்துக்குள்ளே போகும் வாயிலின் இருபக்கத்திலும் இரண்டு பெரிய ஐந்துதலை நாகங்களின் உருவங்கள் துவார பாலகராக விளங்குகின்றன. (பின் அட்டைப்படம் பார்க்க). இக்கோயிலில் மூன்று சந்நிதிகள் இருக்கின்றன. அவை நாகராஜர், காசி விசுவநாதர், அனந்தராம கிருஷ்ணர். நாகராஜர் கர்ப்பக்கிரகத்தில் புற்று இருக்கிறது. ஊற்று நீர் சுரந்து கொண்டிருக்கிறது. புற்று மண்ணைத்தான் பிரசாதமாகக் கொடுக்கின்றனர். எவ்வளவு காலமாக எடுத்துக்கொண்டு வந்தபோதிலும் இன்னும் அந்தப் புற்றுமண் குறையாமல் இருப்பது ஒரு அற்புதமே. நாகராஜர் கர்ப்பக்கிரகச் சுவர்கள் கருங்கல்லினால் இருந்தாலும் மேலே கூரை தென்னை ஓலையால்தான் வேயப்பட்டிருக்கிறது. அந்த ஓலையை அர்ச்சகர்கள்தான் புதுப்பிக்கவேண்டும். (ஓலைக் கூரையுடன் கர்ப்பக்கிரகத்தை இக்கட்டுரைத் தலைப்பில் உள்ள படத்தில் காணலாம்). சுமார் 500 ஆண்டுகட்கு முன்னிருந்த களக்காடு மகாராஜருக்குப் பெருவியாதியிருந்து

பல் மருத்துவம் செய்தும் தீரவில்லை. நாகராஜர் கோயிலுக்கு வந்து, தவங்கிடந்து, சர்ப்ப சாந்தி செய்த பின்பே அந்த நோய் தீர்ந்த தாம். அவர் இந்த கோயில் கட்டிடங்கள், பூசை முதலியவற்றிற்கு தானம் வழங்கியிருப்பதை இக்கோயில் கல்வெட்டுக்களில் கூறப்பட்டிருக்கிறது.

நாகராஜர் சந்நிதிக்குத் தெற்கே கிழக்கு நோக்கி காசி விசுவநாதர் சந்நிதியும், அதற்குத்தெற்கே அனந்தராமகிருஷ்ணர் சந்நிதியும் இருக்கின்றன. நாகதோஷம் உள்ளவர்கள் இங்கே நாகப் பிரதிஷ்டை செய்து வழிபடுகின்றனர். தங்கம், வெள்ளி, பஞ்சலோகம் கல் இவைகளால் நாகம் செய்து வைக்கின்றனர். கோயில் மதில்கள், கைப்பிடிச் சுவர்கள் முதலிய எல்லா இடங்களிலும் நாகங்களே காணப்படுகின்றன. மூன்று சந்நிதிகளிலுள்ள மூலவர்களின் சிரசுகளில் நாகாபரணமே உள்ளன. ஒரே மரத்தினால் செய்யப்பட்ட படமெடுத்த ஐந்து தலை நாக உருவம் ஒன்று கோயிலில் இருப்பது மிகவும் அழகானது; உயிருள்ளதுபோல் காட்சியளிக்கிறது. இரண்டு தூண்களில் மகாவீரர், பார்சவநாதர் இவர்களின் திருவுருவங்கள் இருக்கின்றன.

இக் கோயிலில் தைமாதத்தில் பெருந் திருவிழா நடைபெறுகிறது. நாலுகால பூசை நாள்தோறும் நிகழ்கிறது. ஆவணி ஞாயிற்றுக் கிழமைகளில் இங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து வழிபடுகின்றனர். மரத்தினால் செய்யப்பட்ட கால்போன்ற உறுப்புக்கள், மண், சாணம் இவற்றாலான தலைகள், பால், காய்கறிகள், உப்பு, மிளகு, அரிசி, நெல் கதிர்கள், மலர்கள் இவைகளைக் கோயிலுக்குக் கொண்டுவந்து பிரார்த்தனை செலுத்துகின்றனர். பால் பாயசம் படைத்து மக்களுக்கு அப்போது வழங்குகின்றனர்.

அந்த பக்கத்திலேயே நாகராஜருக்குத் தனிப்பட்ட பெருங்கோயில் இது ஒன்றுதான். இதற்கு அனந்தசமுத்திரம் என்ற பெயரும் உண்டு. கோயிலில் பல கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன.

---

**திருவண்ணாமலை :** அண்ணாமலைநாதர் கோயிலில் 2-12-60ல் திருக்கார்த்திகைத் தீப தரிசனம் ஆனவுடன் மாலை 6-30 மணிக்கு திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நிறுவியுள்ள தருமநிதியிலிருந்து அந்தணர்களுக்கும், அருந்தவர், ஏழைகள் முதலியவர்களுக்கு அன்னம்பாலிப்பு செய்விக்கப்பெற்றது.

**திருவண்ணாமலை :** அருணாசலேசுவரர் கோயிலில் கார்த்திகைப் பெருவிழாவையொட்டி நடைபெற்ற சமயப்பேரவை சக்தி விலாச சபா மண்டபத்தில் 26-11-60 முதல் 1-12-60 வரை (4-ம் திருவிழா முதல் 9-ம் திருவிழா) நடைபெற்றது. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி. அவர்கள் இவ்விழாவைத் துவக்கி வைத்தார்கள். பல பேரறிஞர்கள் தலைமை தாங்கியும், சொற்பொழிவாற்றியும் சிறப்பித்தார்கள்.

**பூவானூர் :** சதுரங்கவல்லபநாதசுவாமி கோயிலில் 1008 சங்காபிஷேக விழா 21-11-60ல் நடைபெற்றது.

**சங்கரநயினார்கோயில் :** சங்கரநாராயணசுவாமி கோயிலில் திருக்கல்யாணத் திருவிழா 4-11-60 முதல் 14-11-60 வரை நடைபெற்றது. 14-11-60 அன்று காலையில் கோமதி அம்பாள் தபசுக்கு எழுந்தருளி அன்று மாலை சங்கரலிங்கசுவாமி காட்சி அருளிய பின் இரவு 12 மணிக்குத் திருக்கல்யாணம் நடைபெற்றது. 10, 11-11-60 தேதிகளில் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் சொற்பொழிவு நடைபெற்றது.

**சென்னை :** அருணாசலேசுவரர் கோயிலில் கார்த்திகைத் தீப தரிசனப் பெருவிழா 22-11-60 முதல் 3-12-60 வரை நடைபெறும்.

# திருவையாறு ஒலோகமாதேவீச்சரக் – கல்வெட்டு வரலாறு

[வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார், அண்ணமலைப் பல்கலைக் கழகம்]

## இடமும், எடுப்பித்தவரும், காலமும்

ஒலோகமாதேவீச்சரம் என்பது திருவையாற்றில் ஐயாறப்பர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலின் வடபாற் பெரியபுறத் திருச்சுற்றுலையின்கண் இருக்கும் ஒரு கற்கோயிலாகும். இதனை எடுப்பித்தவர் இஞ்சிசூழ் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு சோழ மண்டலத்தைக் கி.பி. 985 முதல் கி.பி. 1014 வரை ஈடும் எடுப்புமின்றி ஆண்ட முதல் இராசராச மன்னனுடைய முதன் மனைவியாராகிய ஒலோகமாதேவியாராவர். இவ்வம்மையாரால் எடுப்பிக்கப் பெற்றமையின் இது ஒலோகமாதேவிச்சரம் *என்னும் பெயர் பெற்றது. இச்செய்தி "ஸ்ரீ ராசராச தேவர் நம்பிராட்டியார் தந்திசத்தி விடங்கியாரான ஒலோகமாதேவியார் வடகரை இராசேந்திர சிம்ம வளநாட்டுத் தேவதானம் திருவையாற்றுப்பால் எடுப்பித்த திருக்கற்றளி ஒலோகமாதேவீச்வரமுடையார்க்கு"—என்னும் இக்கோயிற் கல்வெட்டுப் பகுதியால் அறியக் கிடக்கின்றது. மேலும் இதற்குமுன் இங்குக் கோயில் இல்லை என்பதையும் இக்கல்வெட்டுப் பகுதியால் உய்த்துணரலாம்.

இக்கோயிலில் இராசராச மன்னன், அவன் மகனாகிய முதல் இராசேந்திரன் அல்லது கங்கைகொண்ட சோழன், இவன் மகனாகிய முதல் இராசாதிராசன் என்னும் மூன்று சோழ மன்னர்கள் காலத்துக் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவைகளுள் முதல் இராசராசன் அரியணையேறிய 21-ஆம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டே மிகப் பழமையானதாகும். இராசராச சோழன் கி.பி. 985-ஆம் ஆண்டில் அரியணையேறினன் என்பது ஆராய்ச்சியாளரின் ஒத்த முடிபாகும். அந்த ஆண்டுடன் இக் கல்வெட்டுப் பொறிக்கப்பெற்ற காலமாகிய கி.பி. 21-ம் கூட்ட கி. பி. 1006 ஆகும். இக்கோயிற்றிருப்பணி முடிவு பெற்றதற்கும் சாசனம் எழுதத் தொடங்கியதற்கும் இடையில் சில திங்களாவது கழிந்திருக்க வேண்டும். ஆயின் கி.பி. 1005 க்கும் கி.பி. 1006 க்கும் இடையில் அதாவது இற்றைக்கு 954 ஆண்டுகளுக்கு முன்னர் இக்கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டுமென்பது உறுதி. எனவே தஞ்சை இராசராசேச்சரத்தைக் காட்டிலும் இக்கோயில் பழமைவாய்ந்ததாகும். அது கி.பி. 1009 இல் கட்டப்பெற்று முடிவுற்றது என்பது அறிஞர்களின் துணிபு.

*எடுப்பித்தவர் பெயரால் இராசராசேச்சரம், கங்கைகொண்ட சோழேச்சரம் எனப் பிற கோயில்கள் வழங்கப்படுதலும் காண்க.

## இக்கோயிலின் பாகுபாடும் சிற்ப வன்மையும்

இக்கோயில் உண்ணாழிகை அல்லது கர்ப்பஇல், (Central shrine) இடைநாழிகை (அ) அர்த்தமண்டபம், பெருநாழிகை (அ) மகா மண்டபம் என்னும் மூன்று பிரிவுகளைத் தன்னகத்து கொண்டு விளங்குகின்றது. இக் கோயில் கர்ப்ப இல்லின் தென்புறச் சுவரில் மானும் பாம்பும் கிடக்கும் ஒரு மலையின் உச்சியில் கல்லாலின் புடையமர்ந்து, முயலகனைத் திருவடியிற் கிடத்தி நான்கு திருக்கைகளுடன் நல் இருக்கையாக வீற்றிருந்து சனகர் முதலிய இருடிகள் நால்வர்க்கும் அறவுரை பகரும் அண்ணல் அறம் உரைத்த நாயனாரின் (தக்ஷிணாமூர்த்தி) திருமேனியும் பிறவும் இக்கோயிலின் சிற்பவன்மையை இனிது விளக்குவனவாகும்.

## எழுந்தருளுவித்த திருமேனிகள்

மிகப் பெருமைவாய்ந்த இத் திருக்கோயிலில் இவ்வம்மையார் ஒலோகமாதேவீச்சரமுடையார், ஒலோகவிடங்க தேவர், அவர் தம்பிராட்டியார், பிள்ளையார், முருகன், ஆடவல்லார், சண்டேசுவரர் இவர்கள் திருமேனிகளை எழுந்தருளுவித்துள்ளார். இவர்களுள் ஒலோகமாதேவீச்சரமுடையார் என்பது கர்ப்ப இல்லில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருப்பெயராகும். ஒலோகவிடங்கதேவர், ஆடவல்லார் என்பன முறையே தியாகராசப்பெருமான், நடராசப்பெருமான் இவர்களுடைய திருப்பெயர்களாகும். ஏனையவை வெளிப்படை.

## பூசை முதலியன

இக்கோயிற் சிவபெருமானுக்கு நான்கு கால பூசைகள் நடைபெற்று வந்தன. நெய் கொண்டு நுந்தா விளக்குகளும் சந்தி விளக்குகளும் பல ஏற்பட்டு வந்தன. பருப்பமுது, கறியமுது, போனகம், பொறிக் கறியமுது, தயிரமுது, சர்க்கரையமுது, அப்ப அமுது இவைகள் கொண்டு திருவமுது செய்விக்கப் பெற்றன.

## விசேட பூசைகள்

அயன சங்கிரமணம் இரண்டு, விஷு சங்கிர மணம் இரண்டு, திங்கட்டொடக்கம் எட்டு, இவைகளில் விசேட பூசைகள் நடைபெற்றன. கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளில் மிகுதியான விளக்குகள் ஏற்றப்பட்டு வந்தன.

## திருவிழாக்கள்

இவ்வம்மையார் தம் கணவனார் பிறந்த நாளாகிய சதயத் திருவிழாப் பன்னிரண்டும், சித்திரைப் பெருந்திருவிழா ஒன்றும், ஆகப் பதின்மூன்று திருவிழாக்களையும் இத்தலத்து நடத்துவித்தார். இவைகளுள் சதயத்திருவிழா திங்கள்தோறும் நடைபெற்று வந்தமையால் திங்கள் விழா என்று பெயர்பெறும். சித்திரைப் பெருந்திருவிழா ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில் நடைபெற்று வந்தமையால் ஆண்டுவிழா என்று பெயர்பெறும். இவைகளுக்குத் தக்க நிவந்தங்கள் விடப்பட்டிருக்கின்றன.

## திருவாபரணங்களும் திருப்பரிகலங்களும்

இவ்வம்மையாரும் இவர் குடும்பத்தார்களும் கொடுத்துள்ள பொன்னாற்செய்து மணிகள் பதித்த அணிகலன்களுக்கும் வெள்ளியாற் செய்த பரிகலங்களையும் எவரும் மாற்றிவிடா வண்ணம் நிறையெடுத்து அவற்றில் மணிகள் சேர்க்கப்பெற்றிருப்பின் அவை இத்துணை என்று உரைத்திருப்பது மகிழ்தற்குரியதாகும். (பரிகலம்—என்பது இறைவர் முதலியோர் திருவமுது செய்தலுறும் பாத்திரம்).

## அணிகலன் வகைகள்

இக்காலத்தில் வழக்கத்தில் இல்லாத பல அணிகலன்களின் பெயர்கள் இக்கோயில் கல்வெட்டுக்களால் தெரியவருகின்றன. அவைகள் கோளகை, தாழ்கூட்டுக் கம்பி, ஓரணை, திரிசரம், பஞ்சசரி, ஸ்ரீசந்தம், முத்தின் வளையல், முத்தின்பட்டிகை, குதம்பை, நீலத்தின் உழுத்தோரணை, முத்தின் உழுத்தோரணை, திருச்சன்னவடம், முத்தின் காற்காறை, சுட்டி, இடுக்கு வளையல் முதலியன.

## பரிகலன் வகைகள்

மானவட்டில், வெள்ளித் தளிகை, வெள்ளிமண்டை, வெள்ளிக் கலசம், வெள்ளிச் சட்டுவம், வெள்ளிக்கச்சோலம் முதலியன.

## பலவகை இசைக் கருவிகள்

இக்கோயில் வழிபாடு நடக்குங்கால் உடுக்கை, உவச்சன் தலைப்பறை, கண்டை, திமிலை, மத்தளம், வீணை, கறடிகை, முதலியவைகளைக் கொண்டு இசைகள் இயக்கப்பட்டு வந்தன.

## கோயிற் பணிப்பெண்கள்

இக்கோயிலில் ஆடல் பாடல் முதலிய பணிகளைச் செய்வதற்குப் பதியிலார் முப்பத்திருவர் இருந்தனர். அவர்களுக்கு மொத்தத்தில் பதினாறு வேலி நிலங்கள் விடப்பட்டிருந்தன. இக்கோயிற் கல்வெட்டுப் பகுதியிற் காணப்பெறும் "நக்கன் ஐயாறன் கலியுக சுந்தரத் தலைக்கோலியும் உள்ளிட்ட முப்பத்திருவர்" என்னும் தொடரால் இவர் தலைக்கோற் பட்டம் பெற்றவர்கள் என்று தெரிகின்றது. தலைக்கோல் என்பது ஆடல்பாடல்களிற்

சிறந்த பதியிலார்களுக்கு அரசனால் கொடுக்கப்படும் பட்டமாகும். இச் செய்தியைச் சிலப்பதிகாரமும் விளக்கும். இப்பதியிலார் பெயர்களின் முன் நக்கன் என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டதிலிருந்து இவர்கள் சிவப்பணிக்கு உரியவர்கள் என்பதும் தெரிய வருகிறது. நக்கன் என்பது சிவபெருமானுக்குரிய பெயர்களில் ஒன்றாகும்.

## இத்தளிசெய்தவன் பெயர்

சிற்ப நுட்பம் வாய்ந்த இக்கோயிலைச் செய்தவன் நக்கன் நச்சனான கலியுகராம்பைப் பெருந்தச்சன் ஆவன்.

இச்செய்தி கங்கைகொண்ட சோழனின் மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டுப் பகுதியிற் காணப்பெறும் "மேற்படி தளிசெய்த நச்சனான கலியுக ரம்பைப் பெருந்தச்சனுக்கும் மரத்தச்சக் காணியால் நிலன்காலும்" என்னும் தொடரால் அறியலாகும்.

## நிலநிவந்தம்

இக்கோயிலுக்கு ஒலோகமாதேவியார் இராசேந்திர சிங்கவளநாட்டு, மிறைக்கூற்றத்துக் கலவாய்த்தலை என்னும் ஊரில் வீர நாராயண சதுர்வேதிமங்கலத்தார்க்கு நீர் போகும் குஞ்சரமல்லி வாய்க்காலுக்கு வடபாற் சற்றேறக்குறைய 102 வேலி நிலத்தை நிவந்தமாக விட்டிருந்தார். இந்நிலநிவந்தம் திருவமுது, திருவிளக்கு உள்ளிட்டவற்றுக்குப் பற்றாதொழிந்தமையால், கங்கைகொண்ட சோழனது மூன்றாவது ஆண்டில் அதாவது கி.பி. 1017-இல் இம்மம்மையார் (ஒலோகமாதேவியார்) இக் கலவாய்த்தலை சாசனத்தில் சில மாறுபாடுகளைச் செய்துள்ளார். இச் சாஸனத்தை ஒவ்வொருவரும் படித்து அறிதல் வேண்டும். இதிற்குறித்த இராசேந்திரசிங்க வளநாடாவது காவிரிக்கும் சிதம்பரத்திற்கு வடபால் ஓடும் வெள்ளாற்றிற்கும் வடபால் பட்ட பெருநிலப் பரப்பாகும். இது 24 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் மிறைக் கூற்றம் என்பது ஒன்றாகும். விறைக் கூற்றம் என்றும் இது வழங்கப்பெறும். இது பொய்கை நாட்டிற்கும் இன்னம்பர் நாட்டிற்கும் இடைப்பட்டது. காமரவல்லி அல்லது காமரவல்லி சதுர்வேதிமங்கலம், பார்த்திவசேகர சதுர்வேதிமங்கலம், இராமனூர், கள்ளூர், திருப்பழனம், திருத்தேவன்குடி, வடகுரங்காடுதுறை என்னும் ஊர்கள் இக் கூற்றத்துட்பட்டிருந்தவற்றுள் சிலவென்று கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

(S. I. I. Vol. II Part V, Introduction Page 23)

எனவே திருவையாற்றிலிருந்து பழுவூர்க்குப் போகும் பெருவழிக்குக் கிழக்கு, காவிரியின் வடகரையாகிய கரிகாலன் கரைக்கு வடக்கு, சுவாமிமலை, ஆதனூர் இவைகளுக்கு மேற்கு இப்பகுதிக்குட்பட்ட எல்லைக்குள் இக்கலைவாய்த்தலை என்ற ஊர் இருந்திருக்கவேண்டும். மேற்குறித்த காமவல்லி முதலான சில ஊர்கள் கொள்ளிடப் பேராற்றுக்கு வடபால் இருக்கின்றன. ஆகையால் அவ்வாற்றிற்கு வடபாலும் இக்கூற்றம் பரவியிருந்தமை புலனாகும். *குஞ்சரமல்லி வாய்க்கால் என்பது மண்ணியாற்றிற்குள்ள வேறு பெயராகும்.

## சாசன வழக்குச் சொற்கள்

சாசனத்துள் அக்காலத்து வழங்கிய சொற்களைக் கேட்கின் மிகவும் மகிழ்ச்சி விளையுமாதலின் அவற்றுட் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடுகின்றேன். அவை திருவமுது, திருப்பரிகலம். திருப்பரிசட்டம், திருப்பள்ளித் தாமம் என்பன. இவைகளுள் திருப்பரிசட்டம் என்பது கடவுட்குச் சாத்தும் ஆடையாகும். இச்செய்தி "திருப்பரிசட்டம் கழுவும் வண்ணானுக்கு", "திருப்பரிசட்டம் ஒலிக்கும் வண்ணத்தானுக்கு" என்னும் இக்கோயில் கல்வெட்டுப்பகுதிகளால் அறியலாகும். இக்காலம் இச்சொல் திருப்பரிவட்டம் என்று வழங்குகிறது. திருப்பள்ளித் தாமம் என்பது பூ ஆகும். "திருப்பள்ளித் தாமம் பறிப்பார்க்கும்" என்னும் வேற்றிடங்களிலுள்ள கல்வெட்டுக்களிலும், "திருப்பள்ளித்தாமம் செய்து" என்னும் எறிபத்த நாயனார் புராணத்தின் ஒன்பதாம் பாடல் அடியாலும் இச் செய்தி நன்கு விளங்கும்.

## வரலாற்றுச் செய்திகள்

சோழ வம்ச சரித்திரச் சுருக்கம் எழுதிய உயர்திரு. T. A. கோபிநாதராயார்

---

*"இவ்வூர் நிலத்தாறேபோன ஆறு மண்ணியான குஞ்சரமல்லனால் நீங்கும் நிலத்து நிலம் மும்மாவரைக்காணிக் கீழ்காலும்" என்பது திருப்பனந்தாள் தாடகை ஈச்சரத்துக் கல்வெட்டுப் பகுதி.

A. R. E. 1932, Page 51.

M.A. அவர்கள் திருவலஞ்சுழி சாசனப்பகுதியைக்கொண்டு முதல் இராசராச மன்னனுக்கு மாதேவடிகளார், குந்தவையார் II, என்னும் இவர்களோடு மற்றொரு பெண்ணும் இருக்கவேண்டு மென்று ஊகித்தார்கள். (சோழ வம்ச சரித்திரச் சுருக்கம்—இரண்டாம் பதிப்பு-பக்கம் 15) அவர்கள் ஊகம் இக்கோயில் கல்வெட்டால் உறுதி எய்துகின்றது. அப்பெண்ணின் பெயர் அருமொழி சந்திர மல்லியரான கங்கமாதேவியார்* என்பதாம். இராயர் அவர்களுக்குப்பின் முதல் இராசராசனைப்பற்றி எழுதிய வரலாற்று ஆசிரியர்களுடைய கண்ணுக்குப் புலப்படாமல் பூமியில் புதையுண்டு கிடந்த இக்கல்வெட்டைப் பிடித்து எழுதியதன் பயனை இராயர் அவர்கள் இருப்பின் கேட்டுப் பெருமகிழ்வுறுவார்கள்.

## ஆராயவேண்டிய பகுதி

இக்கோயிலிலுள்ள முதல் இராசாதிராச மன்னன் காலத்துக் கல்வெட்டிற் "சாதனமுடைய கேத்திர சிவபண்டிதர்க்காக திரு ஆராதனை செய்யும் ஆத்திரையன் நம்பிகாடநம்பியும்" என்ற தொடரால் இந்நம்பியார் ஒன்பதாந் திருமுறையாசிரியர்களுள் ஒருவராகிய பூந்துருத்தி நம்பி காடவநம்பியாக இருக்கக் கூடுமா? ஆய்ந்து முடிவு செய்தால், இவ்வாசிரியரை இம்முதல் இராசதிராச மன்னன் காலத்தினராகக் கொள்ளலாம். ஆராய்ச்சியாளர்கள் ஆராய்வார்களாக.

## சோழ மன்னர்களின் அரசியற் சிறப்பு

சோழ மன்னர்கள் எதையும் தாமே செய்துவிடலா மெனினும் தமது உடன் கூட்டத்து அதிகாரிகளுடன் கலந்தே செய்வது வழக்கம். இவ்வுடன் கூட்டத்து அதிகாரிகள் மந்திராலோசனை சபைக்கு உரிய அமைச்சர் பிரிவினர்களில் அடங்கியவராவார். அமைச்சுரிமைக்கு மிகுதியான கல்வி வேண்டும். சொல்லாற்றல் வேண்டும். தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் சொல்வன்மையை அமைச்சியலில் வைத்திருப்பதன் நோக்கமும் இது வேயாகும். இத்தகைய உடன் கூட்டத்து அதிகாரப் பதவியில் ஆண்களேயன்றிப் பெண் மக்களும் தேர்ந்து கொள்ளப்பட்டிருந்தனர். இச் செய்தியை முதல் இராசராசனது கல்வெட்டுப் பகுதியிற் குறிக்கப்பெறும் "அதிகாரிச்சி சோமயன் அமித்திரவல்லியும் ஆக இவ்வனைவர்கண்காணியால்" என்னும் தொடரும் வலியுறுத்தும். இங்ஙனம் சோழமன்னர்கள் பெண்மக்களுக்கும் அரசியலில்உரிமை கொடுத்து ஆண்ட திறம் மிகமிக மகிழ்தற் குரியதாகும்.

*இதை உணர்த்தும் கல்வெட்டும், கலைவாய்த் தலை சாசனக் கல்வெட்டும் தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் வெளிவராதவை. இவைகள் பின்னர் வெளிவரும்.

## *கோயிலை எடுப்பித்த திரு. ஒலோகமா தேவியாரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு

முதல் இராசராச மன்னனுடைய முதற் பெருந் தேவியாராகிய இவர்க்குத் தந்திசத்தி விடங்கியார் என்ற மறுபெயரும் உண்டு. இச் செய்தி 'தந்திசத்தி விடங்கியாரான ஸ்ரீ ஒலோகமாதேவியார்' என்னும் இக்கோயிற் கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது.

இவ்வம்மையார் எந்த அரசகுடியில் பிறந்தவர் என்பதை இதுபொழுது அறிதற்குத் தக்க சாதனம் கிடைத்திலது. இவ்வம்மையார் இக்கோயிலை எடுப்பித்து இதற்கு விட்ட நிவந்தங்கள் மிகப் பலவாகும். இவ்வம்மையாரேயன்றி விஷ்ணுவர்த்தன மகாராசாகிய விமலாதித்த தேவர் முதலானோரும் அணிகலன் முதலியவைகளை அளித்திருக்கின்றார்கள். இவ்வம்மையார் கும்பகோணத்திற்குப் பக்கத்தில் திருவலஞ்சுழியில் க்ஷேத்ரபாலதேவர்க்குச் சிறு கற்றளி ஒன்றையும் எடுப்பித்துள்ளார். இவ்வம்மையார் தஞ்சை இராசராசேச்சரத்தில் பிச்சதேவரை எழுந்தருளுவித்து அவர்க்குத் திருவமுது உள்ளிட்டு வேண்டுவனவற்றுக்கு நிவந்தங்கள் அளித்துள்ளதோடு அணிகலன்களையும் தந்துள்ளனர். இவர் கும்பகோணத்திற்கு அண்மையிலுள்ள திருவிசலூர் மகாதேவர் ஸ்ரீ கோயிலில் இரணிய கர்ப்பம் புக்கருளினரென்றும், அற்றை நாளில் அத்தேவர்க்கு அக்காரவடிசிலமுதுக்கு வேண்டும் நிவந்தங்களுக்காக நானூற்றைம்பத்தெட்டுக் காசுகளை வைத்தனர் என்று அவ்வூர்க் கல்வெட்டொன்று அறிவிக்கின்றது. இம்வம்மையாரின் பிரதிமத்தைப் பொய்கைநாடு கிழவன்

*வேற்றூர்க் கல்வெட்டுக்களைக் கொண்டும் இவ்வரலாறு எழுதலாயிற்று.

ஆதித்தன் சூரியனை தென்னவன் மூவேந்த வேளான் தஞ்சைப் பெரிய கோயிலில் எழுந்தருளுவித்துள்ளான். (S. I. I. Vol II Part II Page 155). தென்னார்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் வட்டத்தில் உள்ளதும், இக்காலம் ஒலகபுரம் என்று வழங்கப்பெறும் ஒலோகமாதேவிபுரத்துக்கு இவ்வம்மையாரின் திருப்பெயர் வைக்கப்பெற்றுள்ளது. அவ்வூர்க் கல்வெட்டுக்கள் அவ்வூரை ஒய்மாநாட்டுந் தனியூர் ஒலோகமாதேவிபுரம் என்றே குறிப்பிடுகின்றன. (A. R. E. 1919 Nos 125—145) இங்ஙனமே தஞ்சை மாவட்டத்தில் வெண்ணிக் கூற்றத்திலுள்ள திருப்பூண்டிக்கு ஒலோகமாதேவி சதுர்வேதி மங்கலம் என்று இம்வம்மையாரின் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

முடிப்புரை: இவ்வம்மையாரது சிவநெறிப் பற்றின் மாண்பு பெரிதும் போற்றற்குரியது. இவரது புகழுக்கும் பெருமைக்கும் நிலைக்களமாய் இருக்கும் மேற்குறித்த இரு கோயில்களையும் என்றென்றும் போற்றி வருதல் சைவ நன்மக்களின் தனிப்பெருங் கடமையாகும்.

---

**பெரியகாஞ்சிபுரம் :** மெய்கண்டதேவநாயனார் குருபூசை விரிவுரை விழா 30-10-60 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீஞானப்பிரகாச தேசிகசுவாமிகளாதீன மடாலயத்தில் நடைபெற்றது. சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ். அவர்கள் அவ்விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். திரு. ஆ. விநாயக முதலியாரவர்கள், திரு. சி. அருணைவடிவேல் முதலியாரவர்கள், திரு. சச்சிதானந்த சிவகுமாரன் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

**விருத்தாசலம் :** விருத்தகிரீசுவரசுவாமி முன் மண்டபத்தில் தென்னாற்காடு மாவட்டம் அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் திரு. ஆர். ஏ. வரதராஜ அய்யர் பி.ஏ., அவர்கள் தலைமையில் "முருகன் பெருமை" என்னும் பொருள்பற்றி திரு. எஸ். சேதுசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

**சென்னை :** சென்னமல்லீசுவரர், சென்னகேசவப் பெருமாள் கோயிலில், சைவ வைணவ ஆகமப்பயிற்சித் துவக்க விழாவை 2-11-60ல் சென்னை அறநிலைய அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ். அவர்களும் கலந்துகொண்டார்கள்.

**திருமயிலாடி :** சுந்தரேசுவர சுவாமி கோயிலிலுள்ள பாலசுப்பிரமணியசுவாமிக்கு கந்தர்சஷ்டி விழா 6 நாட்களும் 4 நாட்கள் திருக்கல்யாண விழாவும் ஆக இப்பத்து நாட்களிலும் சமயச்சொற்பொழிவுகளும் இன்னிசையரங்கும் நடைபெற்றன. விடையாத்தி விழாவை ஏலத்தூர் பிரமுகர் திரு. வேணுகோபால்ராஜா அவர்கள் சிறந்தமுறையில் நடத்திக்கொடுத்து பெரியநாயகி அம்பாள் சன்னிதியில் ரூபாய் 300 செலவில் சரவிளக்குகள் உபயமும் செய்வித்துள்ளார்கள். இதற்கு முன்னர் திருஇராஜா அவர்கள் 10¼பவுன் எடையில் தங்கவேல் ஒன்று செய்து பாலசுப்பிரமணியசுவாமிக்கு உபயம் செய்திருக்கிறார்கள்.

**சங்பரநயினார்கோயில் :** சங்கரநாராயணசுவாமி கோயிலில் 27-10-60ல் திருமுறைக்கோயில் ஊர்வலமாக நான்கு இரதவீதிகளிலும் எடுத்துச்செல்லப்பட்டு பின் சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ். அவர்களால் நடராஜர் சந்நிதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

# வழுவூர்



வழுவூர் வீரட்டேசுவரர்கோயில்

காவிரியின் கரைக்கண்டி வீரட்டானம்
கடவூர்வீ ரட்டானம் காமருசீ ரதிகை
மேவியவீ ரட்டானம் வழுவை வீரட்டம்
வியன்பறியல் வீரட்டம் விடையூர்திக்
[கிடமாம்
கோவல்நகர் வீரட்டம் குறுக்கைவீ ரட்டம்
கோத்திட்வட குடிவீரட் டானம் இவைகூறி
நாவில்நவின் றுரைப்பார்க்கு நணுகச் சென்றால்
நமன்தமரும் சிவன்தமரென் றகல்வர்
[நன்கே
—திருநாவுக்கரசர்

பாடல் பெற்ற பதிகளில் சிலவற்றை அவைகளின் தனிச்சிறப்புக்கேற்பத் தொகுத்துக் கூறியிருக்கின்றனர் ஆன்றோர். பஞ்ச பூதத்தலங்கள், பஞ்ச சபைத்தலங்கள், முத்தித் தலங்கள், தாண்டவச் சிறப்புத்தலங்கள், சப்தவிடங்கத்தலங்கள், அட்டவீரட்டத்தலங்கள் முதலியவை அத்தகையன.

பூமன்சிரம்கண்டி, அந்தகன்கோவல், புரம்அதிகை
மாமன்பறியல், சலந்தரன்விற்குடி, மா வழுவூர்
காமன்குறுக்கை, யமன்கடவூர், இந்தக் காசிதனில்
தேமன்னு கொன்றையுந் திங்களுஞ்சூடிதன்
[சேவகமே

என்ற பாடலில் இறைவன் எட்டுத்தலங்களில் நிகழ்த்திய வீரச் செயல்களைக் கூறப்பட்டிருக்கிறது. அவைகளில் ஒன்று வழுவூர் என்பது. மற்ற ஏழுபதிகளும் தேவாரப்பதிகங்கள் பெற்றவை. ஆனால் வழுவூர் தேவார வைப்புத்தலம்தான். இவ்வூர் தஞ்சை மாவட்டத்தில் மாயூரப்பகுதியில் இருக்கிறது. மாயூரம் - அறந்தாங்கி இருப்புப் பாதையில் மங்கைநல்லூர் அல்லது இலந்தங்குடி என்ற நிலையத்தில் இறங்கி சுமார் ஒரு கல் தொலைவு மேற்கே சென்றால் இப்பதியைச் சேரலாம். மாயூரமிருந்து திருவாரூர் செல்லும் பஸ் மூலம் ஏழு கல் சென்று மேற்கே ஒரு கல் நடந்தாலும் இவ்வூரை யடையலாம். பிரளய காலத்தில் உலகமெல்லாம் அழிந்தும் இவ்வூர் அழியாமல் வழுவின காரணத்தால் வழுவூர், வழுவை எனப் பெயருண்டானதாகத் தலபுராணம் கூறுகிறது. இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்களில் வழுகூர் என்ற பெயர் குறிக்கப்படுகிறது. ஞானபூமி, பரகைலாசம் என்ற பெயர்களும் உண்டு. வடமொழியில் ச்யுதபுரி, பிப்பலாரண்யம் என்ற பெயர்களும் சொல்லப்படுகிறது.

ஊர்நடுவே கோயில் நடுநாயகமாக விளங்குகிறது. கோயில் வாயிலை ஐந்துநிலைக் கோபுரம் ஒன்று அழகு செய்கிறது. அதன் உயரம் 150 அடி. கோபுரவாயிலுள்ளே நுழைந்ததும் எதிரே திருக்குளம் காட்சியளிக்கிறது. கோயிலில் மூன்று பிரகாரங்கள் உள்ளன. இரண்டாவது பிரகாரத்தின் வட



வழுவூர் மோகினி

மரம் ஒன்றிருக்கிறது. இப்பதிக்கு ஒன்பது தீர்த்தங்கள் உண்டு. இறைவனுக்குள்ள திருமுகங்களான ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்ற ஐந்தையும் குறிக்க ஐந்து தீர்த்தங்களும், மற்றும் மூகமோசனம், வித்யாதீர்த்தம், திரிவர்க்கம், ஞானம்ருதம் என்ற நான்கும் ஆக நவதீர்த்தங்கள் உள்ளன. ஈசானதீர்த்தம் கோயிலுள் சந்நிதிக்கெதிரேயுள்ளது. சிவபாதாள கங்கை என்றும் அதற்குப் பெயர் உண்டு.

இத்தலத்திற்குச் சிறப்பான நிகழ்ச்சிகள் இரண்டு. அவை இறைவன் பிட்சாடனர், கஜசம்மாரர் என்ற இரு உருவங்களில் தோன்றியது. தாருகவனத்து முனிவர்கள் செருக்கினால் இறைவனை மதியாதிருந்தனர். சிவபெருமான் அழகிய பிட்சாடனர் கோலத்திலும், திருமால் மோகினி உருவத்திலும் அவர்கள் முன் தோன்றினர். முனிவர்கள் அபிசாரயாகம் செய்தனர். அதனின்றும் தோன்றிய படபா என்ற நெருப்பை ஏவினர். அவ்வனலை இறைவன் கையில் தாங்கினான்; மான், மழுவு இவைகள் செல்ல அவைகளைத்திருக்கரத்தில் ஏந்தினன்; புலியை உரித்து ஆடையாக அணிந்துகொண்டனன்; பாம்புகளை ஆபரணங்களாகத் தரித்துக்கொண்டனன்; முயலகனைக் கீழே தள்ளி முதுகில் ஏறி நின்றனன்; மந்திரங்களை உடுக்கை வடிவாக்கிக் கையில் வைத்துக் கொண்டான். முனிவர்கள் மோகினியைக் கண்டு மதிமயங்கினர். தங்களால் ஒன்றும் செய்ய முடியாமல் கர்வம் அடங்கி இறைவனை வழிபட்டனர்.

கிழக்குக் கோடியில் நூற்றுக்கால்மண்டபம் இருக்கிறது. அதே பிரகாரத்தில் கிழக்கு நோக்கி சகஸ்ரலிங்கர் சந்நிதி யிருக்கிறது. உட்பிரகார வாயிலில் நுழைந்ததும் ஞான சபையும் பிட்சாடனர் சந்நிதிகளும் இருக்கின்றன. பிட்சாடனர் உலோகச் சிலை வேறெங்குமே காணப்படாத அதியற்புதமானது. கஜசம்மாரமூர்த்தியும், மோகினியம்மனின் திருவுருவங்களும் மிகவும் அழகியவை.

இத்தலத்திறைவன் சுயம்புலிங்கமூர்த்தி வீரட்டேசுவரர், கிருத்திவாசேசுவரர் என்றும் திருநாமங்கள். அம்பிகையின் சந்நிதி இறைவன் சந்நிதிக்கு வடபுறம் தனிக்கோயிலாக இருக்கிறது. அம்பாளின் திருப்பெயர் இளங்கிளைநாயகி என்பது. வடமொழியில் பாலாங்குராம்பிகை என்பர். கிருபாவதி என்றும் கூறுகின்றனர்.

இத்தலத்திற்குரிய விருட்சம் தேவதாரு. அம்மன் சந்நிதிக்குப் பின் வன்னி

யானை உருவங்கொண்ட கஜாசுரன் அரியவரங்களைப் பெற்று முனிவர்களையும் தேவர்களையும் துன்புறுத்தி வந்தான். சிவபெருமான் அவன் உடலுக்குள்ளே பாய்ந்து அதைக் கிழித்துக்கொண்டு வெளிவந்து உக்கிரமூர்த்தியாக அதன் மத்தகத்தின் மேல் நின்று தாண்டவம் செய்தான். இந்த

நிகழ்ச்சியை மாசிமகத்தன்று பெருந் திருவிழாவாகக் கொண்டாடுகின்றனர்.

இத்தலத்தைப்பற்றிய பெருமைகள் வடமொழியில் சிவமகாபுராணத்து ஈசானசங்கிதையிலும், பாத்மபுராணத்திலும், ஸ்காந்தபுராணத்திலும் விரிவாக சொல்லப்பட்டிருக்கின்றன. அப்பர் சுவாமிகள் திருத்தாண்டகத்தில் இருசெய்யுட்களில் இப்பதியைப் பற்றிக் கூறியுள்ளார். ஒன்று அட்டவீரட்டத்தைப்பற்றியது இக்கட்டுரைத் தலைப்பிலுள்ளது. மற்றொன்று க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம் பின்வருவது :—

உஞ்சேனை மாகாளம் ஊறல் ஓத்தூர்
உருத்திர கோடிமறைக் காட்டுள்ளும்
மஞ்சார் பொதியின்மலை தஞ்சை வழுவூர்
வீரட்டம் மாதானம் கேதாரத்தும்
வெஞ்சமாக் கூடல் மீயச்சூர் வைகாவேதீச்
சுரம்வீசுரம் வெற்றியூரும்
கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக் கையும்
கயிலாய நாதனையே காண லாமே.

இப்பாடல்களேயன்றி அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவருமே தேவாரத்தில் பல பாடல்களில் யானையை இறைவன் உரித்துப் போர்த்திக்கொண்ட அற்புதத்தைச் சிறப்பித்துள்ளனர். கபிலர், பரணதேவர் முதலியவர்களும் இச்செயலைப் புகழ்ந்து பாடியுள்ளனர். அருணகிரிநாதரும் "தருவூரிசை" என்று தொடங்கும் திருப்புகழில்

மருவூர்குளிர் வாவிகள் சோலைகள்
செழிசாலிகு லாவிய கார்வயல்
மகதாபத சீலமுமே புனை வளமூதூர்
மகதேவர்பு ராரி சதாசிவர்
சுதராகிய தேவ சிகாமணி
வழுவூரில் நிலாவிநல் வாழ்வருள் பெருமாளே

என்று கூறியுள்ளார்.

இங்குள்ள கல்வெட்டுக்கள் பதினைந்து. ஐயங்கொண்ட சோழ வளநாட்டு, திருவழுந்தூர் நாட்டு வழுகூர் என்று அக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இறைவன் பெயர்கள் வீராட்டானம் உடையார், வழுகூர்நாயனார் என்று காணப்படுகின்றன. இராஜேந்திரன் I, இராஜராஜன் II, இராஜாதிராஜன் II, குலோத்துங்கன் III, ஜடாவர்மசுந்தர பாண்டியன், விஜயநகர வீரபொக்கண்ண உடையார், பிரதாபதேவராயர் II இவ்வரசர்களின் காலத்திய கல்வெட்டுக்கள் அவை. கோயில் மதில்கள் கோபுரம் இவைகளை நல்லாவூர் காங்கேயர் கணபதிநயினார்பிள்ளை மகன் அழகப்பெருமாள்பிள்ளை கட்டியதாக ஒரு கல்வெட்டு கூறுகிறது. காவிரி வெள்ளத்தால் சேதமடைந்த நிலங்களுக்கு வரிக் குறைப்புச் செய்ததை மற்றொன்று அறிவிக்கிறது. திருவாதிரைத் திருநாளில் திருவெம்பாவை பாடுவதற்காக பொருள் வழங்கியதை வேறு ஒன்று தெரிவிக்கிறது. கோயிலில் விளக்கெரிப்பதற்கும், விழாக்கள் நடைபெறவும், பூசை முதலியவற்றிற்கும் பொன், நிலம் இவைகள் வழங்கியதை மற்ற கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

---

**சிக்கல் :** நவநீதேசுவரசுவாமி கோயிலில் இலட்சார்ச்சனை 21-11-60 முதல் நடைபெறுகிறது.

**திருவெண்காடு :** சுவேதாரண்யேசுவர சுவாமி தேவஸ்தானத்தின் தர்மகர்த்தாக் குழுத் தலைவர் திரு. கே. கனகசபை பிள்ளை, நிர்வாக அதிகாரி திரு. ஏ. வெங்கடாசலம் பி.ஏ, அவ்வூர் பஞ்சாயத்து போர்டு தலைவர் திரு. சீனிவாசபிள்ளை ஆகியோர்களால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய உதவிகள் செய்து அவர்களுக்கு உணவும் கொடுக்கப்பட்டது.

**திருப்புகலூர் :** அக்கினீசுவரர் கோயிலில் 25-11-60 மாலை 6 மணிக்கு சென்னை மாநில கவர்னர் திரு. விஷ்ணுராம்மேதி அவர்கள் விஜயம்செய்து சுவாமி தரிசனம் செய்தார்கள்.

**சென்னை :** வடபழனி ஆண்டவர் கோயிலில் மகா கந்தர் சஷ்டி உற்சவம் 20-10-60 முதல் 25-10-60வரை நடைபெற்றது. ஏராளமான மக்களும் முக்கியமாக சென்னை அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர், ஆணையர், உயர்நீதிபதி முதலியோர்கள் கலந்துகொண்டார்கள்.

# சிவஞான போதம்

திரு. K. வச்சிரவேல் முதலியார் B.A., L.T.

**முன்னுரை :**

சிவஞான போதம் என்னும் அறிவு நூல் சித்தாந்த சைவத்துட் கூறப்படும், வாழ்க்கையின் ஆழ்ந்த அடிநிலை உண்மைகளை அளவை முறையானும் பொருந்துமாற்றானும் நிறுவுவது; நிறுவி, அவ்வுண்மைகளை ஒருவன் தன் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகும் முறையினையும், ஒழுகியபின் அவன் எய்தும் பெரும் பயனையும் முறைப்பட வைத்து உணர்த்துவது.

**"உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்(து)—அலகையா வைக்கப் படும்"** என்பது வள்ளுவர் வாய்மொழி. இங்கு உலகத்தார் என்றது உயர்ந்தோரை. உயர்ந்தோர் பலரும் உண்டென்பவை கடவுளும், மறு பிறப்பும், இருவினைப்பயனும் முதலாகப்பல என்பர் பரிமேலழகர். இவற்றின் உண்மையினையும், பெற்றியினையும் அறிவியல் முறைக்குப் பொருந்தும்படி உணர்த்தினால் அன்றி எத்துணைக் கூரிய மதியினரும் தாமே உணரார். ஆகலின், இவற்றை ஆராய்ச்சி செய்து உணர்த்தப் புகுந்த நூல்கள் பலப் பல. அவையெல்லாவற்றுள்ளும் தலைசிறந்த நூலாகக் குன்றின்மேல் இட்ட விளக்கெனச் சுடர்ந்து ஒளிர்வது சிவஞானபோத நூல் ஒன்றே ஆகும்.

அறிவியல் துறையில் செல்லும் இக்கால மக்களின் உள்ளங்களுக்குக் கவர்ச்சியைத் தரும் பல பண்புகள் இந்நூலுக்கு இயல்பாக அமைந்துள்ளன. இந்நூல் மெய்ந்நெறி பற்றிய உண்மைகளை முற்றாக உணர்த்துவதோடு, இணைத்து ஒழுங்குபட வைத்தும் உணர்த்துகின்றது. உயர் ஞானத்தை உபநிடதநெறிபற்றி உணர்த்தும் ஒருசார் ஆசிரியர் உலகம் பொய் எனவும், அது, மயங்கிய வழிப் பேய்த் தேரிற்புனல் போலத்தோன்றி, மெய்யுணர்ந்தவழிக் கயிற்றில் அரவுபோலக் கெடுவது எனவும் கூறிவந்துள்ளனர். இந்நூல் அப்பொய்க் கொள்கையைப் பின்பற்றாது, உலகத்தை உள்பொருள் எனவும், காரண காரிய நியதிக்கு உட்பட்டது எனவும், உயிரின் அறிவு வளர்ச்சிக்குத் துணைபுரிவது எனவும் விளக்கி, இவ்வடிப்படைமேல் உபநிடதங்களின் பொருணிச்சயத்தை எடுத்துக் கூறுகின்றது.

**சுருங்கல், விளங்கல்** என்னும் இயல்புகள் இந்நூலுக்குத் தனிச்சிறப்பைத் தருவனவாக உள்ளன. இதனைப் பிரமமீமாஞ்சை எனப்படும் வியாச சூத்திரத்தோடு புடைபட வைத்து ஒப்புநோக்குதல் பொருந்துவதாகும். பற்பல கருத்துக்களும் முடிபுகளும் இரண்டு நூல்களினும் ஒப்பக்கூறப்படுதல் அறியத்தக்கது. வியாச சூத்திரம் முக்கிய உபநிடதங்களின் சொல்வாய்மை பொருள்வாய்மைகளை ஆராய்ந்து நிச்சயம் செய்ய எழுந்தது; சிவஞானபோதமோ உபநிடதங்களேயன்றி வடமொழி தென்மொழிகளில் எழுந்துள்ள அனைத்து நூல்களினும் இறை, உயிர், தளை என்பவைபற்றிக் கூறப்படும் பொருட்கூறுகளை எஞ்சாதுகொண்டு ஆராய்ந்து, உண்மை முடிபுகளைக் கோவை செய்து, தெளிவிப்பது. முன்னையது, சொல்லாராய்ச்சியையே பெரிதும் மேற்கொள்ளுதலினால், 550 சூத்திர அளவின் மேற்பட விரிந்து, பற்பல மாறுபட்ட பேருரைகளுக்கு இடந்தந்து, அத்வைதம், துவைதம், விசிட்டாத்வைதம், சிவாத்வைதம் முதலாகப் பலவகை மதங்கள் தோன்றி நடப்பதற்குக் காரணமாய் அமைந்துவிட்டது. ஆயின், பின்னையதாகிய சிவஞானபோதம் மெய்ந்நெறிபற்றிய பொது விதிகளையும், அடிப்படைக் கொள்கைகளையும், பொருள் நிலையினையும் முழுதொருங்கு நோக்கிக் கோவைசெய்து இணைத்து உணர்த்துதலானும், ஏகம், அத்துவிதம், ஆன்மா, மாயை முதலிய சொற்களின் ஆராய்ச்சியை உரையின்கண் தக்க இடங்களில் மேற்கொண்டு விளக்குதலானும், சூத்திரம் 12, அவற்றின் அடிகள் 41, சொற்களை எண்ணின் 216 ஏ–என எண்ணி, வியப்பும் பெரு

மிதமும் கொள்ளும்படி, சுருங்க அமைந்து உள்ளது; ஆயினும், தான்கூறும் ஆழ்ந்த நுண்ணிய பொருள்முடிபுகளை ஐயமும் மருட்கையும் இன்றித் தெளிய உணர்த்தும் திட்பம் உடையதாகத் திகழ்கின்றது.

ஞானநூல்களின் அளவிறந்த பொருட் பரப்புக்களை எல்லாம் இச்சிறியபெரிய உயர் தனிச் செந்நூல் தன்கண் அடங்கக்கொண்டு விளக்கும் திறத்தினை உணர்ந்த கச்சியப்ப முனிவர் பின்வருமாறு இதன் ஆசிரியரை வழுத்துகின்றார்:—

"சிறிய ஆடியிற் பெரியமால்
வரைப்பொருள் செறிந்தாங்(கு)
அறிவு நூல்களின் முடிவெலாம்
அகப்படுத் தவற்றின்
நெறியெ லாம்விளக் கியசிவ
ஞானபோ தத்தைக்
குறிசெய் தீந்தமி ழாலுரை
குரவனைப் பணிவாம்"

எனவரும்.

இந்நூல் செந்தமிழ் இலக்கிய அரங்கிற் பெறும் இடத்தை உணர்தற்குப் பின்வரும் மரபுபற்றிய விவரம் உதவிபுரியும்: மக்கள் மன அமைதியும் இன ஒற்றுமையும் (Individual contentment and social harmony) உடையவர்களாய் உயர்ந்த குறிக்கோளுடன் வாழ்தற்பொருட்டுப் பண்டைய நூல்களால் உணர்த்தப்படும் பொருண்மை உலகியல் எனப்படும் ஒழுக்க நெறியும், கடவுட்கொள்கை பற்றிய மெய்ந் நெறியும் என இருவகைப்படும். வடமொழியில் வேதங்களும் அவற்றைச் சார்ந்த நூல்களும் உலகியல் எனப்படும் ஒழுக்க நெறி உணர்த்துவன எனவும், உபநிடதப் பொருளினை தெளிவிக்கும் சிவாகமஞானபாதங்கள் மெய்ந்நெறி உணர்த்துவன எனவும் பகுத்துணர்ந்து கொள்ளுதல் மரபாகும். இவ்வுண்மையை உணர்த்துதல் "வாழ்க அந்தணர்" எனத் தொடங்கும் திருப்பாசுர முதற்பாட்டின் கருத்து ஆகும் எனச் சேக்கிழார் அடிகள் உணர்த்துகின்றார்:—

"உலகியல் வேதநூல் ஒழுக்கம் என்பதும்
நிலவுமெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும்
கலதிவாய் அமணர்காண் கிலார்கள் ஆயினும்
பலர்புகழ் தென்னவன் உணரும் பான்மை
யால்"

என்பது அவர் வாய்மொழி.

இங்ஙனம் வடமொழியில் உள்ளது போலத் தமிழ்மொழியில் உலகியலாகிய ஒழுக்கநெறி உணர்த்தும் முதனூல் திருவள்ளுவர் வகுத்தருளிய திருக்குறள் என்பது எல்லார்க்கும் ஒத்த துணிபு ஆகும். அங்ஙனமே ஒண்தீம் தமிழில் மெய்ந்நெறியினை ஈடும் எடுப்பும் இல்லையாகும்படி விளக்கி, மக்களை ஒருமைப்படுத்தும் உயர்ஞான முதனூல் சிவஞான போதம் ஆகும். இதனைத் தலையாய அறிவுடையார் எல்லாரும் சிந்தித்துணரும் கடப்பாடு உடையவர் ஆவர்.

## காலமும் ஆசிரியரும்

இந்நூல் 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அக்காலத்தில் தமிழகத்தே மெய்ந்நெறி பற்றி மக்கள் உள்ளங்களில் இருந்த குழப்பங்கள் நீங்குதற் பொருட்டு இயற்றப்பட்டு, நன்மாணக்கர்களுக்குப் பாடமாகப் போதிக்கப்பட்டு வந்தது. இதனை இயற்றியருளியவர் திருவெண்ணெய்நல்லூரில் முற்செய்தவத்தான் மெய்யுணர்வின் முற்றுப்பேறுடையராய் எழுந்தருளியிருந்த மெய்கண்ட முதல்வர் ஆவர். அவர்தம் வரலாறு முதலியன நன்கு தெரிந்தவை. ஆகலின், அவற்றைப்பற்றி ஒன்றும் கூறப்புகாது, நூலின் அமைப்புப்பற்றிச் சிலகூறி நூற்பொருளை விளக்கப்புகுகின்றேன்.

## நூலின் அமைப்பு

நூல் பன்னிரண்டு சூத்திரங்களால் ஆயது என்பது மேலே கூறப்பட்டது. அவற்றுள் முன்னூறு சூத்திரங்கள் பொதுவதிகாரம் எனவும், பின்னூறு சூத்திரங்கள் உண்மையதிகாரம் எனவும் பாகுபடுத்தி உணரப்படும். பிறப்புநிலைபற்றிக் கூறப்படும் இயல்பு பொது எனவும், முத்திநிலைபற்றிக் கூறும் இயல்பு உண்மை எனவும் வழங்கும். பொதுவியல்பு எனினும் தடத்தலக்கணம் எனினும் பொருந்தும்; உண்மையியல்பு எனினும், சிறப்பியல்பு எனினும் சொரூபலக்கணம் எனினும் பொருந்தும். ஆகலின், முப்பொருள்களின் பொதுவியல்பு உணர்த்தும் பகுப்புப் பொது அதிகாரம் எனவும், உண்மையியல்பு கூறும் பகுப்பு உண்மையதிகாரம் எனவும் குறிக்கப்பட்டன. பிறப்புநிலைபற்றி ஆராய்ந்து உணரப்படும் பொதுவியல்பு பிரமாணம் இலக்கணம் என்னும் இருவகையால் கூறப்பட்டுக் கேட்டல், சிந்தித்தல் என்னும்

இருதிறத்தான் உணரப்படும். முதல் மூன்று சூத்திரம் பிரமாண இயல் எனவும், ௪, ௫, ௬-ஆம் சூத்திரங்கள் இலக்கண இயல் எனவும் பாகுபடும். இனி, முத்திநிலை பற்றித் தலைப்பட்டு உணர்தற்கு உரிய உண்மையியல்பு சாதனம், பயன் என்னும் இருவகையின் வைத்துக் கூறப்பட்டுக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்னும் நான்கு திறத்தால் உணரப்படும். ௭, ௮, ௯-ஆம் சூத்திரங்களால் சாதனமும், ௧௦, ௧௧, ௧௨-ஆம் சூத்திரங்களால் பயனும் உணர்த்தப்படுதலின், அவை முறையே சாதன இயல், பயன் இயல் எனப்படும். எனவே, நூல் பொதுவதிகாரம், உண்மையதிகாரம் என்னும் இரண்டு பெரும்பிரிவுகளையும், பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயன் இயல் என்னும் நான்கு சிறுபிரிவுகளையும் உடையது என்பது உணரப்படும்.

இனி, நூலுக்குப் பாயிரமாக (உபோற்காதப் பிரகரணம்) மங்கல வாழ்த்தும் அவையடக்கமும் ஒவ்வொரு செய்யுளால் கூறப்பட்டு முன்னர் வைக்கப்பட்டுள்ளன.

சூத்திரங்களின் கருத்துரைகளும், வார்த்திகம் எனப்படும் பொழிப்புரைகளும் நூலாசிரியராலே இயற்றப்பட்டுச் சூத்திரங்களுடன் இடையிடையே வைக்கப்பட்டு உள்ளன. இவ்வுரைகளுக்கு விளக்கந்தரும் வகையில் சிற்றுரை, மாபாடியம் என்னும் இரண்டு வியாக்கியானங்கள் அளவைமுறையும் இலக்கண நெறியும்பற்றிச் செந்தமிழ் நடையில் இயற்றப்பட்டு நிலவுகின்றன. இவற்றை இயற்றியருளியவர் தென்மொழிக்கடலும் வடமொழிக்கடலும் நிலைகண்டுணர்ந்த மாதவச் சிவஞான யோகிகள் எனப்படும் முனிவர் பெருமான் ஆவர். இவர் மெய்கண்ட தேவர் அருள் உபதேச மரபைத் தமிழகத்தே பாதுகாத்துவரும் சைவ ஆதினங்களுள் தலைசிறந்த திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்தவர். இற்றைக்கு 175 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்து வாழ்ந்தருளியவர்.

### வார்த்திகப் பொழிப்பு இன்னது என்பது

ஒரு சூத்திரத்தைக் கண்ணழித்துப் பொழிப்பு உரைக்கும்போது, அதன்கண் உள்ள விவாதக் கூறுகள் (points at issue) அல்லது மெய்ப்பிக்கவேண்டிய முடிபுகள் இன்ன இன்ன என்பது புலனாகும். அவ்விவாதக் கூறு ஒவ்வொன்றும் ஒவ்வோர் அதிகரணம் எனப் பிரித்து வைக்கப்படும். அதன்கண் மேற்கோளும் அதனைச் சாதிக்கும் ஏதுவும், ஏதுவை வலியுறுத்தும் உதாரணமும் தரப்படும். இவ்வாறு பாடம், கண்ணழிவு, உதாரணம் என்பவை ஒருவிவாதக் கூற்றின் மேல் வரும்படி, சூத்திரப்பொருளை அதிகரணங்களாகப் பிரித்துக் கூறும் விரிவுரையே வார்த்திகம் எனப்படும். ஒவ்வோர் அதிகரணத்திலும் நூலாற் கூறப்படும் பொருளும், அதன்கண் ஐயப்பாடும், அதற்குப் பிறர்கூறும் பூருவபக்கமும், அதனை மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபும், இயைபும் என்னும் ஐந்தும் தோன்றும். அதிகரணம் என்னும்சொல் இடம் எனப் பொருள்படும். மேற்கூறிய ஐந்தும் நிகழ்தற்கு இடன் ஆதல்பற்றி விவாதக்கூறு ஒவ்வொன்றும் அதிகரணம் எனப்பட்டது. வியாச சூத்திரப் பேருரைகளில் அதிகரணம் என்பவையும் இத்தன்மையவே ஆகும். ஆயினும், அங்கு விடயம் என்னும் தன்னாற் கூறப்படும் பொருள், "ஏக மேவாத்விதீயம் பிரஹ்ம" என்னும் சாந்தோக்கியத்தில் பிரஹ்ம என்னும் சொல்லின் பொருள் ஈண்டைய ஆராய்ச்சிக்கு விடயம் என்றாற்போல, உபநிடத வாக்கியங்களே ஆகும். ஆனால் சிவஞான போதத்தில் அது "உலகம் தோன்றி நின்றுமறைவது, அஃது முதல்வனை உடையது," "ஆன்மாக்களுக்கு இருவினைமுதல்வன் ஆணையான் வரும்" என்றாற்போல உபநிடதம் முதலிய ஞான நூல்களுட் கூறப்படும் பொருள் முடிபுகளாக இருக்கும்.

வார்த்திகம் எனப்படும் ஆய்வுரை பற்றிச் சிவஞான போதத்தைக் கருதினால், அதன்கண் மேலே காட்டியபடி 39 பொருண் முடிபுகள் (Propositions) முறைப்பட வைத்து நிறுவப்படுதல் புலனாம். இவை கணிதமேதை யூக்லிட் (Euclid) என்பார் முறைப்பட வைத்து ஆராய்ந்த இட அளவியல் தெரிவுகளைப்போல (Geometrical propositions) முன்பின் மலைவின்றி முன்னின்றதனை பின்னின்ற முடிபு சார்ந்து கோவைப்பட்டு இணைந்து நிற்பனவாய் அமைந்திருந்தல் நுண்ணறிவு உடையார் எல்லார்க்கும் அறிவு விருந்தாய், மனக்கோட்டம் தீர்க்கும் மருந்தாய் அமையும். இனி நூலின் பொருள்நிலையை முறைப்படக் காண்போம்:

**பாயிரம்**

(i) மங்கல வாழ்த்து:—

கல்லால் நிழன்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே எனவரும்.

இதன் பொருள்: கல்லால் மரநிழலில் எழுந்தருளி யிருந்து மனக்குழப்பம் தீர்த்த சிவபிரான் திருவருள் புரிதற் பொருட்டு மேன்மக்கள் (திருவெண்ணெய் நல்லூரில் சுயம்பு மூர்த்தியாய் எழுந்தருளியுள்ள) பொல்லாப் பிள்ளையாருடைய திருவடிகளாகிய இரண்டு தாமரைகளைத் தம் முடிமேல் சூடிக்கொள்வார்கள்.

ஆதலால் யாமும் அவரை நினைந்து வழிபட்டால், முதலாசிரியனாகிய சிவபிரான் கருணையால் மெய்ந்நெறியைத் தெளிந்து இன்புறுவோம் என்பது கருத்து.

இப்பாட்டின் கருத்துப்பற்றிச் சிவஞான முனிவர் கூறியுள்ள சில நயங்கள் இங்கே தரப்படுகின்றன.

(1) இது எடுத்துக்கொண்ட செயல் இடையூறின்றி இனிது முடிதற் பொருட்டு ஆன்றோர் செய்துவரும் மூத்தபிள்ளையார் வழிபாட்டைச் செய்யத்தக்கது என மாணுக்கர்க்கு அறிவித்தற் பொருட்டு முதற்கண் வைக்கப்பட்டது.

(2) மெய்ந்நெறிபற்றி நூல் செய்வோர் முதற்கண் தாம் வழிபடும் இறைவனையும், அவன் அருளிச் செய்த முதல் நூலையும் குறிப்பிடுதல் முறை. அதுபற்றி இப் பாட்டு ஈண்டைக்கு இறைவன் ஆவான் இவன் என்பது உணர்த்துகின்றது. இயற்கை முற்றுணர்வு உடைமையே முதல்வனுக்குச் சிறப்பிலக்கணம். அவ்விலக்கணத்தை உளங்கொண்டு உயிர்கள் உறுதி பெறுதற் பொருட்டு வேதாகம புராணங்களால் குறிக்கப்பட்ட மூர்த்தம் சிவபெருமான் திருவுரு என்பது கருத்து. இறைவன் நூல் அடுத்தபாட்டில் உணர்த்தப்படுகிறது.

(3) நூல்கருதும் பொருளை மங்கல வாழ்த்துக் குறிப்பிக்க வேண்டும் என்பது மரபு.

(அ) இப்பாட்டில் கல் என்பது முதல் ஏ என்பதுவரை 12 சொற்கள் உள்ளன: இதனால் இந்நூல் பன்னிரண்டு சூத்திரங்களால் ஆயது என்பது குறிக்கப்படுகின்றது.

(ஆ) முன் ஆறு சொற்கள் அருளிய என்னும் வினைகொண்டு முடிந்து எஞ்சி நிற்க, பின் ஆறு சொற்கள் புனைவரே என்னும் முற்றுவினை கொண்டு முடிந்து வாக்கியத்தை முடிக்கின்றன: இதனால் இந்நூலுள் முன்னுறு சூத்திரங்கள் ஓர் அதிகாரமும் (பொதுவதிகாரம்), பின்னுறு சூத்திரங்கள் வேறோர் அதிகாரமும் (உண்மை யதிகாரம்) என இரண்டு பெரும் பிரிவினை உடையது இந்நூல் என்பது உணர்த்தப்படுகின்றது.

(தொடரும்)

# இறைபணியாளர்கள் மாற்றம்

திரு. ஆர். பஞ்சநதம் இறைபணியாளர் வேதரங்கம் அரங்கநாதபெருமாள் கோயிலுக்கு இறைபணியாளராக மாற்றப்பட்டிருக்கிறுர். இறைபணியாளர் திரு. ஆர். இராஜகோபாலன் தீபாம்பாள்புரம்—வால்மீகநாதசுவாமி கோயிலுக்கும், உடையார் கோயில் கரவந்தீசுவரர் கோயிலுக்கும் இறைபணியாளராக மாற்றப்பட்டிருக்கிறுர்.

திரு. என். இராமசாமி, இறைபணியாளர், இராஜபாளையம்மாயூரநாதசுவாமி கோயிலுக்கும், மடவார் விளாகம் வைத்தியநாதசுவாமி கோயிலுக்கும் இறைபணியாளராக மாற்றப்பட்டிருக்கிறுர்.

திரு. எஸ். சுப்பிரமணியம், இறைபணியாளர், பாளையங்குடி-அகத்தீசுவரர்சுவாமி கோயிலுக்கு இறைபணியாளராக மாற்றப்பட்டிருக்கிறுர்.

திரு. எல். வெங்கட்ராமன், திருமக்கோட்டை - அரங்கநாதப்பெருமாள் கோயிலுக்கு இறைபணியாளராக மாற்றப்பட்டிருக்கிறுர். திரு. கே. பழனியாண்டி திருக்கோடிக்காவல்—திருக்கோடீசுவரர் கோயிலுக்கு இறைபணியாளராக மாற்றப்பட்டிருக்கிறுர்.

திரு. பி. எஸ். விசுவநாதன், வடுவூர் - கோதண்டராமசுவாமி கோயிலுக்கும் கரைக்கோட்டை தண்ணீர்ப்பந்தல் அறநிறுவனத்திற்கும் இறைபணியாளராக மாற்றப்பட்டிருக்கிறுர்.

# ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

| தேதி | இடம் | நிகழ்ச்சி |
|---|---|---|
| 16—10—60 | திருமழபாடி | வைத்தியநாதசாமி கோயில் திருப்பணி துவக்கவிழா. திருப்பணிக் குழு தலைவர் திரு. இராமசுவாமிசுவாமிகள் அவர்களால், திருப்பணி துவக்க விழாவில் பயன்படுத்தப்பட்ட வெள்ளிக் கரணை ரூ. 1,111 ஏலத்தில் எடுக்கப்பட்டது. |
| | திருவாமத்தூர் | கோயில் - மண்டலாபிஷேகம் |
| 17—10—60 | பழனி | தண்டாயுதபாணி சுவாமி கோயில் மண்டலாபிஷேகம் |
| 6—11—60 | திருப்புனவாசல் | விருத்தபுரீசுவரர் கோயில் திருப்பணி துவக்குவிழா - திருமுறைக் கோயில் நிறுவுதல் - திரு. இராமநாதன் சேர்வை அவர்களால் வெள்ளிக்கரணை ரூ 251-க்கு ஏலத்தில் எடுக்கப்பட்டது. |
| 13—11—60 | அரியலூர் | ஆலந்துறையப்பர் கோயில் - திருப்பணி துவக்கு விழா - தேவாரக் கல்வெட்டுத் திறப்பு விழா. திரு. நடராஜப்பிள்ளை அவர்களால் வெள்ளிக்கரணை ரூ. 1001-க்கு ஏலத்தில் எடுக்கப்பட்டது. |
| ,, | ,, | கோதண்டராமசுவாமி கோயில் திருப்பணி துவக்குவிழா - பாசுரக் கல்வெட்டுத் திறப்பு விழா திரு. கோவிந்தசாமி படையாச்சி அவர்களால்வெள்ளிக்கரணை ரூ. 1001-க்கு ஏலத்திலெடுக்கப்பட்டது. |
| 15—11—60 | வலங்கைமான் - அருணசலீசுவரர் கோயில் | |
| ,, | வைத்தியநாதசுவாமி கோயில் | திருமுறைக்கோயில் நிறுவுதல் - பதிகக்கல்வெட்டுத் திறப்பு விழா. |
| ,, | ஆலங்குடி ஆபத்சகாயீசுவரர் கோயில் | திருமுறைக்கோயில் நிறுவ்துதல் |
| ,, | பாபநாசம்-இராமலிங்க கோயில்—(108சிவாலயம்) | ,, ,, |
| ,, | திருச்சலூர்-மச்சபுரீசுவரர் கோயில் | திருமுறைக்கோயில் நிறுவுதல்—பதிகக்கல்வெட்டுத் திறப்பு விழா. |
| 16—11—60 | புத்தூர்-புற்றிடம் கொண்டீசுவரர் கோயில் | திருமுறைக்கோயில் நிறுவுதல்—திருப்பணி துவக்குவிழா—வெள்ளிக் கரணை ரூ. 511-க்கு ஏலத்தில் விடப்பட்டது. |
| ,, | புள்ளமங்கை—சந்திரமவுலீசுரர் கோயில் | திருப்பணி துவக்குவிழா—வெள்ளிக்கரணை 158-க்கு ஏலத்தில் விடப் பட்டது- |
| ,, | பசுபதிகோயில்—பசுபதீசுவரர் கோயில் | திருப்பணி துவக்கு விழா— வெள்ளிக்கரணை ரூ, 151-க்கு ஏலத்தில் விடப்பட்டது. |
| ,, | தலமங்கை-பிரம்பபுரீசுவரர் கோயில் | திருப்பணி துவக்குவிழா—வெள்ளிக்கரணை ரூ. 158-க்கு ஏலத்தில் விடப்பட்டது. |
| 17—11—60 | ஆடுதுறைப் பெருமான் கோயில்—ஜகத்ரட்சகப்பெருமாள் கோயில் | திருப்பணி துவக்குவிழா-திருமங்கையாழ்வார் பாசுரக் கல்வெட்டுத் திறப்பு விழா—வெள்ளிக்கரணை ரூ. 151-க்கு ஏலத்தில் விடப் பட்டது. |
| ,, | ,, தயாநிதீசுவரர்கோயில் | சம்பந்தர் தேவாரக் கல்வெட்டுத் திறப்பு விழா. |
| ,, | காசநாடு—ஜம்புகேசுவரர் கோயில் | திருப்பணி துவக்குவிழா |
| ,, | பருதியப்பர் கோயில்—பாஸ்கரேசுவரர் கோயில் | திருப்பணி துவக்கு விழா; சம்பந்தர் தேவாரக் கல்வெட்டுத் திறப்பு விழா—வெள்ளிக்கரணை ரூ 151-க்கு ஏலத்தில் விடப்பட்டது. |
| 23—11—60 | திருச்சிராப்பள்ளி | காமாட்சியம்மன் கோயில் கும்பாபிஷேக விழா. |
| 13—13—60 | திருச்சி-நந்திக் கோயில் | திருப்பணி துவக்குவிழா—திரு. சின்னையா நாயுடு அவர்களால் ரூ. 250-க்கு வெள்ளிக்கரணை ஏலத்தில் எடுக்கப்பட்டது. |
| ,, | சிறுவாச்சூர்-மதுரகாளியம்மன் கோயில் | திருப்பணி துவக்குவிழா—திரு. சின்னமுத்து ரெட்டியார் அவர்களால் ரூ. 1121-க்கு வெள்ளிக்கரணை ஏலத்தில் எடுக்கப்பட்டது. |
| ,, | கருப்புத்தூர்-சிம்மபுரீசுவரர் கோயில் | திருப்பணி துவக்குவிழா—திரு. பட்டாபிராம ஐயர் அவர்களால் ரூ. 311-க்கு வெள்ளிக்கரணை ஏலத்தில் எடுக்கப்பட்டது. |

# அறநிலையச் சட்டம்

# MADRAS ACT.

"The translation has not been authorised or accepted as authentic by the Government." Translation by Sri. A. S. GNANASAMBANDAM, Translation Dept.

(முன் தொடர்ச்சி)

(5) கர்ப்பக் கிரகம் அல்லது பூசைக் கிரகம் அல்லது ஒரு அறநிலையத்தின் அல்லது வழிபாடு செய்யுமிடத்தின் வளவுகளுக்குள் சிறப்பாக தெய்வீகம் பொருந்தியதாய் வைத்திருக்கப்படுகிற யாதொரு இதர பகுதியில், (3) உட்பிரிவில் சொல்லப்பட்ட யாதொருவர் அல்லது போலீசு அதிகாரி நுழைவதை ஒரு நிலையத்தின் நடவடிக்கை அல்லது வழக்கம் தடை விதிக்கிறதா என்னும் பிரச்சினை எழுந்தால் ஷை பிரச்சினை ஆணையரின் தீர்மானத்துக்கு விடப்படும். அத்தகைய யாதொரு பிரச்சினையின் பேரில் முடிவு கூறுமுன் ஆணையர் தாம் தகுதியெனக் கருதுகிற விசாரணையைச் செய்ய வேண்டும்.

(6). (5) உட்பிரிவின்படி ஆணையரின் தீர்மானத்தின்படித் துன்பமடைந்த ஒருவர் தீர்மானத்தின் தேதியிலிருந்து அரசாங்கத்தாருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம்;

ஆனால், யாதொரு கட்சிக்காரருக்குத் தமது முறையீடுகளைச் செய்துகொள்ள ஒரு நியாயமான வாய்ப்புக் கொடுத்தன்றி மற்றப்படி அவருக்குப் பாதகமான எந்த உத்தரவையும் அரசாங்கத்தார் பிறப்பிக்கக்கூடாது.

**25. ஆணையர் முதலியவர்கள் பொருத்தமான முறைகளையும் ஆசாரங்களையும் அனுசரிப்பது.**—இச் சட்டத்தின்படி மேற்பார்வை அல்லது மேல் விசாரணை அதிகாரங்களைச் செலுத்துகின்ற ஆணையர், துணை ஆணையர் உதவி ஆணையர், ஒரு பிரதேசக் கமிட்டியின் அங்கத்தினர், ஒவ்வொரு இதர நபர் ஆகியவர்கள், அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துகிற அறநிலையம் சம்பந்தமாகப் பொருத்தமான முறைகளையும், ஆசாரங்களையும் அனுசரிக்க வேண்டும். ஒரு மடம் விஷயமாய் அதன் தலைவரோடு தொடர்பு கொள்ளும் விஷயங்களில், ஷை மடத்தின் வழக்கங்களை அனுசரித்து நடக்கவேண்டும்.

**26. தர்மகர்த்தர்களின் யோக்கியதாம்சங்கள்.**—(1) யாதொருவர்—

(a) இந்து மதத்தைத் தழுவுபவராயிருந்தாலன்றியும், மற்றப்படியும்,

(b) பரம்பரையான ஒரு தர்மகர்த்தாவின் விஷயத்தில் தவிர மற்ற விஷயங்களில், இருபத்தைந்து வயதுக்குக் குறைந்தும் எழுபது வயதுக்கு மேற்பட்டும் இருந்தாலன்றியும்,

(c) கடனிறுக்கச் சக்தியற்றவர் என்று அறிவிக்கப்படாமலிருந்தாலும்,

(d) சித்த சுவாதீனமற்றவராக அல்லது ஒரு தர்மகர்த்தாவின் அலுவல்களை நிறைவேற்றவும் கடமைகளைச் செய்யவும் தகுதியற்றவராக்குகிற பைத்தியம் அல்லது அங்கஹீனம் உடையவராக அல்லது தொழு நோய் அல்லது அருவருக்கத்தக்க யாதொரு நோயால் பீடிக்கப்பட்டிருந்தாலும்,

(e) அறநிலையத்தின் யாதொரு சொத்தின் செலாவணியில் இருக்கிற குத்தகை, அல்லது செய்யப்பட்ட உடன்படிக்கை ஷை ஸ்தாபனத்திற்காகச் செய்யப்பட்ட யாதொரு வேலையில் பாத்தியதையுடையவராக அல்லது, ஷை அறநிலையத்திற்கு அல்லது கட்டளைக்குச் சேரவேண்டிய யாதொரு வகை பாக்கியை நிலுவையில் வைத்திருந்தாலும்,

(f) ஓர் அறநிலையத்தின் சார்பாக அல்லது அறநிலையத்திற்கு எதிராக ஊதியம்

பெறும் வழக்கறிஞராக அமர்த்தப்பட்டாலும்,

(g) ஒழுக்கக்கேடு சம்பந்தமான ஒரு குற்றத்திற்காக ஒரு கிரிமினல் கோர்ட்டால் தண்டிக்கப்பெற்று, அத்தகைய தண்டனை மாற்றப்படாமல் அல்லது ஷெ குற்றம் மன்னிக்கப்படாமலிருந்தாலும்,

(h) நிலையத்தின் அக்கரைகளுக்கு விரோதமாகச் செயலாற்றியிருந்தாலும்,

யாதொரு அறநிலையத்தின் தர்மகர்த்தாவாக நியமிக்கப்படுவதற்கு அல்லது தர்மகர்த்தா வாக இருப்பதற்கு யோக்கியதாம்சம் இல்லாதவராவார்.

(2) யாதொரு தர்மகர்த்தா,

(a) (1) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள யாதொரு யோக்கியதைக் குறைவுகளுக்குட்பட்டால்,

(b) (i) பிராந்தியக் குழுவினரால் நியமிக்கப்பட்ட தர்மகர்த்தாக்கள் விஷயத்தில் உதவி ஆணையருக்கும்,

(ii) இதர விஷயங்களில் ஆணையருக்கும்

எழுதிய அறிக்கை கொடுப்பதன் மூலமாகத் தமது பதவியை ராஜினாமாச் செய்தாலும் அவர் பதவி வகிப்பது நின்று போகும்.

(3) (1) உட்பிரிவில் கூறப்பட்ட யாதொரு யோக்கியதைக் குறைவுகளுக்குத் தர்மகர்த்தா உட்பட்டவரா என்னும் பிரச்சினை எழுந்தால் மேற்படி பிரச்சினை துணை ஆணையரின் தீர்மானத்திற்கு விடப்பட வேண்டும்.

(4) பரம்பரையாகப் பதவி வகிக்கும் ட்ரஸ்டி ஒருவர், (1) உட்பிரிவில் விவரித்துள்ள யோக்கியதைக் குறைவுகளுக்குட்பட்டால், துணை ஆணையர் மேற்படி தர்மகர்த்தாவை விலக்கலாம்.

(5) துணை ஆணையரின் (3) உட்பிரிவின்படி அல்லது (4) உட்பிரிவின்படிக்கான ஒரு உத்திரவினால் பாதிக்கப்பட்ட யாதொரு நபர், மேற்படி உத்திரவு அவரால் வரப்பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் மேற்படி உத்திரவுக்கு எதிராக ஆணையருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம்.

(6) தர்மகர்த்தாக்கள் சபை அமைக்கப்பட்டிருக்கும் ஒரு அறநிலையத்தின் தர்மகர்த்தா, இரண்டு மாதக் கால அளவுக்குள் மேற்படி தர்மகர்த்தாக்களின் சபையின் மூன்று கூட்டங்களுக்குத் தொடர்ச்சியாக வராமலிருந்தால், பதவி வகிப்பதனின்று அற்றுப்போவார்:—

ஆனல், ஒருவர் அவ்வாறு கூட்டங்களுக்கு வராமல் நின்று போவதன் காரணமாக ஒரு தர்மகர்த்தாவாயிராமல் போய்விட்டிருந்து, அவர் மேற்படி தொடர்ச்சியான மூன்று கூட்டங்களில் கடைசிக் கூட்டத்தின் தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள், தம்மை மீண்டும் தர்மகர்த்தாவாகும்படி விண்ணப்பம் செய்துகொண்டால், பிரஸ்தாப தர்மகர்த்தா சபையார், அவ்விண்ணப்பம் வந்து சேர்ந்த பிறகு நடைபெறுகிற அடுத்த கூட்டத்திலே தர்மகர்த்தா பதவியை அவர் மீண்டும் வகிக்கும்படிச் செய்யலாம்; ஆனல், அங்கத்தினர் ஒருவர் தமது பதவிக் கால அளவில் ஒரு தடவைக்கு மேற்பட்டு அவ்வாறு மீண்டும், அங்கத்தினராக்கப்படக் கூடாது.

**விளக்கம்.**—நிர்வாகச் சிற்றெண் (க்வோரம்) இல்லாததால் தள்ளிவைக்கப்பட்ட ஒரு கூட்டமானது, இவ்வுட்பிரிவின் காரியத்துக்காக ஒரு கூட்டமெனக் கருதப்படவேண்டும்.

27. **இச் சட்டத்தின்படிப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளுக்கு தர்மகர்த்தா கீழ்ப்படிந்து நடக்கக் கடமைப்பட்டவரென்பது:**—இச் சட்டத்தில் கண்ட நிபந்தனைகளின்படி அரசாங்கத்தாரால் அல்லது ஆணையரால் அல்லது துணை ஆணையரால் அல்லது பிராந்தியக் குழுவால் அல்லது உதவி ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட சட்டரீதியான சகல உத்தரவுகளுக்கும், யாதொரு அறநிலையத்தின் தர்மகர்த்தா கீழ்ப்படிந்து நடக்கக் கடமைப்பட்டவராவார்.

28. **தர்மகர்த்தா செலுத்தவேண்டிய கவனமும், அவருடைய அதிகாரங்களும்:**—(1) ஆலயப் பிரவேசத்துக்கு அனுமதி கொடுப்பதைக் குறித்த 1947-ம் ஆண்டு சென்னைப்பட்ட

ணத்துச் சட்டத்தின் (சென்னை 1947-ம் ஆண்டு 5-வது சட்டம்) நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒவ்வொரு அறநிலையத்தின் தர்மகர்த்தாவும் மேற்படி நிலைய ஷரத்துக்களையும், நிலையத்தின் வழக்கத்தையும் அது விஷயமாய்த் தகுந்த ஓர் அதிகாரி சட்டப்படி பிறப்பிக்கக்கூடிய சகல கட்டளைகளையும் அனுசரித்தும், அதன் விவகாரங்களும் நிதிகளும் சொத்துக்களும் தமக்குச் சொந்தமானவையாயிருந்தால் சாதாரண விவேகமுள்ள ஒருவர் அவைகள் விஷயத்தில் எவ்வளவு ஜாக்கிரதையாக விவகரிப்பாரோ அவ்வளவு ஜாக்கிரதையாகவும், அதன் விவகாரங்களைப் பரிபாலிக்கவும் அதன் நிதிகளையும் சொத்துக்களையும் உபயோகப்படுத்தவும் கடமைப்பட்டவராவார்.

(2) இச் சட்டத்தின் நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒரு தர்மகர்த்தர் மேற்படி அறநிலையத்தை முன்ஜாக்கிரதையுடனும் பிரயோசனகரமாகவும் பரிபாலிப்பதற்குச் சம்பந்தப்பட்ட சகல அதிகாரங்களையும் செலுத்தவும், தமக்கு விதிக்கப்பட்டுள்ள கடமைகளைக் கிரமப்படி செய்வதற்கு அவசியமாயிருக்கிற சகல காரியங்களையும் செய்யவும் பாத்தியதை யுள்ளவராவார்.

(3) யாதொரு தர்மகர்த்தரை உத்தியோகத்திலிருந்து நீக்குவதற்கான அல்லது அவருக்கு விரோதமாக யாதொரு ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கான அல்லது அதற்குச் சம்பந்தப்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்திலாவது அப்பீலிலாவது விண்ணப்பத்திலாவது இதர நடவடிக்கையிலாவது அவருக்குப் பிடித்த எவையேனும் கட்டணங்களையாகிலும் கோர்ட் செலவு முதலிய செலவுகளையாகிலும் கொடுப்பதற்காக மேற்படி மதஸ்தாபனத்தின் நிதிகளைச் செலவு செய்ய அவர் பாத்தியதையுள்ளவராக மாட்டார்:

ஆனால், ஷை கட்டணங்கள், கோர்ட் செலவு முதலிய செலவுகள் விஷயமாய்த் தாம் செலவழித்த பணத்தை ஈடு செய்துகொள்ளலாமென்று 102-வது பிரிவின்படிப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினால் அவருக்குத் திட்டமாக அனுமதி கொடுக்கப்பட்டால், அவர் அப்படியே செய்யலாம்.

**29. சகல நிலையங்களுக்காகவும் பதிவேடு தயாரிப்பது**—(1) ஒவ்வொரு அறநிலையத்துக்காகவும், பின்வரும் விஷயங்கள் கண்டுள்ளதும் ஆணையர் கட்டளையிடக்கூடிய நமூனாப்படிக்கு உள்ள பதிவேடு ஒன்றைத் தயாரித்து வைத்துவரவேண்டும்:—

(a) நிலையத்தின் ஆரம்பமும், சரித்திரமும் முன்பிருந்தவர்களும் இப்போதிருப்பவர்களுமான தர்மகர்த்தாக்களின் பெயர்களும், தர்மகர்த்தா உத்தியோகத்துக்கு ஒருவர்பின் ஒருவர் வருவதைப்பற்றி மாமூல் ஏதாகிலும் இருந்தால் அதைப்பற்றிய விவரங்களும்;

(b) பரிபாலன ஏற்பாட்டைப் பற்றியும் செலவின் திட்டம் அல்லது அளவைப் பற்றியுமான விவரங்கள்;

(c) எந்த உத்தியோகங்களுக்கு யாதொரு சம்பளம், ஆதாயம் அல்லது மேலாதாயம் சேர்க்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட சகல உத்தியோகங்களின் பெயர்களும், ஒவ்வொன்றின் விஷயத்திலும் ஊழியத்தின் தன்மையும் காலமும் திட்டங்களும்;

(d) ஷை நிலையத்துக்குச் சொந்தமான ஆபரணங்களும், பொன்னும் வெள்ளியும் இரத்தினங்களும் பாத்திரங்களும் ஏனங்களும் இதர ஜங்கம சொத்துக்களும் அவைகளின் எடைகளோடு உத்தேச மதிப்பும்;

(e) ஷை நிலையத்தின் சகல கட்டளைகளைப் பற்றியும் சகல உரிமைப் பத்திரங்களைப் பற்றியும் இதர தஸ்தாவேஜுகளைப் பற்றியுமான விவரங்கள்;

(f) ஷை நிலையத்திலுள்ள அல்லது அதற்குச் சம்பந்தப்பட்ட விக்கிரகங்களும் இதர பிரதிமைகளும், வழிபாட்டுக்காக உத்தேசிக்கப்பட்டிருந்தாலுஞ் சரி, வீதிப் பிரதட்சணங்களில் கொண்டுபோவதற்காக உத்தேசிக்கப்பட்டிருந்தாலுஞ் சரி, அவைகளைப் பற்றிய விவரங்கள்;

(g) அவற்றின் சுருக்கமான பொருளடக்கத்துடன் பழமையானதும் சரித்திர சம்பந்தமானதுமான ரெகார்டுகளின் விவரங்கள்;

(h) ஆணையர் கேட்கக்கூடிய இதர விவரங்கள்.

(2) சம்பந்தப்பட்ட நிலையத்தின் தர்மகர்த்தாவாவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற ஏஜெண்டாவது அந்த பதிவேட்டைத்

தயாரித்து அதில் கையெழுத்து செய்து அதைச் சரிபார்த்து, சந்தர்ப்பத்துக்கேற்றபடி இச் சட்டம் செலாவணியாகத் தொடங்கியதிலிருந்து அல்லது ஆணையரால் அல்லது பிராந்தியக் குழுவினரால் அல்லது உதவி ஆணையரால் அனுமதிக்கப்படக்கூடிய மேலுமொரு காலத்துக்குள், ஒரு மடத்தின் விஷயத்தில் நேரடியாகவும் ஷை நிலையம் சம்பந்தமாக ஒரு பிராந்தியக் குழுவின் அதிகாரங்களைச் செலுத்துகிற, கடமைகளைச் செய்கிற உதவி ஆணையர் விஷயத்தில் அப்பிராந்தியக்குழு மூலமாகவும் இதர மூலமாகவும் ஆணையர் அனுப்பவேண்டும்;

ஆனால், அவ்வாறு கையெழுத்திட்டுச் சரிபார்க்கப்பட்ட ஒரு பதிவேடு—

(i) 1951-ம் ஆண்டு செப்டெம்பர்மீ 30-ம் தேதிக்குமுன் சபையாருக்கும்,

(ii) 1951-ம் ஆண்டு செப்டெம்பர்மீ 30-ம் தேதிக்குப் பிறகும், இச் சட்டத்தின் தொடக்கத்துக்கு முன்னும் ஆணையருக்கும் அனுப்பப்பட்டிருந்தால் இவ்வுட்பிரிவு பயன்படமாட்டாது.

(3) ஷை பதிவேடு பிராந்தியக் குழுவினர் அல்லது உதவி ஆணையர் மூலமாக அனுப்பப்பட்டிருந்தால் அவர்கள் அல்லது அவர், தாங்கள் அல்லது தாம் அவசியமென்று கருதக்கூடிய விசாரணை செய்த பிறகு, தங்களுக்கு அல்லது தமக்குத் தகுதியென்று தோன்றக்கூடியபடி ஷை பதிவேட்டில் மாறுதல்கள் செய்யவேண்டுமென அல்லது அதிலிருந்து சில விஷயங்களை விட்டுவிடவேண்டுமென அல்லது அத்னுடன் புதிதாகச் சில விஷயங்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமெனச் சிபாரிசு செய்யலாம்.

(4) ஆணையரானவர் ஷை பதிவேட்டையும் அது சம்பந்தமாகப் பிராந்தியக் குழுவினரின் அல்லது உதவி ஆணையரின் சிபாரிசுகளையும் பெற்றுக்கொண்டு, தாம் அவசியமென்று கருதக்கூடிய அதிகப்படியான விசாரணை செய்தபிறகும், தாம் தகுதியென்று கருதக்கூடியபடி ஷை பதிவேட்டில் மாறுதல்கள் செய்யவேண்டுமென அல்லது அதிலிருந்து சில விஷயங்களை விட்டுவிடவேண்டுமென அல்லது அதனுடன் சில விஷயங்களைப் புதிதாகச் சேர்க்கவேண்டுமெனக் கட்டளையிடலாம்.

(5) ஷை தர்மகர்த்தா ஆணையருடைய உத்தரவை நிறைவேற்றி, பிறகு திருத்தப்பட்டபடியுள்ள பதிவேட்டின் மூன்று பிரதிகளை அங்கீகாரத்துக்காக ஆணையருக்கு அனுப்பவேண்டும்.

(6) ஆணையரால் அங்கீகரிக்கப்பட்டபடியுள்ள பதிவேட்டின் ஒரு பிரதியைத் தர்மகர்த்தாவுக்கும், மற்றொரு பிரதியைப் பிராந்தியக் குழுவுக்கும் அல்லது சம்பந்தப்பட்ட உதவி ஆணையர் எவரேனுமிருந்தால் அவருக்கும் அனுப்பவேண்டும்.

**30. பதிவேட்டை ஆண்டுதோறும் சரிபார்ப்பது.**—ஷை தர்மகர்த்தாவாவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கிற பதிலாளராவது பதிவேட்டிலுள்ள பதிவுகளை ஆண்டுதோறும் பரிசீலனை செய்து, அந்தப் பதிவேட்டில் செய்யவேண்டிய மாறுதல்களை அல்லது அதிலிருந்து விட்டுவிடவேண்டிய விஷயங்களை அல்லது அதனுடன் புதிதாகச் சேர்க்கவேண்டிய விஷயங்களைக் காட்டும் சரிபார்க்கப்பட்ட அறிக்கை ஒன்றை ஆணையருடைய அங்கீகாரத்துக்காக அவருக்குச் சந்தர்ப்பத்துக்கேற்றபடி நேரடியாகவோ பிராந்தியக்குழு மூலமாகவோ, உதவி ஆணையர் மூலமாகவோ அனுப்பவேண்டும்; அதன் பேரில் 29-வது பிரிவைச் சேர்ந்த (3) முதல் (6) வரையிலுள்ள உட் பிரிவுகளின் ஷரத்துக்கள் யாதொரு பதிவேடு விஷயமாகப் பயன்படுவது போலவே அந்த அறிக்கை விஷயமாகவும் பயன்படும்.

**31. பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை பதிவேட்டை அனுப்புவது.**—தர்மகர்த்தாவாவது, அவரிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கிற பதிலாளராவது சந்தர்ப்பத்துக்கு அவசியமானபடி நேரடியாகவோ, பிராந்தியக்குழு மூலமாகவோ, உதவி ஆணையர் மூலமாகவோ (29-வது பிரிவின்படிக்கான பதிவேடு முதலில் அனுப்பப்பட்ட வருஷத்திலிருந்து தொடங்கும்) பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அனுப்பப்பட்ட பதிவேட்டில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கட்டளையிடப்பட்ட சகல மாற்றங்கள், நீக்கல்கள், சேர்க்கைகள் எல்லாம் இணைக்கப்பட்ட ஓர் ஒருங்கு திரட்டப்பட்ட ரெஜிஸ்டரை ஆணையருக்கு அனுப்பவேண்டும். 29-வது பிரிவின் ஷரத்துக்கள் ஒருங்கு திரட்டப்பட்ட பதிவேடு

விஷயத்தில் அந்தப் பிரிவின்படி அனுப்பப் பட்ட பதிவேட்டைப்போலவே பயன்படும்.

32. தர்மகர்த்தா கணக்குகள், விவரக் கணக்குகள் முதலியவற்றை அனுப்பவேண்டு மென்பது.—(1) அறநிலையம் ஒவ்வொன்றி னுடைய தர்மகர்த்தாவும் அந்த நிலையத்தின் பரிபாலனம், அதனுடைய நிதிகள் சொத்து அல்லது வருமானம் அல்லது அதற்குச் சம் பந்தப்பட்ட தொகைகள், அல்லது அவற் றைப் பயன்படுத்திக்கொள்வது ஆகிய இவை சம்பந்தமாக ஆணையர் கேட்கக்கூடிய கணக் குகள், விவரக் கணக்குகள், அறிக்கைகள் அல்லது வேறு தகவலை அவர் கட்டளையிடக் கூடிய காலத்திலும் நமூனுப்படியும் அவ ருக்கு அனுப்பவேண்டும்.

(2) (1) உட்பிரிவில் அடங்கியுள்ள ஷரத்துக்களுக்கு விரோதமில்லாமலே, ஒரு மடம் அல்லாத இதர அறநிலையங்கள் விஷ யத்தில் உதவி ஆணையரும், பிராந்தியக்குழு எந்த நிலையம் சம்பந்தமாய் அதிகாரங்களைச் செலுத்தவும் கடமைகளை நிறைவேற்றவும் செய்கிறதோ அந்த நிலையங்கள் விஷயத்தில் பிராந்தியக் குழுவும் ஷை அறநிலையத்தின் தர்மகர்த்தாவிடம், ஷை நிலையத்தின் பரிபால னம், நிதிகள், சொத்து அல்லது வருமானம் அல்லது அதற்குச் சம்பந்தப்பட்ட தொகை கள், அல்லது அவற்றைப் பயன்படுத்திக் கொள்வது ஆகிய இவை சம்பந்தமாக அவர் அல்லது அது கேட்கக்கூடிய தகவலை அவர் அல்லது அது கட்டளையிடக்கூடிய காலத்தி லும் நமூனுப்படியும் அவருக்கு அனுப்ப வேண்டும்.

33. சொத்தையும் தஸ்தவேஜுகளையும் பார்வையிடுவது:—(1) ஆணையராவது ஆணை யரால் இது விஷயமாக நியமித்தனுப்பப் படுகிற யாதொரு அதிகாரியாவது வேறு நப ராவது எந்த நிலையங்கள் சம்பந்தமாய் பிர தேசக் கமிட்டி அதிகாரங்களைச் செலுத்த வும் கடமைகளை நிறைவேற்றவும் செய் கிறதோ அந்த நிலையங்கள் விஷயமாய், இந்த விஷயத்தில் ஷை கமிட்டியால் அதிகாரம் அளிக்கப்பட்ட யாதொரு அங்கத்தினர் ஷை மத அறநிலையத்தின் மத நடவடிக்கைகளுக் கும் வழக்கத்திற்கும் கிரமமான மரியாதை கொடுத்து அந்த மத நிலையத்தைச் சேர்ந்த சகல ஸ்தாவர சொத்தையும், அந்த நிலையத் துக்குச் சம்பந்தப்பட்ட சகல ரெகார்டுகளை யும் கடிதப் போக்குவரத்துக்களையும் வரைப் படங்களையும் கணக்குகளையும் இதர தஸ்தா வேஜுகளையும் பார்வையிடலாம்.

(2) சம்பந்தப்பட்ட நிலையத்தின் தர்ம கர்த்தாவும் அவருக்குட்பட்டு வேலை செய்கிற சகல அதிகாரிகளும் ஊழியர்களும் அவரு டைய ஏஜெண்டும் அந்த நிலையத்தின் பரி பாலனத்தில் அக்கறையுள்ள யாதொரு நபரும், (1) உட்பிரிவை அனுசரித்துப் பார்வையிடுவது சம்பந்தமாக அவசியமாக விருக்கக்கூடிய அல்லது நியாயமாக வேண்டி யிருக்கக்கூடிய சகல உதவியையும் வசதிகளை யும் செய்து கொடுக்கவும், (1) உட்பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கிற யாதொரு ஸ்தாவர சொத்தையேனும் தஸ்தாவேஜையேனும் பார்வையிடுவதற்காகக் கொண்டுவரும்படி யும், ஷை மேற்பார்வை சம்பந்தமாக அவசிய மாயிருக்கக்கூடிய தகவல்களைக் கொடுக்கும் படியும் உத்தரவு செய்யப்பட்டால் அவ் வாறே கொண்டுவரவும் கொடுக்கும்படியும் கடமைப்பட்டவர்களாவார்கள்.

(3) ஷை மேற்பார்வை நடத்தும்போது சம்பந்தப்பட்ட நிலையத்தின் முன்னுள் அல் லது தற்போதையை தர்மகர்த்தா அல்லது அவர் கீழ்வேலை செய்யும் யாதொரு அதி காரிகள் அல்லது ஊழியர்கள், அவருடைய பதிலாள்கள் அல்லது நிலையத்தின் நிர்வாகத் தில் சம்பந்தப்பட்ட யாதொரு நபர் பணத் தைக் கையாடினுல், அல்லது மோசடி பண்ணி பணத்தை அல்லது யாதொரு சொத்தை வைத்திருந்தால், ஒழுங்கற்ற சட்ட சம்மத மற்ற சரியல்லாத செலவுகள் செய்தால், ஆணையர் தர்மகர்த்தாவுக்கோ அல்லது சம்பந்தப்பட்ட நபருக்கோ அவருக்கு எதி ராக ஒரு ஸர்சார்ஜ் உத்தரவு ஏன் பிறப்பிக் கப்படக்கூடாது என்பதற்குக் காரணம் காட் டும்படி அவருக்கு ஓர் அறிக்கை கொடுத்து அவருடைய விளக்கங்கள் எவையேனும் இருந்தால் அவற்றை ஆலோசித்த பிறகு, உத்தரவு பிறப்பித்து, அவ்வாறு நஷ்ட மடைந்த தொகையை ஸெர்டிபை செய்து தர்மகர்த்தாவை அல்லது மேற்படி நபரை ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் மேற்படி தொகையை நிலையத்தின் நிதிகளிலிருந்தன்றி தாமாகவே செலுத்தும்படிக் கட்டளையிட லாம்.

90-வது பிரிவின் (3) முதல் (7) வரையிலுள்ள உட்பிரிவுகளில் விவரிக்கப்பட்ட நடைமுறையானது, ஸர்சார்ஜ் தொகை வசூலிப்பதற்கும் பயன்படவேண்டும்.

**34. ட்ரஸ்டைச் சேர்ந்த ஸ்தாவர சொத்தைப் பராதீனம் செய்வது:**—(1) யாதொரு மத அறநிலையத்துக்குச் சொந்தமான அல்லது அதன் காரியங்களுக்காகக் கொடுக்கப்பட்ட அல்லது நிதியேற்பாடு செய்யப்பட்ட யாதொரு ஜங்கம சொத்தைப் பரிவர்த்தனையும் அல்லது விற்பனையும் அல்லது கொதுவையும், ஐந்து வருஷத்துக்கு மேற்பட்ட ஒரு கால அளவுக்கு அதைக் குத்தகைக்கும் விட்டிருப்பதும் அந்த நிலையத்துக்கு அவசியமென்றோ பிரயோசனகரமானதென்றோ ஆணையரால் அனுமதிக்கப்பட்டிருந்தாலொழிய அது செல்லாது :

ஆனால், அவ்வாறு அனுமதி கொடுப்பதற்குமுன், உத்தேசித்துள்ள விவகாரத்துக்குச் சம்பந்தப்பட்ட விவரங்களை நிர்ணயிக்கப்படக்கூடிய விதமாகப் பிரசுரித்து, அதைப் பற்றிய ஆட்சேபனைகளையும் அபிப்பிராயக் குறிப்புகளையும் தெரிவிக்கும்படிக் கேட்டுக் கொள்ளவேண்டும் ; தர்மகர்த்தாவிடமிருந்தாவது பற்றுள்ள இதர நபர்களிடமிருந்தாவது வருகிற சகல ஆட்சேபனைகளைப்பற்றியும் அபிப்பிராயக் குறிப்புகளைப்பற்றியும் ஆணையர் கிரமப்படி ஆலோசனை செய்ய வேண்டும்.

**விளக்கம்:**—மேற்கூறப்பட்ட சொத்தின் யாதொரு குத்தகை, ஐந்து வருஷங்களுக்கு மேற்படாத ஒரு கால அளவுக்கு இருந்த போதிலும், அதுமேற்கொண்ட ஒரு கால அளவுக்குப் புதுப்பித்துக்கொள்வதற்கான ஒரு ஷரத்தைக் கொண்டிருந்தால் (மொத்தத்தில் ஐந்து வருஷங்களுக்கு மேற்படும்படி) யாதொரு நிபந்தனைக்கு உட்பட்டோ, உட்படாமலோ ஐந்து வருஷங்களுக்கு மேற்பட்ட ஒரு கால அளவுக்கான ஒரு குத்தகையாகக் கருதப்படவேண்டும்.

(2) அத்தகைய அனுமதி அளிக்கையிலே ஆணையர் பிரஸ்தாப விவகாரத்தினால் கிடைக்கிற தொகையைப் பயன்படுத்திக் கொள்வது, அதை முதலீடு செய்வது, ஒரு கொதுவையின் விஷயத்தில் நியாயமான ஒரு காலத்துக்குள் அதற்குரிய பணத்தைக் கொடுத்துத் தீர்ப்பது ஆகிய இவை சம்பந்தமாகத் தாம் அவசியமென்று கருதக்கூடிய திட்டங்களை விதித்து அவ்வாறு அவசியமென்று தாம் கருதக்கூடிய கட்டளைகளைப் பிறப்பிக்கலாம்.

(3) இப் பிரிவின்படி ஆணையர் பிறப்பித்த உத்தரவின் பிரதியொன்றை அரசாங்கத்தாருக்கும் தர்மகர்த்தாவுக்கும் அனுப்ப வேண்டும்; நிர்ணயிக்கப்படக்கூடிய விதமாக அதைப் பிரசித்தம் செய்யவேண்டும்.

(4) ஷை உத்தரவின் பிரதி ஒன்றைத் தாம் வரப்பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் தர்மகர்த்தாவும் ஷை உத்தரவு பிரசித்தம் செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் பற்றுள்ள நபர் எவரும் மேற்படி உத்தரவை மாற்றும்படி அல்லது ரத்து செய்யும்படி அரசாங்கத்தாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

(5) 41-வது பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கிற, இனங்களுக்கு இப்பிரிவில் கண்டதெதுவும் பயன்படாது.

**35. யாத்திரிகர்கள், வழிபாடு செய்பவர்கள் ஆகிய இவர்களின் தேகாரோக்கியம் முதலியவற்றைக் காப்பாற்றுவதற்காகவும், அர்ச்சகர்கள் முதலியவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காகவும் செலவு செய்ய தர்மகர்த்தாவுக்குள்ள அதிகாரம்:-** (1) யாதொரு அறநிலையத்தின் தர்மகர்த்தா 86-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள காரியங்களுக்காகப் போதிய தொகை ஒதுக்கிய பிறகு தமது பொறுப்பிலுள்ளவிருந்து—

(a) அந்த நிலையத்துக்கு வரும் சீடர்கள், யாத்திரிகர்கள் அல்லது வழிபாடு செய்பவர்களின் தேகாரோக்கியம், பாதுகாப்பு அல்லது சௌகரியத்துக்கான ஏற்பாடுகளுக்காகவும்,

(b) அர்ச்சகர்கள், அத்யாபகர்கள், வேத பாராயணம் செய்பவர்கள், ஓதுவார்கள் ஆகியவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவும் செலவு செய்யலாம்,

(2) மேற்படி செலவு செய்கையில் ஒரு மடம் அல்லது ஒரு மடத்தோடு சேர்க்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கட்டளையல்லாத இதர ஒரு அறநிலையத்தின் தர்மகர்த்தா, ஆணையரும் அல்லது எந்த நிலைய விஷய

மாய்ப் பிராந்தியக் குழு அதிகாரங்களைச் செலுத்தவும் கடமைகளை நிறைவேற்றவும் செய்கிறதோ அந்த நிலையத்தின் விஷயத்தில் அக்குழுவும் கூடப் பிறப்பிக்கக்கூடிய பொது வான அல்லது விசேஷ உத்தரவுகளை அனு சரித்து நடக்கவேண்டும்.

36. உபரி நிதிகளின் பிரயோகம்:—ஒரு அறநிலையத்தின் ஒரு தர்மகர்த்தா ஆணைய ரின் முன் அனுமதியுடனும், நிர்ணயிக்கப் படக்கூடிய நிபந்தனைகளுக்கும் வரையறை களுக்கும் உட்பட்டும், 66-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள யாதொரு காரியங்களுக்காக—

(i) மேற்படி நிலையத்தின், சேர்த்து வைக்கப்பட்ட உபரி நிதியின் யாதொரு பாகத்தை,

(ii) 86-வது பிரிவைச் சேர்ந்த (2) உட் பிரிவில் குறிப்பிட்டுள்ள காரியங்களுக்காக வும் 35-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரி வில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் பயிற்சிக்கும் போதுமான பணம் கொடுத்த பிறகு யாதொரு ஆண்டில் மேற்படி நிலையத் தின் வருமானத்தில் உபரி வருமானம் இருந் தால் அத்தகைய உபரி வருமானத்தின் யாதொரு பாகத்தை உபயோகித்துக்கொள்ள லாம்.

ஆனால், தர்மகர்த்தா இப்பிரிவின்படி உபரிநிதியைப் பயன்படுத்தும்போது 66-வது பிரிவில் கண்ட (1) உட்பிரிவின் (a) முதல் (g) வரையிலுள்ள இனங்களில் குறிப்பிட் டுள்ள காரியங்களுக்குமுன் சலுகை கொடுக்க வேண்டும்;

மேலும், அப்படி அனுமதி கொடுப்ப தற்கு முன்னால், ஆணையரானவர், மேற்படி தர்மகர்த்தாவின் உத்தேசத்தைப் பற்றிய விவரங்களை நிர்ணயிக்கப்படக்கூடிய வித மாகப் பிரசித்தம் செய்யவும் அது சம்பந்த மாக ஆட்சேபணைகளையும் அபிப்பிராயக் குறிப்புகளையும் அனுப்பும்படிக் கேட்கப்பற் றுள்ள நபர்களிடமிருந்து வந்து சேரக்கூடிய சகல ஆட்சேபணைகளையும் அபிப்பிராயக் குறிப்புக்களையும் ஆலோசிக்கவும் வேண்டும்;

அன்றியும், மேற்சொன்ன அனுமதியை நிர்ணயிக்கப்படக்கூடிய விதமாகப் பிரசித் தம் செய்யவேண்டும்;

ஆயினும், இப் பிரிவில் அடங்கியுள்ள தெதுவும், ஒரு மடத்தின் அல்லது ஒரு மடத் தோடு சேர்க்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கட்டளையின் தர்மகர்த்தா, இந்தப் பிரிவில் குறிப்பிட்டுள்ள உபரித் தொகையை அவர் தகுதியெனக் கருதக்கூடிய விதமாக உபயோ கிப்பதைத் தடைசெய்யலாகாது.

37. அப்பீல்கள்:—ஆணையரின் 36-வது பிரிவின்படிக்கான தீர்மானம் ஒன்றினால் துன்பமடைந்த யாதொரு நபர், மேற்படி தீர் மானத்தின் தேதியிலிருந்து தொண்ணூறு தினங்களுக்குள் அரசாங்கத்தாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

38. சில விஷயங்களில் கைங்கரியம் அல் லது தருமத்தை நிறைவேற்றுவது:—(1) யாதொரு மடம் அல்லது கோயிலைச் சேர்ந்த குறிப் பிட்ட கட்டளை சொத்தின்மேல் ஏற்பட்ட ஒரு பொறுப்பாக மாத்திரமே இருந்து, ஷை தருமம் அல்லது கைங்கரியம் கிரமப்படி நிறைவேற்றுவது தவறிப்போயிருந்தால், சம் பந்தப்பட்ட மடம் அல்லது கோயிலின் தர்ம கர்த்தாவானவர், எந்தச் சொத்தின்பேரில் மேற்படி கட்டளை ஒரு பொறுப்பாக இருக் கிறதோ அந்தச் சொத்தை சுவாதீனத்தி லுடைய நபரை, மேற்படி தருமத்தையாவது கைங்கரியத்தையாவது மற்றப்படி செய்விப் பதற்குப் பிடித்த அல்லது வெகுசாய்ப் பிடிக் கக்கூடிய செலவுகளைக் கொடுக்கும்படிக் கேட்கலாம். கேட்டுக்கொண்டுள்ளபடி தொகை செலுத்த மேற்படி நபர் தவறிப் போனால் மடத்தோடு சேர்க்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கட்டளை விஷயத்தில் ஆணையர், ஒரு கோயிலோடு சேர்க்கப்பட்ட ஒரு குறிப் பிட்ட கட்டளையின் விஷயத்தில் துணை ஆணையர் மேற்படி தர்மகர்த்தா விண்ணப் பம் செய்து கொள்வதன்பேரிலும் சுவாதீ னத்தையுடைய நபருக்கு, அது விஷயமாய்த் தமது ஆட்சேபனைகளைச் சொல்லிக்கொள்ள நியாயமானதோர் அவகாசம் ஏற்படுத்திக் கொடுத்த பிறகும், மேற்படி தர்மகர்த்தாவுக் குச் செலுத்தப்படத்தக்க தொகையை உத்தரவு பிறப்பித்து அதன் மூலமாய் நிச்ச யிக்கலாம்.

(2) மேற்படி கட்டளை ஒரு பொறுப் பாக ஏற்பட்டுள்ள சொத்தின் சுவாதீன முடைய நபர் மேற்படி தருமம் அல்லது

கைங்கரியத்தைச் செய்யச் சட்டப்படி உத்தரவாதியாயுள்ள நபராயிராதிருந்து, யாதொரு தொகை மேலே கண்டபடி, சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் நபரால் செலுத்தப்பட்டால் அல்லது அவரிடமிருந்து வசூலிக்கப்பட்டால் மடத்தோடு சேர்க்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட நிதியேற்பாட்டின் விஷயத்தில் ஆணையர் ஒரு கோயிலோடு சேர்க்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கட்டளையின் விஷயத்தில் துணை ஆணையர் சுவாதீனத்தையுடைய நபர் விண்ணப்பம் செய்து கொள்வதன்பேரிலும் சட்டப்படி உத்தரவாதியாயுள்ள நபருக்கு அது விஷயமாய்த் தமது ஆட்சேபனைகளைச் சொல்லிக்கொள்ள நியாயமானதோர் அவகாசம் ஏற்படுத்திக் கொடுத்த பிறகும் சுவாதீனத்தையுடைய நபருக்கு அப்படிச் செலுத்தப்பட்ட அல்லது வசூலிக்கப்பட்ட தொகையைச் செலுத்தும்படி சட்டப்படி உத்தரவாதியாயுள்ள நபருக்கு உத்தரவு பிறப்பித்து அதன் மூலமாய்க் கட்டளையிடலாம்.

*(3)* *(1)* உட்பிரிவின்படியாவது *(2)* உட்பிரிவின்படியாவது ஆணையர் அல்லது துணை ஆணையர் பிறப்பித்த உத்தரவின் பேரில், பாதிக்கப்பட்ட ட்ரஸ்டி அல்லது நபர் அவ்வுத்தரவு தமக்குத் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதத்துக்குள் அவ்வுத்தரவின்பேரில் சந்தர்ப்பத்துக்கேற்ப அரசாங்கத்தாருக்கு அல்லது ஆணையருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம்.

அரசாங்கத்தாரால் அல்லது ஆணையரால் அப்பீலின்பேரில் பிறப்பித்த உத்தரவானது முடிவானதாகும்.

*(4)* சந்தர்ப்பத்துக் கேற்றபடி ஷை தர்மகர்த்தா (1) உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கும் மாவட்டத்தின் கலெக்டருக்கு விண்ணப்பம் செய்துகொள்வதன் பேரிலாவது மேற்படி சுவாதீனத்தையுடைய நபர் சட்டப்படி உத்தரவாதியாயுள்ளவருடைய யாதொரு சொத்திற்கும் மாவட்டத்தின் கலெக்டருக்கு விண்ணப்பம் செய்து கொள்வதின் பேரிலாவது மேற்படி கலெக்டரானவர் சந்தர்ப்பத்துக்கேற்றபடி சுவாதீனத்தையுடைய நபர் அல்லது சட்டப்படி உத்தரவாதியாயுள்ள நபரிடமிருந்து அப்பீல் ஏதாகிலும் இருந்தால் அதன்படித் திருத்தியமைக்கப்பட்டபடியுள்ளதும் ஆணையர் அல்லது துணை ஆணையரின் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான தொகையையும், அப்படி வசூலிப்பதற்கான செலவுகளையும் அவை நிலவரி பாக்கியாயிருந்தால் எப்படியோ அப்படியே வசூலித்து, சந்தர்ப்பத்துக்கேற்றபடி தர்மகர்த்தாவுக்காவது சுவாதீனத்தையுடைய நபருக்காவது சேரவேண்டிய தொகையை அவரிடம் கொடுக்கவேண்டும்.

*39.* **குறிப்பிட்ட கட்டளைகளின் தர்மகர்த்தாக்களின் பேரில் மடம் அல்லது கோவிலின் தர்மகர்த்தாவுக்குள்ள அதிகாரம்.**—யாதொரு மடம் அல்லது கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு கைங்கரியம் அல்லது தருமம் செய்யப்படுவதற்காக அளிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கட்டளையின் தர்மகர்த்தா ஷை மடம் அல்லது கோயிலின் தர்மகர்த்தாவுடைய பொதுவான மேற்பார்வைக்குட்பட்டு அந்தக் கைங்கரியம் அல்லது தருமத்தைச் செய்ய வேண்டியது மல்லாமல், அவர் பிறப்பிக்கும் நியாயமான சகல உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் வேண்டும்.

*40.* **ஒரு கோயிலின் கைங்கரியம் செய்வதென்னும் திட்டத்தின் பேரில் ஒரு தேவதாசி கைப்பற்றில் வைத்திருக்கும் நிலம் முதலியவைகளை ஊழிய நிபந்தனையினின்றும் நிவர்த்தி செய்வது.**—*(1)* (a) (i). யாதொரு கோயிலில் ஒரு தேவதாசியால் செய்யப்படும் யாதொரு கைங்கரியத்துக்கான பிரதிபலன் அந்தக் கைங்கரியம் விஷயமாய் அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்ட அல்லது இருந்து வரும்படிச் செய்யப்பட்ட அல்லது அதனுடன் சேர்க்கப்பட்ட நிலங்களாயிருந்தால், அரசாங்கத்தார் க்விட்ரென்ட் என்னும் வரி விதிப்பதன் மூலமாய் ஷை நிலங்களை ஊழிய நிபந்தனையினின்றும் நிவர்த்தி செய்ய வேண்டும்.

(ii) ஷை கைங்கர்யத்துக்கான பிரதிபலன் மேலேகண்டபடி கொடுக்கப்பட்ட அல்லது இருந்துவரும்படிச் செய்யப்பட்ட நிலவருமான ஒப்படையாயிருந்தால் அரசாங்கத்தார் ஷை வருமானத்தின் ஒப்படையை ஊழிய நிபந்தனையினின்றும் நிவர்த்தி செய்ய வேண்டும் :

(தொடரும்)

உ

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த

# திருப்பள்ளியெழுச்சி

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரும் அறியார்
இதுஅவன் திருவரு இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

[தேவர்கள் பிரமமானது கனியின் சுவைபோலும் அமுதம் போலும் எனவும், அது அறிவதற்கு முடியாதெனவும் அறிதற்கெளிதாமெனவும் வாதித்து அதனை அறியாநிலையிலிருப்பர். "இதுவே அவன் திருவடிவம், இவனே அப்பெருமான்" என்று நாங்கள் சொல்லும்படியாக எங்களை ஆட்கொள்ள எழுந்தருளிய திருவுத்தரகோச மங்கையிலுறைபவனே, திருப்பெருந்துறைக்கோவே. எங்களை ஏவல் கொள்ளும் முறை எதுவோ, அதனை நாங்கள் கேட்டு நடப்போம். எமது தலைவனே! திருப்பள்ளி யெழுக.]

—※—

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆண்டாள் அருளிச்செய்த

# திருப்பாவை

கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா வுன்றன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடையு டுப்போ மதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

[தன்னை ஆசிரயியாதவர்களை வெல்லும் குணமுடைய கோவிந்தனே! நாங்கள் உன்னைப் பாடிப் பறைகொண்டு பெறும்படியான சம்மானமாவது - நாடு புகழும்படியாக கையணி, தோள்வளை, தோடு, கர்ணப்பூ, பாடகம் என்ற பலவகை ஆபரணங்களும் அணிவோம். ஆடை யுடுப்போம். பிறகு, பாற் சோறு மூடும்படியாக நெய்பெய்து முழங்கையால் வழியும்படியாக, நீயும் நாங்களும் கூடியிருந்து சுகிக்க வேண்டும்.]

## அடியவர் திருநட்சத்திரங்கள்


சார்வரி—மார்கழி

**சைவம்**


5உ—சாக்கியநாயனார்
12உ—வாயிலார்நாயனார்
18உ—சடையநாயனார்
25உ—இயற்பகைநாயனார்
28உ—மானக்கஞ்சாறநாயனார்

**வைணவம்**

4உ—தொண்டரடிப்பொடியாழ்வார்



நாகர்கோயில் முன்தோற்றம்



நாகதுவாரபாலகர்–நாகர்கோயில்

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-6. Printed at Paari Achakam, 127, Broadway Madras-1